

# மோகனம்

## மருதூர் கொத்தன் கவிதைகள்

மருதூர்க்கொத்தன் கவிதைகள்

# மோகனம்

மோகனம் - மருதூர்க்கொத்தன் கவிதைகள்
ISBN: 978-624-5513-57-4

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 2023 ஜனவரி |
| வெளியீடு | : | மருதூர்க்கொத்தன் அறக்கட்டளை |
| பதிப்புரிமை | : | ஆரிப் இஸ்மாயில் |
| முகவரி | : | 517 ஸம் ஸம் வீதி<br>மருதமுனை 03 |
| அட்டைப்படம் | : | நவாஸ் சௌபி |
| அச்சகம் | : | Excellent Print<br>Sainthamaruthu<br>077 6401296 |
| பக்கங்கள் | : | 200 |

தாய் ஹபீபா உம்மா அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

# பதிப்புரை

தந்தையின் மரணத்தின் பின் அவரது ஆக்கங்களின் மூலப் பிரதிகளை பொறுப்பாகவும், பாதுகாப்பாகவும் இன்றுவரை வைத்துள்ளமை காரணமாக முதலில் இறைவனுக்கும், இரண்டாவதாக தாய்க்கும் மற்றும் இளைய சகோதரிக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவை பல புத்தகங்களாக தொகுக்கப்படக்கூடியவை.

பல தரமான ஆக்கங்களைப் படைத்திருந்தும், ஆரம்ப காலங்களில் பொருளாதார இறுக்கம் காரணமாகவும், அவரது இறுதிக்காலத்தில் நோயின் தீவிரம் காரணமாகவும் அவைகள் நூலுருவாக்கப்படாமலே போய்விட்டன.

மருதூர்க்கொத்தன் இலக்கிய உலகில் நன்கறியப்பட்டவர். வளர்த்து ஆளாக்கிய அன்புக்குரிய தந்தையாக, கற்பித்த ஆசானாக, பாடசாலை நாட்களில் நடிகனாக்கிய நெறியாளராகப் பார்ப்பதைவிட எனது வாசக உலகத்திற்குள் நுழைந்து இன்றளவும் உயிர்ப்புடன் இருக்கும் எனது அபிமானப் படைப்பாளியாகவே அதிகம் உணர்கின்றேன்.

தமிழிலக்கியப் பரப்பின் பொதுவெளியில் அதீதமாய்க் கவனம் கொள்ளப்பட்டவர். சிறுகதை எழுத்தாளராகவே அறியப்படினும் அவர் ஒரு ‘பன்முக ஆளுமை’. கவிதை, நெடுங்கவிதை, காவியம், உருவகக் கதை, நாவல், இலக்கிய விமர்சனம், நாடகம், திறனாய்வு, ஓவியம், மற்றும் இசைப் பாடல்கள் எனும் துறைகளிலும் மிளிர்ந்தவர்.

இலக்கியம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக படைக்கப்படல் வேண்டும் என்றும் சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள் எவ்வாறு வாழ்க்கையை தாக்கமுறச் செய்கின்றன என்பதையும் நடைமுறை வாழ்க்கைக்கும் சமய, சமூக விதிகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு களையும் தான்சார்ந்த வட்டார மொழியினூடாகவும் எழுதியுள்ளார். அவரது தனித்துவமான மொழிநடை காரணமாக கதைகள்கூட கவிதை படித்த உணர்வையே ஏற்படுத்தக்கூடியவை

ஏற்கனவே மூன்று நூல்கள் ‘காவியத் தலைவன்’ , ‘மருதூர்க்கொத்தன் கதைகள்’, மற்றும் ‘?‘ என்ற தலைப்புகளில் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் பல புத்தகங்களாக்கப்படக்கூடியவற்றில் முதன்மையாக ‘மோகனம்’ கவிதை நூலை ‘மருதூர்க்கொத்தன் அறக் கட்டளை’ ஊடாக வெளியிடுவதில் பெருமை கொள்கின்றோம்.

கோப்பிலும், கைவசமிருந்தவைகளையும் உள்ளடக்கியே இக்கவிதை நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பலது விடுபட்டிருக்கவும் கூடும் குறிப்பாக பத்துப்பத்து கவிதைகள் முளுவதும் கிடைக்காதது துரதிஸ்டமே என்பேன். படைப்பாளிகளுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்! உங்களது ஆயுட்காலத்தினுள், முடிந்தவரை உங்கள் படைப்புகளை புத்தகங்கள் ஆக்கிவிடப்பாருங்கள். எவ்வளவு அசௌகரியங்களை எதிர்நோக் கினேன் என்பது விபரிக்க முடியாதவை.

வடிவமைப்பு அச்சாக்கம் என்பவற்றில் உதவிய அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மற்றும் கொத்தன் படைப்புகள் பற்றிய வெட்டுமுகத்தை தந்துதவிய ஓய்வுநிலை பேராசிரியர் செ.யோகராசா அவர்களுக்கும், இலக்கிய விமர்சகர் ஜெஸ்மி மூஸா அவர்களுக்கும், அட்டைப்படம் வடிவமைத்த நவாஸ்சௌபி அவர்களுக்கும், இன்றுவரை உறுதுணையாகவிருக்கும் இளைய சாகோதரியின் கணவர் கலில் கபூர் அவர்களுக்கும், எனது மனைவி மக்களுக்கும் மேலும் சகல விதத்திலும் உதவிய அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

ஆரிப் இஸ்மாயில்.

ariff.ismail64@gmail.com

# அணிந்துரை

ஈழத்து நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, நவீன கவிதை, புதுக் கவிதை முதலான ஆய்வுகள் எவையும் திருப்தி தரக்கூடிய வகையில் முழுமை அடைய முடியாது என்பது எனது அபிப்பிராயமாகும். இதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. ஒரு சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடுவது அவசியமானது.

முதல் பதிப்பு வெளிவந்து மிக நீண்டகாலமாக அதுபற்றி அறிய முடியாத சூழலில் இரண்டாம் பதிப்பைக் கண்ட பின்னரே குறிப்பிட்ட படைப்பின் முக்கியத்துவத்தை உணருகின்ற அவல நிலையும் இங்கு உள்ளது.

உதாரணமாக தி.த.சரவணமுத்துப்பிள்ளை 1985ல் வெளியிட்ட "மோகனாங்கி" எனப்படும் மிக முக்கியமான வரலாற்று நாவல் பற்றி ஆய்வாளர்கள் எவரும் சரியாக அறிந்திருக்கவில்லை. இதற்கான காரணம் முதற்பதிப்பு கிடைக்காமையே ஆகும். இந்நிலையில் பேராசிரியர் செல்வநாயகம் தொடக்கம் அருணாச்சலம் வரையிலான ஆய்வாளர்கள் இந்நாவல் பற்றித் தவறான கருத்துக்களை முன் வைத்துள்ளனர் என்பது அதன் மீள்பதிப்பு 2018ல் வந்த பின்னரே அறிய முடிந்தது.

தவிர, பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தமை, இயற்கை அனர்த்தங்கள், செயற்கை அனர்த்தங்கள், நிதி நெருக்கடி, அக்கறையின்மை, பேணப்படாதிருந்தமை முதலியவற்றால் நூலுருப் பெறாது காணப்படுகின்றன. சுதந்திரன் சிறுகதைத் திரட்டை அவதானித்து பார்த்தால் கிழக்கு இலங்கை எழுத்தாளர் பலரின் ஆக்கங்கள் இன்னும் வெளிவராமல் இருப்பது தெரிகிறது. இத்தகைய எழுத்தாளர்களுள் ஒருவர்தான் பித்தன் ஷா. 1948 இல் சிறுகதை எழுதத் தொடங்கிய அவர் 1994 ஆம் ஆண்டு மரணப் படுக்கையில் இருக்கும் போதுதான் 'புறூப்' பார்க்காத தமது சிறுகதைத் தொகுப்பைப் பார்க்க நேர்ந்தது. சமூக நோக்குடன் செயற்பட்ட மல்லிகைப் பந்தல் டொமினிக் ஜீவாவின் ஊடாகவே அவரது சிறுகதைகள் நூலுருப் பெற்றதும், ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த எழுத்தாளர் என்பதையும் அறிய நேர்ந்தது.

மருதூர்க்கொத்தனது கவிதைகள் பலவற்றை அவரே தொகுத்து வைத்திருந்துள்ளார். அவற்றுள் சில வெளிவராதனவாக உள்ளன. வேறுபல, வெளிவந்தவற்றின் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. அவை நூலுருப் பெறும் காலம் அவர் மகன் ஆரிப் மூலமாக இப்போது தான் கைகூடியுள்ளது.

கிடைத்துள்ள அவரது கவிதை ஆக்கங்களை நோக்கும்போது, ஆச்சரியந்தரும் விடயம் யாதெனில் ஐம்பதுகளிலே அவரது கவிதையுலகப் பிரவேசம் நிகழ்ந்துள்ளன என்பதேயாகும். 1950ல் எழுதிய முதலாவது இலக்கிய முயற்சி என்று கவிஞரது குறிப்பு எழுதப்பட்டுள்ள அக்கவிதை ‘நிலவு’ பற்றியது. அதன் ஆரம்பப் பகுதி இது,

*நீல வான வீதியிலே*
*நீந்தும் வெள்ளை நிலவே வா - தினம்*
*நீந்தும் வெள்ளை நிலவே வா.*

*பட்டு மணல்மேல் வாருகலால் - நாம்*
*பரவிக் கோலம் இட்டிருக்கும்*
*முற்றம் என்னும் மெத்தையின் மேல்*
*மெல்ல அமர்ந்து பேசிடலாம் - பல*
*பல செல்லக் கதைகள் கூறிடலாம.*

தொடர்ந்துவரும் கவிஞரது கற்பனைகள் ஏனைய கவிஞர்கள் பாடியுள்ள நிலவுக் கவிதைகளிலிருந்து வித்தியாசமான தடத்திலே செல்கின்ற தென்பதை மேலுள்ள பகுதியைவிட பின்வரும் பகுதி சிறப்பாக வெளிப்படுத்துகின்றது:

*கீரை கடைந்து வைத்திருக்கு -வரால்*
*மீனும் பொரித்துக் காத்திருக்கு - நல்*
*ஆரல் கறியும் சமைத்திருக்கு*
*அருந்த நீயும் ஓடிவா - எம்*
*விருந்தின் அருமை நாடி வா*

முதற்கூறியவாறு கவிஞரது கவிதையுலகப் பிரவேசம் ஐம்பதுகளிலே நிகழ்ந்திருக்கிறது என்கின்றபோது அது ஈழத்துக்கவிதை வரலாற்றில் கவிஞருக்கு முக்கியமானதொரு இடத்தை வழங்குகின்றது என்பது கவனத்துக்குரியது. அதாவது முஸ்லிம் கவிஞர்களது நவீன கவிதை யுலகப் பிரவேசம் ஐம்பதுகளளவில் நிகழ்ந்தது என்றும் அவ்விதத்திலே புரட்சிக்கமால், அண்ணல், யுவன் ஆகியோர் முதன்மை ஆனவர் வரிசையில் மருதூர்க்கொத்தனும் இணைகின்றார் என்பதனை இங்கு நினைவுகூற வேண்டியுள்ளது.

ஐம்பதுகளிலே மொழியுணர்ச்சிக் கவிதைப்போக்கு முக்கியம் பெற்றி ருந்த காலமாகும் இராஜபாரதி, காசிஆனந்தன், அக்கரையூர் அமரன், பாண்டியூரான், தொடக்கம் புரட்சிக்கமால், அண்ணல் வரை வெவ்வேறு நோக்கிலும், போக்கிலும் தமது தமிழ்ப் பற்றை வெளிப்படுத்திய சூழலில் மருதூர்க்கொத்தனது கவிதையொன்று பின்வருமாறு ஆரம்பிக் கின்றது,

# தூவக்கு பணியை

*வீதி அளப்பதிலும் சாதிழப்பலிலும்*
*வீரம் இருக்கவில்லைத் தம்பி இங்கு*
*நாதி இழந்த இனம் நீதி பெறுவதற்கு நாளை இருக்குதுனை நம்பி.*
……………………………………..

*ஆழக்கடலினடி மூழ்கிக் கிடந்தமுத்தை சோளம் குவித்தவர்கள்*
*முன்னே - இன்று நீளக்கடல் கிடந்தும் தோளிற்பலமிருந்தும்*
*ஆளக்கொடுத்ததுவும் என்னே.*
…………………………………………

*மேடை முழங்கியென பீடு ஒழிந்திடுமோ வாடைக் கொதுங்க*
*ஒரு வீடு - கொடு காடைத் தனங்களுக்குப் பாடை*
*மைக்கவின்றே ஏடா! துணிந்துடனே தேடு.*

(சுதந்திரன் 26-04-1959)

எனினும் மேற்கூறிய கவிதைப் பகுதிகளுட்பட மொழியுணர்ச்சிப் போக்கினை அடியொற்றியெழுந்த கவிஞரது கவிதைகள் வெறும் உணர்ச்சிக் கொந்தளிப்பின் வெளிப்பாடாக அன்றி ஆக்க பூர்வமான முறையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அறிவியல் நோக்கில் வெளிப்பட்ட இ.முருகையனது மொழியுணர்ச்சிக் கவிதைப் போக்குடன் மருதூர்க் கொத்தனது மொழியுணர்ச்சி கவிதைப் போக்கு இன்னொரு வழியில் இணைந்து செல்கிறது என்றும் கூறத்தோன்றுகிறது

ஏறத்தாழ அறுபதுகளிலே முற்போக்குக் கவிதைப்போக்கு முனைப்புற்ற சூழலில் மருதூர்க்கொத்தனும் அப்போக்கினை வெளிப்படுத்தும் கவிதைகள் எழுத முற்படுகின்றார். இவ்விதத்திலே ‘‘தொழிலாளர் உலகம்’’ என்ற உப தலைப்பு இட்டு ‘‘சிறிய மகன் செகம் வெல்வான்’’ முக்கியமானதொரு கவிதையாகின்றது. மருதூர்க்கொத்தனது கவித் திறனை புரிந்துகொள்ளும் நோக்குடன் முழுமையாகத் தரப்படுகின்றது.

*தறியிலே மங்கமாயும்*
*தம்பிலெவ்வைக் காக்கா நீ,*
*இறால்காய்ந்த கருவாடாய்*
*ஏன் வளைந்து போனாய்கா?*

*கீழ்வானில் சூரியனும்*
*கிளர்ந்தெழும்பும் வெள்ளணையில்*
*பழம்பாயில் கிடந்த உடல்*
*பதறி எழுந்திடுவாய்*
*பழம்பாயில் கிடந்த நீ*
*பதறியெழுந்ததுமே*
*முகம் கழுவ மறந்திருப்பாய்*
*ஆனாலும் நெய்கின்ற நீ நெல்லும்*
*அகம்போக மறந்ததன்*
*தில்லையே! கருவே சொன்னதில்*
*போனதுமே தறியின்மேல்*
*பொட்டணவே அமர்ந்திடுவாய்*
*பாய்புலியின் பாய்ச்சலுடன்*
*பகலெல்லாம் நெய்திடுவாய்*
*நீநெய்த பிடவைகளால்*
*நாட்டிலுள்ள மாந்தரெல்லாம்*
*மானத்தைக் காக்கின்றார்*
*மாபெரிய தொண்டன்நீ*

*உண்குடிசை அம்மணமாய்*
*ஒழுக்கெடுத்துக் கிடப்பதனை*
*எண்ணியுமே பாராமல்*
*ஏன் நாளைக் கழிக்கின்றாய்?*
*ஒழுங்காய் அடுப்பெரிந்தால்*
*ஊர்நாய்கள் கூதலினால்*
*நலமிழந்து போகமென்ற*
*நல்லமனம் ஏன் கொண்டாய்?*
*நான்பெற்ற பிள்ளைகளே*
*நாட்டுக்குப் பெரும்பாலும்*
*அவர்கள் பெறத் தொடங்கிவிட்டால்*
*அதைநாடு தாங்காது*
*என்றெண்ணித் தானே*
*உன்குமர்கள் திருமணத்தை*
*எண்ணியுமே பாராமல்*
*ஓட்டுகிறாய் வாழ்நாளை?*

*உன்னுடைய முதலாளி*
*ஊரையெலாம் வாங்குகிறார்*
*பொன்பொருள்கள் தேடுவதில்*
*பெரும்புரட்சி பண்ணுகிறார்*
*அவருக்கு நூல் சப்ளை*
*செய்பவர்கள் ஆண்டவனைச்*

*சவாலுக்கு அழைத்திங்கு*
*சொர்க்கங்கள் காட்டுகிறார்.*
*எல்லாம் அவர்தலையின் 'நஸீப்'*
*என்றே காலத்தை*
*அல்லாடிக் கழிக்கின்றாய்*
*ஆனாலும் உன்மகனே*
*பொல்லாத சமூகத்தைப்*
*புரட்டிவிட்டு அதனிடத்தே*
*நல்லாதோர் அமைப்பை*
*நாட்டத் துடிக்கின்றான்.*
*தறியிலே மங்கமாயும்*
*தம்பிலெவ்வைக் காக்க உன்*
*சிறியமகன் நிசமாய் இச்*
*செகம் வெல்லப்போறான்கா!*
*(1975)*

''பயணம்'' என்ற கவிதையையும் இவ்வேளை முழுமையாகக் கவனிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் நீண்ட பயணம் செய்ய வேண்டிய உலகத் தெழிலாளர் குரல்களாக அக்கவிதை அமைந்திருப்பது ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது. யாப்போசையைப் பயன்படுத்திவந்த கவிஞர் பேச் சோசையைத் திறன்படக் கையாள்கின்ற இலாவகமும் இக்கவிதை யூடாகப் புலப்படுகின்றது. இனி கவிதையைக் கவனிப்போம்,

*பாதையில் கற்கள் நெருக்கென்று*
*பாய்ந்துடலை வாதைக் கிழுக்கின்ற*
*வம்புநிறை ஒற்றையடிப் பாதையிலே*
*எங்கள் பயணந் தொடர்கிறது.*

*சாணை பிடித்த ஊசிகளாய்*
*முள்ளடர்ந்த கானகந்தான்*
*சிறாய்ப்பெடுக்கும் கவலை சிறிதுமின்றி*
*எங்களது கால்களை*
*எட்டியெட்டிப் போடுகிறோம்.*

*வேங்கைகள் சிங்கங்கள் யானைகள்*
*குளுக்கடாக்கள் ஆங்காரங் கொண்டு*
*அலைகின்ற காட்டுவழி*
*நாங்கள் துணிந்து நடையாய் நடக்கின்றோம்.*
*நீங்கள்*
*எமைப்பார்த்து ஏனையா கவல்கின்றீர்*
*எங்களில் கழிவிரக்கம்*
*உள்ளவர்போல் நடிக்கின்றீர்*

*நாங்கள் பயணம்*
*நடப்பதிலே என்னபிழை?*
*உங்கள் தொடைகள்*
*உதறல்எடுப்பதையும்*
*உங்கள் இதயங்கள்*
*ஓங்கி அடிப்பதையும்*
*எங்களால் காண இயல்கிறது.*

*அதற்காக*
*நாங்கள் பயந்து நடைதளரப் போவதில்லை*
*எங்களுக்கு முன்னே*
*எத்தனையோ பேர் போனார்*
*தங்கள் இரத்தம் தரைநனைக்கும்*
*படிசென்றார்*
*போனதுந்தான் போனார்கள்*
*போனவழி தென்பட்ட*
*பூங்காவில் தங்கிப் புளகித்து*
*சங்கீத நாற்காலி*
*மற்றும் விளையாட்டில் மாட்டி -விழித்தார்கள்*
*மாட்டி விழித்த மேதைகளை*
*அன்றே நீர் காட்டி*
*எமைப்பார்த்துக் கலகலத்துச் சிரிக்கின்றீர*
*நாங்கள் அதையும் நன்கறிவோம்*
*நண்பர்களே*
*நாங்கள் அதையும்*
*நன்கறிந்த பின்னேதான்*
*காட்டு இருளிடையே*
*கண் சிமிட்டும் மின்மினியின்*
*கூட்டு வெளிச்சத்தில்*
*குறிபார்த்துக் குதிகொண்டு*
*நீட்டு மரங்கள் நெருங்கி*
*இடர் செய்யும் காட்டுவழியே*
*கடுகி நடக்கின்றோம்.- (மல்லிகை 1975)*

அன்றாட அனுபவங்களை வெளிப்படுத்தும் பாங்கிலான கவிதைகளும் மருதூர்க்கொத்தனால் எழுதப்பட்டுள்ளன. கந்தோர் சிற்றுண்டிச் சாலை யில் நடைபெற்ற கைகலப்பு பற்றிய ''காதில் விழுந்த கனல்'' என்ற நெடுங்கவிதை இவ்விதத்தில் கவனிக்கப்படத்தக்கது.

*எங்களது கந்தோர்ச்*
*சிற்றுண்டிச் சாலைக் கதவுகள்*
*விரியத் திறந்தே உள்ளன.*

*கதவுகள்*
*விரியத் திறந்திருப்பது*
*வருகை தருவோர் வசதிக்காகவே*
*இங்குள ஊழியர்*
*தாகமும் பசியும்*
*தணிக்கவே*
*உணவுச் சாலையும் உளது.*
*என்பது உண்மையே!*
*எனினும்*

என்று தொடங்கும் அக்கவிதை, ஏழை வாத்தியார் ஒருவருக்கும் கிளாக்கர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட சண்டை பற்றியும் அது காரணமாக சீட்டுக் கிழிக்கப்பட்ட வேலைக்காரச் சிறுவன் பற்றியும் அவனது தொழில் தனக்குக் கிடைத்தமை பற்றியும் அங்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றியும் விரிவாகப் பேசுகின்றது.

ஈழத்துக் கவிதை மரபிலே வாழ்த்துரை, இரங்கல்லுரைக் கவிதை களுக்கும் இடமுள்ளன. மருதூர்க்கொத்தனும் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீன், சுவாமி விபுலானந்தர், நெல்சன் மண்டேலா முதலானோர் பற்றியெல்லாம் எழுதியிருக்கின்றார். கவியரங்கக் கவிதைகளும் எழுதியிருக்கின்றார். தான் கடமையாற்றிய பல பாடசாலைகளின் பாடசாலைக்கீதங்களையும், மெல்லிசைப் பாடல் களும், இயற்றியிருக்கின்றார் விரிவஞ்சி முன்னவற்றிற்கு எடுத்துக் காட்டுக்கள் தருவதைத் தவிர்த்து மெல்லிசைப் பாடல்கள் பற்றி மட்டும் ஒரு உதாரணம் கவனிப்போம்

## விண்புகழ் கொண்ட தமிழ்

***பல்லவி***

*எங்கள் தமிழ்மொழி - எங்கள் தமிழ்மொழி*
*என்றிசை பாடிடுவோம் - இன்பம்*
*பொங்கவே பாடிடுவோம்*

***அனுபல்லவி***

*பால்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு என்றே*
*வெல்லத் தமிழ் படிப்போம் - நாம்*
*உள்ள மடை திறப்போம்*

***சரணம்***

*பாண்டியன் தென்கடல் நீந்தி மகிழ்ந்தவன்*
*பாங்குடன் சேரனின் மலையில் தவழ்ந்தவள்*
*மாண்புடன் சோழனின் காவிரி ஆடி*
*விண்புகழ் கொண்டவளே*

*கம்பனின் நாவில் களிநட மாடி*
*காவியச் சிலம்பில் கலை வளங் கூடி*
*உம்பரும் போற்றிடும் வள்ளுவன் குறளால்*
*உலகினை வென்றவளே*
*மண்ணில் உயர் புகழ் கொண்டவளே*

*வண்டமிழ்ச சீறா தேனினைப் பருகி*
*வளமார் தேம்பா வணியினில் மூழ்கி*
*மண்டிணி உலகின் மதத்தின ரெல்லாம்*
*மகிழ்ந்து வளர்ந்தவளே*
*மண்ணில் மழையென வந்தவளே*

*பாரதி செய்த புதுமையில் விளைந்து*
*பண்புடன் புதுமைப் பித்தனில் மலர்ந்து*
*நூறாயிரம் நூறாயிரம் கலைஞர்*
*ஊணர்வில் கலந்தவளே - எங்கள்*
*ஊயிரென வந்தவளே*

தமிழிலக்கிய மரபுகளை நன்கறிந்தவரான மருதூர்க்கொத்தன், தனது கவியாற்றலை முற்றிலும் இன்னொரு புதியமுறையிலும் வெளிப்படுத்தி யிருக்கின்றார். ஒரு பொருள் மீது பப்பத்துப் பாடல்கள் பாடும் தமிழி லக்கிய மரபொன்று உள்ளது. 'ஐங்குறுநூறு' என்ற சங்க இலக்கிய நூல் அம்மரபைக் கொண்டது. (வேட்கைப்பத்து, என்றவாறு எழுந்த பாடல்கள் அத்தகையன.) பல்லவர்கால பகுதி இலக்கிய மரபுவழியில் மாணிக்கவாசகரும் அவ்வாறு (பிடித்தபத்து, உயிருண்ணிப்பத்து, குழைத்தபத்து என்றவாறு) பாடியிருக்கின்றார். நவீன கவிஞர்கள் சிலரும் இம்மரபைப் பின்பற்றி உள்ளனர். அந்தவிதத்தில் புதுமையான முறையில் இம்மரபைப் பின்பற்றிய ஈழத்துக் கவிஞர், மருதூர்க் கொத்தன் மட்டுமே ஆகலாம். ''நபிப்பத்து'' ''இறைப்பத்து ''சூட்சுமப்பத்து'' (ஆன்மீக நோக்கு) ''ஊர்ப்பத்து'' (சம்மாந்துறை, மருதமுனை முதலான பத்து ஊர்கள்) ''மேலாகப்பத்து'' (படைப்பாளர்கள் மீதான மோகம்) ''போர்ப்பத்து'',''மடமைப்பத்து'', ''நன்றிப்பத்து'' என்ற தலைப்புகளிலே அவர் பாடியிருக்கின்றார்.முதலிரு பத்துகளும் தவிர ஏனையவை புதிய

உள்ளடக்கம் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது போர்ப்பத்து பாடல்களில் ஒன்று மட்டும் இங்கே தரப்படுகின்றது.

## போர்ப்பத்து - 06

*இந்துவாய் பிறந்தாலும் இஸ்லாம்மத பாடத்தை*
*எழுதியதில் சித்திகண்டோன்*
*இஸ்லாமிய மக்கள் தம்மோடு உறவாடி*
*அவர்மனம் வாழ்ந்த அன்பன்.*
*செந்தமிழில் நல்ல இலக்கியம் செய்வோரைச்*
*சிரம்தாழ்த்தி வணங்கும் சீலன்.*
*சித்தம் முழுவதும் இலக்கியச் சுவைதனைச்*
*சேமித்து வாழ்ந்த ரசிகன்.*
*சந்ததமும் இன உறவைச் சாதிக்கும் நற்பணியில்*
*ஆனந்தம் கண்டுவாழ்ந்தோன்.*
*அவன்பயணம் செய்வண்டி அமர்க்களம்*
*ஒன்றிடையே அகப்பட்ட கொடியவேளை*
*பாந்தமுடன் ஓர்சிறுமி உயிர்காக்கத் தன்னுயிரை*
*பரிவுடனே கொடுத்து மாண்டான்!*
*பண்பான மக்களையும் பலிகொள்ளும் போரோயப்*
*பாடுவாய் மோகனா நீ?*

(இக்கவிதை, கிழக்கிலே நன்கறியப்பட்ட கவிஞரும் விமர்சகரு மான வீ. ஆனந்தன் பற்றியது) தொகுத்துக்கூறின், மருதூர்க் கொத்தன் கவிதைகளை

மொழியுணர்ச்சி
முற்போக்கு
தேசியம்
தமிழ்
அன்றாட அனுபவம்
இஸ்லாமியத் தத்துவம் என்றவாறும்
யாப்போசை
பேச்சோசை என்றவாறும்
மரபுக்கவிதை வடிவம்
புதுக்கவிதை வடிவம் என்றவாறும்
கவியரங்கக்கவிதை
மெல்லிசைப் பாடல் என்றவாறும்

இனம்காண முடிகின்றது. இவ்விதத்தில் மருதூர்க்கொத்தன் கவிதைகள் காலத்தின் பிரதிபலிப்பாக - காலத்தின் குரல்களாக வெளிப்படுகின்றன என்று கூறத்தோன்றுகிறது.

கவிதையைப் பொறுத்தவரையில் தமிழ்க்கவிதை வடிவமரபுகள் பலவற்றையும் சங்க இலக்கியம் சார்ந்த தொகுப்பிலும் உள்ள இலக்கிய வடிவமரபுகள் இனங்காண முடிகிறது. இத்தகைய கவித்திறன் கிழக்கிலங்கை முஸ்லிம் கவிஞர்களிடம் மிக அரிதாகவே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

கவிதை ஆர்வலர்கள் இத்தொகுப்பிலுள்ள கவிதைகளை நிதானமாகப் படிக்க முற்படும்போது மருதூர்க்கொத்தனின் வேறு சில கவிதைகளையும் தரிசிக்க முடியும். மருதூர்க்கொத்தனின் கவிதை நறுக்குகளை பார்வையிடத் தந்து மருதூர்க்கொத்தன் சிறப்பிதழில் பிரசுரித்த மகுடம் ஆசிரியர் வீ.மைக்கல்கொலின் இவ்வேளை நன்றியுடன் நினைவு கூரப்படுகிறார்.

இறுதியாக ஒன்று: தமிழ் இலக்கிய கவிதைமரபுகளையும் சொற்களையும் அதிகளவில் பயன்படுத்திய முஸ்லீம் நவீன கவிஞர்களுள் முதன்மை இடம்பெறுபவர் மருதூர்க்கொத்தன் என்பதிலும் தவறில்லை. தனது சிறுகதைகளிலே பழந்தமிழ்ச் சொற்களை அதிகமாகக்கையாண்டவர் (உதாரணம்:“ஒளி” சிறுகதையின் ஆரம்பமும் முடிவும் கடினமான பழந்தமிழ்ச் சொற்களில் அமைந்துள்ளன. சிறுகதையொன்றின் தலைப்பு “ஆற்றுப்படை”) கவிதையைப் பொறுத்த வரையிலே கவிதை வடிவமரபுகளையும், இலக்கிய வடிவ மரபுகளையும் பின்பற்றியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே மருதூர்க்கொத்தனைத் தமிழ்பற்று மிகுந்த படைப்பாளியாக இனங்காணமுடிகின்றது!

பேராசிரியர் செ. யோகராசா
ஓய்வுநிலைப் பேராசிரியர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

# ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் அடையாளமாகியுள்ள மருதூர்க் கொத்தன் கவிதைகள்

இலக்கியத்தில் அடையாளம் குறித்த பார்வையானது சிக்கலானது. நவீன தமிழ்க் கவிதையின் முன்னோடியான பாரதி 1933 ஆம் ஆண்டு 'சுதந்திரச்சங்கு' வாரப்பத்திரிகையில் 'ஆறிலொருபங்கு' சிறுகதை யினை எழுதியதன் மூலம் சிறுகதைக்கான புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தவர். எனினும் அவர் கவிதை துறையிலேயே அடையாளம் பெற்றார். நீலாவணன் 1953இல் சுதந்திரனில் 'ஓடி வருவ தென்னேரமோ?' கவிதை மூலம் அத் துறைக்குள் நுழைந்த போதிலும் 'பிராயச்சித்தம்' சிறுகதையினை 1952 இல் எழுதியதன் மூலமே எழுத்துத் துறைக்குள் நுழைந்தார். கவிதைக்கு முந்திய அனுபவம் சிறு கதைக்குள் ஏற்பட்ட போதிலும் நீலாவணனை அடையாளமிட்டது கவிதைத்துறையே. கொத்தனும் ஈழத்தின் கவனயீர்ப்பைப் பெற்ற சிறுகதையாளனாக 1960 களில் அடையாளம் பெற்று 1962இல் 'கருமுகில்' என்ற கதையினூ டாக சிறுகதைப்பயணத்தை ஆரம்பித்தார். எனினும் அவரது இலக்கியப் புகுமுகம் கவிதையினூடாகவே (1950கள்) நிகழ்ந்துள்ளது என்பது கவனயீர்ப்புக்குரிய செய்தியாகும்.

ஈழத்துக் கவிதைமரபில் 1950கள் முக்கியமான காலகட்டமாகும். தமிழ்க் கவிதையில் அரசியல் அதிகம் செல்வாக்குச் செலுத்திய கால மாக இது கொள்ளப்படுகிறது. இனயுணர்வு, மொழியுணர்வு சமயம், காதல் மற்றும் அனுபவம் சார்ந்த பிரச்சினைகள் கவிதைகளுக்குள் ஊடுருவத்தொடங்கியது. நீலாவணனை அடியொட்டிய கவிதைப்பரம் பரையொன்று கிழக்கில் உருவாகியது. எம்.ஏ. நுஃமான் இது பற்றிக் கூறும் போது:

"நீலாவணனின் தொடர்பின் மூலம் நான் புதிய உலகுக்குள் பிரவேசித் தேன். என்னைச்சுற்றி இயங்கிக் கொண்டிருந்த அதுவரை நான் காணாத பரந்த இலக்கிய உலகத்தை அவரது உறவின்மூலம் நான் தரிசித்தேன். மருதூர்க் கொத்தன், மருதூர்க்கனி, பாண்டியூரன், ஜீவா ஜீவரத்தினம், கனகசூரியம் போன்ற எமது பிரதேசக் கவிஞர்கள் எனது நண்பர்கள் ஆனார்கள்" என்கிறார்.

இதன் மூலம் கொத்தனது அடையாளத்தை உணரமுடிகிறது.

1950 இல் மருதூர்க்கொத்தனின் கவிதைப் பிரவேசம் நிகழ்ந்துள்ளது. 'காலத்தின் குரல்களாகின்ற மருதூர்க் கொத்தன் கவிதைகள்' என்ற கட்டுரையில் செ.யோகராசா இதனை உறுதிப்படுத்துகின்றார். அதில்:

“ஆச்சரியம் தரும்விடயம் யாதெனில் ஐம்பதுகளிலேயே அவரது கவி யுலகப்பிரவேசம் நிகழ்ந்துள்ளது என்பதே. 1950 இல் எழுதிய முதலாவது இலக்கியமுயற்சி என்று கவிஞரது குறிப்பில் எழுதப்பட்டு ள்ள அக்கவிதை நிலவு பற்றியது’’ எனவும்:

“கவிஞரது கவிதையுலகப் பிரவேசம் ஐம்பதுகளில் நிகழ்ந்திருக்கிறது என்கின்றபோது, அது ஈழத்துக் கவிதை வரலாற்றில் கவிஞருக்கு முக்கி யமானதொரு இடத்தை வழங்குகிறது என்பது கவனத்திற்குரியது. அதாவது முஸ்லிம் கவிஞர்களது நவீன கவிதையுலகப் பிரவேசம் ஐம்பதுகளில் நிகழ்ந்ததென்றும் அவ்விதத்திலே புரட்சிக்கமால், அண்ணல், யுவன் ஆகியோர் முதன்மையானவர்களென நினைவு கூரப்படும் நிலையிலே இப்போது அத்தகையோர் வரிசையில் மருதூர்க் கொத்தனும் இணைகிறார் என்பது நினைவுற வேண்டியுள்ளது’’ என்கிறார். மருதூர்க்கொத்தனது கவிதை தொடர்பில் எழுதப்பட்ட முதல் ஆய்வுக் கட்டுரை முயற்சியாக செ.யோகராசாவினது கட்டுரை யினைக் குறிப்பிடலாம்.

கொத்தனது முதலாவது வெளியீடே ‘காவியத் தலைவன்’ என்ற பெயரில் பதியுதீன் மஹ்மூத்தை பாட்டுடைத் தலைவராகக் கொண்டெழுந்த காப்பியமாகும். 1977ல் நிந்தவூர் வட்டார ஆசிரியர் சங்கம் இந்நூலை வெளியிட்டது. அவரது கவித்துவ வெளிப்பாட்டின் முக்கிய அம்சமாக இதனைக்கொள்ளலாம்.

எம்.ஐ.எம். அமீனைப் பதிப்பாசிரியராகக்கொண்டு புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, கலாநிதி ம.மு. உவைஸ் ஆகியோரின் அணிந் துரைகளுடன் காவியத் தலைவன் வெளிவந்தமை சிறப்பம்சமாகும்.

*“இந்துமகா சமுத்திரத்தின் எழிலை மேலும்*

*எடுத்தோதும் வண்ணத்தில் இலங்கி மண்ணின்*

*விந்தையென மரகதமா மணியே யாகி*

*வியனெழிலைச் சிந்தியுல கெங்கும் வாழ்வோர்*

*சிந்தைகளைக் கவருகின்ற சீர்த்தி பெற்ற*

*சீரிலங்கைத் திருநாடு: பூவில் என்றும்*

*முந்துபுகழ் காக்குமுயர் ஈழ நாடு*

*மோய்ம்மலர்க்கா சூழிலங்கை எங்கள் நாடு’’*

என எங்கள் நாட்டுச் சிறப்பினைக்கூறி ஆரம்பிக்கும் காவியத் தலைவனில் எங்கள் நாடு, புகழ் சேர் குடும்பம், அன்புதயம், கம்பளையில் கலாபீடம், அரசியல் பிரவேசம், சுகாதார வீடமைப்பு

அமைச்சர், இஸ்லாமிய சோசலிஸ முன்னணி, மீண்டும் கல்வி அமைச்சர், கிழக்கில் பவனி, நீடு வாழ்க! என 23 பகுதிகள் அடங்கியுள்ளன. யாப்போசையும் பேச்சோசையும் மிக்க எளிமையான நடையில் கொத்தன் இந்நூலைப் படைத்திருப்பது அவரது இலக்கியப் படைப்பாற்றலின் முக்கிய மைற்கல் எனலாம்.

காவியத்தலைவன் அடங்கலாக மருதூர்க்கொத்தன் நூற்றுக்கும் அதிக மான கவிதைகளை எழுதி உள்ளார். சுதந்திரன், வீரகேசரி, தினகரன், பத்திரிகைகளிலும் 'மித்திரன்' வார இதழிலும் கிழக்கிலங்கை சனசமூக சம்மேளன கலைவிழா மலரான 'கதிரொளி' யிலும் கவிஞன், அல்-மருதமுனை மற்றும் 'மகுடம்' சஞ்சிகைகளிலும் புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீனுக்காக மருதமுனை மஜீத் எழுதிய 'காவிய நாயகன்' வெளியீட்டிலும் ஜின்னா சரிபுத்தீனின் 'முத்து நகை' கவிதை நூலுக்கு எழுதிய ஆசியுரையிலும் கொத்தனது கவிதைகள் பதிவாகியுள்ளன.

குறித்த வகைப்பாட்டுக்குள் கவிதைகளைக் கொண்டுவருவதில் சிக்கல் தன்மை இருக்கின்றபோதிலும் கொத்தனதுகவிதைகளுக்குள் இயற்கை, தொழிலாளர் உறவும் பிரச்சினையும், இன உறவும் தமிழ்ப் பற்றும், ஆன்மீகத் தேடல், இரங்கல் உரைகளும் தனியாள் பெருமைகளும், மெல்லிசைப் பாடல்கள், கவியரங்கக் கவிதைகள் மற்றும் பாடசாலைக் கீதங்கள் என்றவாறு பல்வேறு அம்சங்களும் பொதிந்திருக்கின்றமை முக்கிய அம்சமாகும்.

இயற்கை பற்றிய கவிதைகளுள் நிலவேவா, வெண்ணிலா, தாமரையின் ஊடல் ஆகியன குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன. நிலவைப் பலரும் பாடியுள்ள நிலையில் கொத்தனின் முதல் கவிதையாய் அமைந்த 'நிலவேவா' புதிய சொல் வீச்சுகளால் அமைந்திருப்பது கவனத்துக் குரியது. முற்றத்து மெத்தை மேலமர்ந்து பேசவும், கோலக் கவிதை அமுதமருந்தவும், மோதகம் கொழுக்கட்டையும் பணியாரமும் சாப்பிட வும், கீரைக் கறியுடன் மீன் பொரியல் உண்ணவும், கனிந்த வாழைப் பழம் சாப்பிடவும் நிலவை அழைக்கும் கிராமிய மணம் நயக்கத் தக்கது.

மணலை வாருகலால் கோலமிட்டதாகவும், பாயினில் வண்ணப் புணி போட்டதாகவும் நிலவை அழைக்கும் விதம் மாறுபட்ட சுவையினைத் தருவதுடன் ஏனைய கவிஞர்களது கற்பனைகளிலிருந்து வேறுபட்டும் அமைந்துள்ளது. அதனை:

*" பட்டு மணல்மேல் வாருகலால்-நாம்*
*பரவிக் கோலம் இட்டிருக்கும்*
*முற்றம் என்னும் மெத்தையின் மேல்*
*மெல்ல அமர்ந்து பேசிடலாம்-பல*
*செல்லக் கதைகள் கூறிடலாம்"*

என்கிறார் கொத்தன். வெள்ளியின் காதலியாகி, முற்றம் கூட்டி நின்ற கூனல் கிழவை முட்டியதால் துரத்தியடிக்கப்பட்டதாகக் கூறும் 'வெண் ணிலா' பற்றிய கவிதையும் நோக்குதலுக்கு உரியது: பாரதியின் 'நிலாவும் வான்மீனும் காற்றும்' கவிதையின் சாயலை வேண்டி நிற்கும் கற்பனையே வெண்ணிலா பற்றிய கொத்தனின் இப்பாடலாகும்.

வண்டின் வருத்தங்களைப் பேசும் 'தாமரையின் ஊடல்' கவிதையும் இயற்கை பற்றிய கொத்தனின் கற்பனை ஆற்றலுக்கான எடுத்துக் காட்டாகும்.

காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். ஏதோவொரு உந்துதலும் அதன் பாதிப்பும் அதுசார்ந்த கவிதைகளை கொத்த னிடமும் தோற்றுவித்திருப்பதனைக் காணலாம். சினக்காதே, நீயன்றோ, புதுப் பாடம் படிப்பித்தாய், இயற்கையைப் பழிப்பதோ இவள், இழப்பு, வதுவைக்குத் தேதி வரைந்தபின் என்பன காதலைப் பற்றிய கவிதை களாக அமைந்துள்ளன.

திருமணத்தின் பின்னர் ஏற்படுகின்ற துயரங்களை அலட்டிக்கொள்ளாத தலைவனின் நிலையினை சித்திரிக்கும் கவிதையே 'வதுவைக்கு தேதி வரைந்த பின்' என்பதாகும்.

1950 களைத் தொடர்ந்து ஈழத்தில் மார்க்சியம் சார்ந்த கருத்துக்களும் முற்போக்குவாதச் சிந்தனைகளும் கவிதைத் துறைக்குள்ளும் ஊடுரு வத்தொடங்கின. மருதூர்க்கொத்தனும் இக்கருத்துக்களால் ஈர்க்கப் பட்டமையினால் அவரது கவிதைகளிலும் இச்சிந்தனைகள் காணப் பட்டன. தொழிலாளர்சார் நலன்கள் பற்றிய கவிதைகளாக சேவல் கூவுகிறது, சிறியமகன் செகம் வெல்வான், உழைப்பால் செழிக்கும் உலகம், மக்கள் விடுதலைக்கும்மி, கவிஞன் பணி, துவக்கு பணியை, என்னவுன் விசாரம் உள்ளிட்டவைகளைக் குறிப்பிடலாம்.

கரைவலை மீனவர்களை அதிகம் கொண்டது கொத்தன் வாழ்ந்தபிர தேசம். அதனால் அம் மக்களின் பிரச்சினைகளை நேரடியாகத்தரி சித்தவர் அவர். தோணி கரை சேரும் வரை உடலையும் உயிரையும் அர்ப்பணம்செய்து பாடுபடுபவன் மீனவத்தொழிலாளி. ஆயினும் வணிகத் தரப்பிலுள்ளவர்களே முழுப் பயனையும் அனுபவிக்க, சிறிய கறியுடன் வீடுசெல்லும் அவலமே தொடர்கதையாகிவிட்ட செய்தியை 'நீருழவன்' ல் மஹாகவி கூறியதுபோல் கொத்தன் 'சேவல் கூவுகிறது' கவிதையில் பதிவு செய்துள்ளார்.

*"தொந்திகள் பருத்த வணிகத்*

*துரைமகார் மீனைப் பெற்றார்*

…… *கறிக்கெனத் தோறாமீனும்*

*காசுத்தாள் ஆறு நூறும்*

*கரைவலைச் சொந்தக் காரக்*

*கனவான்தன் வசமாய்ப் பெற்றார்*

*பெருங்கடல் மடியில் வாழ்ந்த*

*மீன்கரை கொணர்ந்த தோழர்*

*கரங்களில் இரண்டு ரூபாக்*

*குற்றிகள் பெற்றுச் சேர்ந்தார்"*

சேவல் கூவுகிறது: மீனவர் பிரச்சினையினைக் கூறுவது போல் கைத்தறி நெசவாளர் நிலையினை அலசுகின்ற கவிதையே 'சிறிய மகன் செகம் வெல்வான்' சிறிய மகனை உலகினையே வெல்ல அழைக்கும் இக் கவிதையின் அழைப்பு முறை முற்றிலும் வித்தியாசமானது.

சிறிய மகன் செகம் வெல்வான் போல் தொழிலாளர்களை வதைத்து ஏப்பம் விடும் முதலாளிமார்களின் இயல்புகளைக் கூறும் இன்னுமொரு கவிதையே 'உழைப்பால் செழிக்கும் உலகம்' ஆகும். முதலாளி களினை வாழ்த்தும் நிலையினை ஒதுக்கி விட்டு தொழிலாளர்களின் புகழ்பாட அழைக்கிறார் கவிஞரின் தொழிலாளர் நலன் தொடர்பான கவிதைகளின் வேகம் அபூபக்கரின் 'எல்லாம் உமதே' கவிதையின் சாயல்களை ஒத்திருப்பது நோக்குதலுக்குரியது..

பாரதியாரின் 'பெண்கள் விடுதலைக்கும்மி' போல் உழைக்கின்ற மக்க ளின் விடுதலைக்காக கொத்தன் கொட்டுகின்ற கும்மியே 'மக்கள் விடு தலைக் கும்மி'யாகும். உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தில் 'தொழிலாளர்களின் மேன்மையினை உயர்த்துவோம்' என அழைக்கும் கவிதையே 'கவிஞன் பணி' என்பதாகும். அமைதியாக இருந்து எதனையும் சாதிக்கமுடியாது தொழிலாளர்கள் மேன்மையுற வேண்டு மாயின் தமக்குரியதை தாமே பெற்றுக் கொள்ள முயலவேண்டும் என்பதனை உணர்த்துகின்ற கவிதையே 'துவக்கு பணியை' என்பதா கும். பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு, மானிட சக்தி கவிதைகள் போல் தம்பியியை விழித்துப் பேசும் திறன் ரசனைக்குரியது.

இலக்கிய உறவும் கல்வித் தொடர்பும் தாம் வாழ்ந்த அயல்கிராமத்து உறவுகளும் கொத்தனுக்குள் இன உறவையும் மொழி உறவையும் விதைத்திருந்தது. 'நிலவே வா', 'தமிழ் விழாக்காணும் தகவுடையாள்', 'அழகு வண்ணப்பூச்சிகள்', 'விதியின் பிழையன்று', 'அழைப்பு', 'கலையின் இறைவன்' முதலிய கவிதைகளில் இன உறவும் மொழியு றவுக் கருத்துக்களும் இழையோடியுள்ளன.

மருதூர்க்கொத்தனின் கவிதைகளில் ஆன்மீகத்தேடல் தனித்துவமானது. குறியீட்டுப் பாங்காய் அமைந்த சொல்லமைப்புக்களைக் கொண்ட அவ்வகைக் கவிதைகளுக்குள் 'ஈமான்', 'நோன்பு நோற்பாயே', 'வள்ளல் அளித்த வழி', 'செம்மல்கள் எம்மவர்கள்', 'கொண்டாடுவோம் சமத்துவ வழிபற்றுவோம்' அல்லது 'விண்ணப்பம்' ஆகியன ஆன்மீகத் தேடல் சார்ந்த கவிதைகளாகும்.

மருதூர்க்கொத்தன் கவிதைகளில் இரங்கல் உரைகளும் தனியாள் பெருமைகளும் அடங்கியங்கியுள்ளன: 'தனக்குவமையில்லாத தலைவ' (இராசமாணிக்கம்), 'புலவர்மணி' (ஆ.மு.சரித்தீன்), 'பணி புரிந்தான் புகழ்பாடு' (விபுலானந்தர்), 'தமிழ் தந்த புலவர்மணி' (பெரிய தம்பிப் பிள்ளை) 'இதயம் அளந்துரை' (ஆ.மு.சரிபுத்தீன்), 'இந்தியப் பிரதமருக்கு மோகனா விடுதூது', 'டி கிளாக்குக்கு ஒரு பாமாலை' (நெல்சன் மண்டேலா), 'தனக்குவமை இல்லாத சான்றோன்' (ஆ.மு.சரிபுத்தீன்), 'வெண்பாவில் புலவர்மணி' (ஏ.பெரியதம்பிப் பிள்ளை), 'பேசச்செய்யும் விதியின்கை' (பெரியார்) முதலியன குறிப்பிடத்தக்கன.

எடுத்துக்காட்டாக சிலகவிதைகளை நோக்கும் போது: 'இதயம் அளந் துரை' என்னும் கவிதையானது புலவர்மணி ஆ.மு.சரிபுத்தீனின் கௌரவிப்பு விழாவுக்காக மருதமுனை மஜீத் எழுதிய 'காவிய நாயகன்' நூலுக்காக எழுதப்பட்டது. புலவர்மணியின் புகழ்பாட வந்த கொத்தன்:

*"காவியத்தின் கனிவு. காவிய நிமிர்வு.*

*காவிய பரிபூரணத்துவம்.*

*இப்படி ஒரு கலைத்துவ வாழ்வு*

*ஆ.மு.சரிபுத்தீனுக்கமைந்தது.*

*அவரது வாழ்வும் வழியும்*

*கலையெழில் மணக்கும் ஒரு காவியம்*

*எனவேதான் அவர் ஒரு காவிய நாயகன்"*

என புலவர் மணியை சான்றுப்படுத்துகிறார்.

கொத்தனது மெல்லிசைப் பாடல்கள் சிலவும் வெளிவந்துள்ளன அதில் 'மருதமுனைக்கீதம்' மற்றும் தமிழ்வாழ்த்தாய் அமைந்த 'விண்புகழ் கொண்ட தமிழ்' என்பன குறிப்பிடத்தக்கன. பல்லவி, அனு பல்லவி,

சரணங்கள் வெளிப்பட மெட்டமைக்கப்பட்டுள்ள இப்பாடல்கள் கொத்தனது கவித் திறனில் முக்கிய அடையாளங்களாகும்.

ஒரு விடயம் அல்லது ஒரு மன்னனைப் பற்றிப் பத்துப்பாடல்களில் பாடும் மரபு சங்கஇலக்கியங்களான பதிற்றுப் பத்து, ஐங்குறு நூறு மற்றும் திருக்குறள் ஆகிய இலக்கியங்களிலும் இருந்து வந்திருக் கின்றன. பதிற்றுப் பத்து நூலில் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தலைப்பு இடப்பட்டுள்ளதுடன் ஐங்குறுநூறு, திருக்குறள் ஆகியவற்றில் பத்துப்பாடல்களுக்கு ஒரு தலைப்பு இடப்பட்டுள்ளது. இம்மரபினைப் பின்பற்றியதாகவே கொத்தனின் பத்துப் பத்து அமைந்துள்ள து. இதனடிப்படையில் பத்துப் பத்து பாடும் முறையினை ஈழத்து நவீன கவிதை மரபில் பயன்படுத்தியவராக கொத்தன் இருப்பது அவரது கவிதைப் படைப்பாற்றலின் சிறப்பம்சம் எனலாம். அவருக்கிருந்த தமிழ் மொழிப் புலமையினை இவைகளினூடாக கண்டுகொள்ள முடிகிறது.

பத்துப் பத்துக்களில் இறைப்பத்து, நபிப்பத்து, சூட்சுமப்பத்து, ஊர்ப் பத்து, போர்ப்பத்து, மடமைப்பத்து, மேலாகப்பத்து, நன்றிப்பத்து என்பன கொத்தனது பத்துக்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியன. இதில் நபிப் பத்து, சூட்சுமப் பத்து, ஊர்ப் பத்து, போர்ப் பத்து, நன்றிப் பத்து தொடர்பான பாடல்களே கிடைக்கப் பெற்றுள்ளன.

நபிகளாரின் புகழையும் அவரது திடமான செயற்பாடுகளையும் வெளிப் படுத்துவதே நபிப்பத்தாகும். இறைவனின் சூட்சுமங்களை (நுட்பம்) பற்றிக்கூறுவதே சூட்சுமப்பத்தாகும். மனிதனது ரேகை, முகவாக்கு, குரல் வெளிப்பாடு, இறந்து போகும் முறைமை என்பன மனிதர் களுக்கிடையே வித்தியாசப்படுத்தும் பாங்கில் அமைத்தவன் இறைவன் என நிறுவிக் காட்டுவதாகவே சூட்சுமப்பத்தாகும்.

சம்மாந்துறை முதலிய ஊர்களைப்பற்றி பாடியதே ஊர்ப்பத்தாகும். சம்பவங்களினூடாக போரின் நியாயமற்ற நிலைப்பாட்டினை கோடிட்டுக் காட்டுவதே போர்ப்பத்தாகும். கவிஞர் வீ.ஆனந்தனின் அநியாயமான பேரிழப்பு போர்ப்பத்தில் இடம் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

*“இந்துவாய்ப் பிறந்தாலும் இஸ்லாம்மத பாடத்தை*
*எழுதியதில் சித்திகண்டோன்*
*இஸ்லாமிய மக்கள் தம்மோடு உறவாடி*
*அவர் மனம் வாழ்ந்த அன்பன்*
*செந்தமிழ் நல்ல இலக்கியம் செய்வோரைச்*
*சிரம் தாழ்த்தி வணங்கும் சீலன்*
*சித்தம் முழுவதும் இலக்கியச் சுவை தனைச்*
*சேமித்து வாழ்ந்த ரசிகன்*
*சந்தமும் இன உறவைச் சாதிக்கும் நற்பணியில்*
*சாதனந்தம் கண்டு வாழ்ந்தோன்*

*அவன் பயணம் செய்வண்டி*
*அமர்க்களம் ஒன்றினிடையே*
*அகப்பட்ட கொடிய வேளை*
*பந்தமுடன் ஓர் சிறுமி உயிர் காக்கத் தன்னுயிரைப்*
*பரிவுடனே கொடுத்து மாண்டான்…"*

பத்துப்பத்துப் பாடும் மரபு சங்ககாலச் செய்யுள் மரபின் தொடர்ச்சியென்றே குறிப்பிடலாம். அதனைக் கொத்தன் கையாண்டுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

கொத்தனது கவிதைகளின் பாடுபொருள்களையும், வெளிப்பாட்டுத் தன்மைகளையும் நோக்கும் போதும் ஈழத்துக் கவிதை மரபில் மருதூர்க் கொத்தன் எனும் பெயர் தவிர்க்க முடியாதவொன்று என்பது தெளிவாகின்றது. கொத்தன் யாப்போசைகளின் மரபுகளை நன்கறிந்தவர். வெண்பா, விருத்தம், சிந்து போன்ற யாப்புக்களையும் அவரது கவிதைகள் சிலவற்றிலும் பயன்படுத்தி உள்ளார். ஆயினும் அம்மரபுக்குள் நின்றுகொண்டு தம் வசதிக்கும், கவிதைப் போக்குக்கும் இசைவாக செந்தமிழ் நடையினையும் பேச்சோசைப் பாங்கினையும் ஒன்றிணைத்து பெரும்பாலான கவிதைகளை யாத்துள்ளார்.

ஜெஸ்மி எம்.மூஸா
Fb-jesmymoosa
Mail: jesmymmoosa@yahoo.com
522C, ஸம் ஸம் வீதி,
மருதமுனை
077 3624690

# நிலவே வா! 1950– முதற்கவிதை

*நீல வான வீதியிலே*
*நீந்தும் வெள்ளை நிலவே வா - தினம்*
*நீந்தும் வெள்ளை நிலவே வா!*

*பட்டு மணல்மேல் வாருகலால் - நாம்*
*பரவிக் கோலம் இட்டிருக்கும்*
*முற்றம் என்னும் மெத்தையின் மேல்*
*மெல்ல அமர்ந்து பேசிடலாம் - பல*
*பல செல்லக் கதைகள் கூறிடலாம்.*

*காவினில் மயில்கள் களித்தாடும் - அயல்*
*வாவியில் மீனினம் இசைபாடும்*
*பாயினில் வண்ணப் புணிபோடும்*
*பாவையர் நாவும் கவிபாடும் - அவர்*
*காதலர் நெஞ்சம் களித்தாடும்*

*பாலும் தேனும் பழச்சாறும் - சுவை*
*பழிக்கும் வண்ணம் அவர்*
*பாடும் கோலக் கவிதை அமுதருந்தி*
*குதித்து நீயும் ஆடிடவா - விண்*
*விடுத்துமே மண்ணை மிதித்திட வா!*

*மோதகம் கொழுக்கட்டை அவித்திருக்கு - பணி*
*யாரமும் எண்ணையில் சுட்டிருக்கு*
*மேதித் தயிரும் உறைந்திருக்கு - குலை*
*வாழைப் பழமும் உடனிருக்கு - நீயும்*
*இறங்கி உடனே ஓடி வா.*
*கீரை கடைந்து வைத்திருக்கு -வரால்*
*மீனும் பொரித்துக் காத்திருக்கு - நல்*
*ஆரல் கறியும் சமைத்திருக்கு*

அருந்த நீயும் ஓடிவா - எம்
விருந்தின் அருமை நாடி வா!

பிட்டுக் குழலிடை மாவோடு - சுவை
பெருக்க இணையும் தேங்காய்ப் பூ
கூட்டாய்த் தமிழர் முஸ்லிம்கள்
குலவும் அழகைக் கண்டிட வா - அவர்
மொழியும் தமிழினைக் கேட்டிட வா!

எண்ணெயில் சுட்ட பணியாரம் - பாகு
இட்ட பலகாரம்
வெள்ளை படர்ந்த தயிர் வடையுடன்
வாழைப் பழமும் காத்திருக்கு - வா!
வாழைப் பழமும் காத்திருக்கு

# துவக்கு பணியை

வீதி அளப்பதிலும் சாதிழப்பலிலும்
வீரம் இருக்கவில்லைத் தம்பி இங்கு
நாதி இழந்த இனம் நீதி பெறுவதற்கு
நாளை இருக்குதுனை நம்பி.

வேளாண்மை விட்டவர் வாளாண்மை
அற்றவர் தோழா துவக்கு பணியை - நெடு
நாளாக நம்மொரு கேளாக நின்றிடும்
பாழாம்பசியின்பிணியை.

மாட்டைப்பகல்முழுதும் ஓட்டிக்களைப்பதிலும்
பூட்டு கலப்பையந்திரம் - பணம்
போட்டுப் பிறர்க்குதவி காட்டும் பணம்
படைத்தோர் நீட்டும் கரங்களுக்கு வந்தனம்.

ஏற்றைப் பிடித்திறைத்து காற்றிற் பறந்திடாது
சேற்றில் இறைக்கும் யந்திரம் - இன்னும்
நாற்று நடுகையொடு போற்று புதுமைகளை
தீற்று பசளை தந்திரம்.

ஆழக்கடலினடி மூழ்கிக் கிடந்தமுத்தை
சோளம் குவித்தவர்கள் முன்னே - இன்று
நீளக்கடல் கிடந்தும் தோளிற்பலமிருந்தும்
ஆளக் கொடுத்ததுவும் என்னே.
ஓடம் செலுத்து மச்சம் தேடப் படுவதல்ல
காடத்தனைகுவியும் காசு - வயிறு
வாடக்கருத்துமிலை கேடெத்துணையுமிலை

ஓடத் தலைப்படும் எம் மாசு.
காட்டுத் தரை உழுது நாட்டு பயிர் வளர்க்கும்
கூட்டு முயற்சிமிக நன்று - பனைத்
தோட்டம் இருக்குதெங்கு வீட்டுப்பசு பறவை
நாட்டை உயர்த்துபவை இன்று.
மேடை முழங்கியென பீடு ஒழிந்திடுமோ
வாடைக் கொதுங்க ஒரு வீடு - கொடு
காடைத் தனங்களுக்குப் பாடை மைக்கவின்றே
ஏடா! துணிந்துடனே தேடு.

# களை கட்டலே

என்னன்பு மாணவர்காள் கச்சையினை வரிக
எடுத்தபணி முடித்திடவே தீரமுடன் விரைக
நன்மையெனும் குறியினிலே நாட்டமது கொள்க
நாடிநரம் பத்தனையும் லட்சியத்தில் காய்க.

இன்னரிய இன்னரிய செய்யவன்றோ வந்தோம்
எனவேநாம் தாமதித்தால் ஏற்றமல எழுக
நன்றுலகம் செழித்திடவே இன்னுயிரும் தருக.
நாளைவரும் நம்மிளையோர் மேன்மைபெற அருள்க.

பயிர்மகளை நெருக்குகின்ற களைகளினைப்பாரீர்
பாந்தையெனக் குமிண்சிரிப்பை உதிர்ப்பதினைப்பாரீர்
வயிறுகொள மண்பசளை உண்டஇறு மாப்பில்
வயலரசி நானென்னும் பறைமுழக்கம் கேளீர்!

சேற்றினிலே நாமினியும் இறங்கத்தான் வேண்டும்
செல்லினுக்கும் கொடிதான களைகட்ட வேண்டும்
ஏற்றமெலாம் பயிர்மகளும் காணத்தான் வேண்டும்
ஏராளன் பெருவாழ்வு பூணத்தான் வேண்டும்.

களைகட்டும் பணிக்குவயல் ஒன்றிரண்டா இங்கு
கணக்கற்று அவைவிரிந்து கிடப்பதினைப்பாரீர்!
களங்களெலாம் களைமடியப் போலியெலாம்மா
கணக்கிட்டுத் துறைதுறையாய்க் கைவரிசைஎட்டீர்!

# என்னவுன் விசாரம்

இரவு மாந்தர் மெய்படர் அயர்வு
இரிய விழைந்தே இருகண மூடி
துயின்று அமைதி துய்க்கும் இரவு
இனிமை குழைந்திடு இளமை இரவு

இனிமை குழையும இளமை இரவின
இனிமை மாந்தும் எண்ணம் போக்கி
வனத்திடை உளவோர் தருவின் கிளையில்
தினசரி அமர்ந்தே தேனிசை பிலிற்றி
தனிமையில் இரவின் இனிமையை நகைக்கும்
கானப் புள்ளே என்னவுன் விசாரம்
உனக்குறு கவலை யானறி குதலை
நீவிரும் புவையோ யாதுன் விசாரம்?

காதல் செய்தே களிக்க விரும்பிய
போதில் ஏதும் பிழைநடந்ததுவோ?
காதகர் விளைத்த கயமை மிகுந்து
வாதை செய்துனை வாட்டுகின்றதுவோ?
பசியுன் வயிற்றைப் பலாமுள் கொண்டு
பிசைதல் தாங்கும் வகைதெரிகிலையோ?
மானம்! மானம் மறைக்க ஆடை
வேண்டும் என்கிற விசாரம் உனக்கேன்.
கானகம் பரந்த வீடா யிருக்கக்
கவலை அதனால் விளைகுதல் தகாதே!
இல்லறம் தெருவில் இயற்றும் ஈன
மானிடர் துயரில் தோய்கின் றனையோ?
உலகினைச் சுரண்டும் முதலை வர்க்கம்
ஒழியச் சாபம் இடுகின்றனையோ
எனவெஞ் சூழ்நீ உரைக்கின் றனையோ?

அலுவ லகங்களில் உலவும் இலஞ்சப்
பேய்கள் கோரப் பற்களி னிடையே
பட்ட வேதனை பறைகின் றனையோ?
ஏணி வேண்டும். ஏணி வேண்டும்
ஏறி உயர ஏணி வேண்டும்
ஏறிய பின்னர் ஏணிக் குதையைப்
பரிசாய் ஈவதைப் பெரிது பண்ணி
நிசியில் நெஞ்சம் பிழிகின் றனையோ?
நிறைவு இந்த நீணிலத் திடையே
அருகிய தென்ன அமுதக் குரலில்
அழுகின் றனையோ? யாதுன் விசாரம்
இலையேல் நீயும் இன்குரல் தேய்த்து
இரவின் எல்லை அளப்பதும் ஏனோ?
இரவின் எல்லை அளப்பது உனக்கு
இசையே யாயின் அதற்காக அரற்றுக
இரவினை யாதும் நகைத்தேஅரற்றுக
இரவினை யாதும் நகைத்தே
தினமும் கேட்பேன் ஓ... என் அன்பே!

# நீறாக்கு கற்பகமே!

காலம் அதன் போக்கில் கடுகி விரைகிறது
கனவுகளும் ஆயிரமாய்க் காட்சி தொடர்கிறது.
கோலம் வரைதற்கே நெஞ்சம் துடிக்கிறது
கொள்வார் அருகிவரும் குறையாற் கனல்கிறது.
சீலம் அழிகிறது சீர்கெட்டலைகிறது.
சித்தப் பிரமைகளும் செபமாலை தூக்கிறது.
பாலும் சுரக்கப் படுவிஷமும் சுளிக்கிறது
நானுந் தலைவனென நம்ப உரைக்கிறது
ஏலும் வரைக்கும் ஏமாற்றிக் கொள்ளிவைக்க
எமகாதக் கும்பல் எங்கும் அலைகிறது.
வாலாட்டுந் தீய வகையெல்லாம் மாய்ந்துலக
வாழ்விற் செழுமை வளர்ந்தோங்க உன்றன்
நீல விழியில் நெருப்புக் கனல்வீசி
நீசத் தனங்கள் நீறாக்கு கற்பகமே!

# பொருத்தம்

மாடிக் கடைக்கார மாசிலா உடையார்
மரவள்ளிக் கிழங்கைக் கொட்டிநிரப்பினார்
கிழங்குக் குவியலின் அயலில் இருந்து
வெற்றிலை வாயை அகலத் திறந்து
காவிப் பற்கள் முழுவதும் காட்டி
தெருவில் போவோர் வருவோர் முகங்களைப்
பார்த்து இளித்துப் பகல்களைக் கழித்தார்
கிழங்கு மலையோ அசையா திருந்தது.
அடுத்தநாள், மாடிக் கடையின் அயலில்
ஓலைக் குடிசை செய்து கொட்டினார் கிழங்கை
மதியம் வருமுன் கிழங்கு
மலைவிலை யாகி மறைந்து போனதே!

# சினக்காதே!

உன்னைக் கடைக் கண்ணால் உண்டு சுவைத்ததற்காய்
என்னைச் சினக்காதே உன்பாட்டில் நீ நட போ!

கச்சைப் பிடிக்குள்
கலங்கிப் பிதுங்கி வான
உச்சியை நோக்கி
உயர்ந்துவிண் ஆராய
எச்சமயம் வாய்க்குமென
ஏங்கித் தளம்புமிகு
பச்சை இழந்துவரும்
பப்பாசிக் காய் மூடு

என்னைச் சினக்காதே! உன்பாட்டில் நீ இறங்கு.

ஆயிரஞ் சுழிகள்
அடக்கியதிற் காமநூல்
பாயிரங்கள் பாடிப்
பரி விழுந்து காண்பவரை
நோயில் விழுத்துகின்ற
நின்றன் அடிவயிற்றில்
சேயிழையே நன்றாய்ச்
சீலையினைப் போட்டுவிடு

உன்னைக் கடைக் கண்ணால் உண்டு சுவைத்ததற்காய்
என்னைச் சினக்காதே உன்பாட்டில நீ நட போ.

# சுமைதாங்கி

சுவர்கள் இருப்பதனால் சித்திரங்கள் தீட்ட
எவருக்கும் ஆகும். எவரோ வரைந்து விட்ட
கோலங்கள் என்றாலும் கூசாமல் என்தலையின்
மேலே சுமத்திவிட்டு மேட்டிமையைக் காட்டிடுக.
பென்னம் பெரியீர்! பெரும்பழியைத் தாங்குதற்கும்,
சின்னவனின் தோள்கள் திடசித்த மாயிருக்க
ஊரிலுள மற்றவர்மேல் சந்தேகம் கொள்ளுவதால்
பேராறு போல் பெருக்காகும் பாவவினை
உங்களது ஊகங்கள் என்னோடு சங்கமித்து,
உங்கள் திருவினைகள் ஓர்வரம்பில் தங்கட்டும்
இல்லையேல், நீங்கள் எதிர்பார்த்து நெக்குருகும்,
நல்ல சுவர்க்கத்தின் நாதாங்கி தாழிட்டுக்
கொள்ளவும் கூடும் கொடுநரகின் தாழ்ப்பாளுள்
மெல்லத் திறந்தும்மை மெய்விதிர்க்க வைத்துவிடும்
அந்நேரம் உங்களது ஆத்மா படும் பாட்டை
என்னால் உணர முடிகிறது ஆதலினால்
வேண்டாமே அப்பொல்லா வேதனை உங்களுக்கு
உண்மையில் நானோ சுமைதாங்கி ஆதலினால்
எந்தப் பழியையும் என்மீது போட்டிடுக.
அநதப் பழிகள் அடியேனைப் பண்படுத்தி
விந்தை புரியுமொரு வித்தகனாய் மாற்றுகிற
உந்து விசையாய் உதவும்.

# நீயன்றோ

வாடைக்குக் குளிர்தாவி உடல்கொள்ளும்
வாதைக்கு நெருப்பாகிக் கனல்வாய் நீ
பீடுற்றுப் பழம்பாயில் கிடக்கும் அப்
போதைக்கு மருந்தாகிக் கலப்பாய்நீ.
நாடிக்குள் விரைந்தோடும் இரத்தம் ஓர்
நாளைக்குத் தகைந்தால்நீ அதுவாகி
வாடிக்கை புரிவாயென் றெதிர்பார்த்த
வாதிக்கு எதுமாற்றம் புகல்வாய் நீ?
நீயென்றன் நினைவுக்குள் விருந்தாகி
நெஞ்சத்தே மழைபெய்த அதுபோழ்து
நானுன்றன் நினைவாலே மயலாகி
நாசங்கள் அணுகாத பெருவாழ்வு
தானென்றே இறுமாந்தேன் உனதன்பின்
தாழென்றும் அடையாதென் றுயிர் வாழ்ந்தேன்
நீயின்றோ புதுப்பாடம் படிப்பித்தாய்!
நீசங்கள் உளதென்றும் நிரூபித்தாய்!
காலங்கள் கரைந்தாலும் பெரியோர் காண்
கனவென்றும் நனவாகும் பிரபஞ்ச
கோலங்கள் அழிந்தாலும் எனதன்பே
குலையாத துணிவோடு நிசமாக
வாழ்வென்னும் களங்கண்டு பகைசாய்க்க
வருகின்றேன் துணையாக எனச் சொன்ன
யாழ்வென்ற நினதன்புக் குரல் வற்றி
அலைகின்ற தெனுமுண்மை மறவாதே.

# சேவல் கூவுகிறது

செங்கதிர் அம்பு மாரி
செய்யுமோர் வெறியனாகி
இங்கிதம் சிறிது மின்றி
எரித்தனன் உழைப்போர்மேனி
பொங்கியே பாயும் வேர்வைப்
புனல் கட லாக மாற்றி
வங்கமா கடலை வென்றார்
வலை கரை இழுத்துச் சேர்த்தார்.

சரிகைகள் இழைத்த சால்வைச்
சகிதராய் நெடிய ச'றுவால்
அரையிலே அணிந்து சாரன்
அதற்குமேல் மடித்துக் கட்டி
கரையிலே குடையின் கீழே
கதைபல அளக்கின்றாரே
வரையெனப் பருத்த வாகர்
வலைக்கவர் உரிமைக்காரர்.

சன்னதக் கதைகள் பேசிச்
சம்மணம் போட்டமர்ந்து
மண்ணிலே கோடு கீறி
நாய்புலி மறித்து ஆடும்
வண்ணமே இருந்த பெரிய
வணிகரும் குடை மகானும்
உன்னியே எழுந்து போனார்
உழைத்தவர் விலகலானார்.

தொந்திகள் பருத்த வணிகத்
துரைமகார் மீனைப் பெற்றார்
வெந்தசி வைத்தார் சின்ன
வர்த்தகர் வதங்கிப்போனார்.
ஐந்து பத்து ரூபா நோட்டு
ஆளுக்கு லாபம் கண்டார்
முந்தினார் கரைசேர்கின்ற
மற்றுமோர் வலையை நாடி.

கறிக்கெனத் தோறாமீனும்
காசுத்தாள் ஆறு நூறும்
கரைவலைச் சொந்தக் காரக்
கனவான்தன் வசமாய்ப் பெற்றார்.
பெருங்கடல் மடியில் வாழ்ந்த
மீன்கரை கொணர்நத தோழர்
கரங்களில் இரண்டு ரூபாக்
குற்றிகள் பெற்றுச் சேர்ந்தார்.

சலிப்புற்று இரு ரூபா உழைப்பாய்க் கொண்ட
சரிபுத்தீன் இவ்வாறு நினைக்க லானான்
தொழிலாளர் நாங்களினி ஒன்றுசேர்ந்து
தோணிவலை எமதுடமை செய்தாலன்றி
நலியாத புதுவாழ்வு ஈட்டவொண்ணா
நாமுழைக்க அவர் சுகிக்கும் நிலைமை மாற்றி
விழையாது கொடுமைகள் எண்ணி
விம்முவதை விட்டெழுவோம் வெற்றி கொள்வோம்.

# சிறிய மகன் செகம் வெல்வான்

தறியிலே மங்கமாயும்
தம்பிலெவ்வைக் காக்கா நீ,
இறால்காய்ந்த கருவாடாய்
ஏன் வளைந்து போனாய்கா?

கீழ்வானில் சூரியனும்
கிளர்ந்தெழும்பும் வெள்ளணையில்
பழம்பாயில் கிடந்த உடல்
பதறி எழுந்திடுவாய்
பழம்பாயில் கிடந்த நீ
பதறியெழுந்ததுமே
முகம் கழுவ மறந்திருப்பாய்
ஆனாலும் நெய்கின்ற நீ நெல்லும்
அகம்போக மறந்ததன்
தில்லையே! கருவே சொன்னதில்
போனதுமே தறியின்மேல்
பொட்டணவே அமர்ந்திடுவாய்
பாய்புலியின் பாய்ச்சலுடன்
பகலெல்லாம் நெய்திடுவாய்
நீநெய்த பிடவைகளால்
நாட்டிலுள்ள மாந்தரெல்லாம்
மானத்தைக் காக்கின்றார்
மாபெரிய தொண்டன் நீ

உண்குடிசை அம்மணமாய்
ஒழுக்கெடுத்துக் கிடப்பதனை
எண்ணியுமே பாராமல்
ஏன் நாளைக் கழிக்கின்றாய்?
ஒழுங்காய் அடுப்பெரிந்தால்
ஊர்நாய்கள் கூதலினால்
நலமிழந்து போகுமென்ற
நல்லமனம் ஏன் கொண்டாய்?

நான்பெற்ற பிள்ளைகளே
நாட்டுக்குப் பெரும்பாலும்
அவர்கள் பெறத் தொடங்கிவிட்டால்
அதைநாடு தாங்காது
என்றெண்ணித் தானே
உன்குமர்கள் திருமணத்தை
எண்ணியுமே பாராமல்
ஓட்டுகிறாய் வாழ்நாளை?

உன்னுடைய முதலாளி
ஊரையெலாம் வாங்குகிறார்
பொன்பொருள்கள் தேடுவதில்
பெரும்புரட்சி பண்ணுகிறார்
அவருக்கு நூல் சப்ளை
செய்பவர்கள் ஆண்டவனைச்
சவாலுக்கு அழைத்திங்கு
சொர்க்கங்கள் கட்டுகிறார்.
எல்லாம் அவர்தலையின் 'நஸீப்'
என்றே காலத்தை
அல்லாடிக் கழிக்கின்றாய்
ஆனாலும் உன்மகனே
பொல்லாத சமூகத்தைப்
புரட்டிவிட்டு அதனிடத்தே
நல்லாதோர் அமைப்பை
நாட்டத் துடிக்கின்றான்.
தறியிலே மங்கமாயும்
தம்பிலெவ்வைக் காக்க உன்
சிறியமகன நிசமாய் இச்
செகம் வெல்லப்போறான்கா!

# பயணம்

பாதையில் கற்கள் நெருக்கென்று
பாய்ந்துடலை வாதைக் கிழுக்கின்ற
வம்புநிறை ஒற்றையடிப் பாதையிலே
எங்கள் பயணந் தொடர்கிறது.

சாணை பிடித்த ஊசிகளாய்
முள்ளடர்ந்த கானகந்தான்
சிறாய்ப்பெடுக்கும் கவலை சிறிதுமின்றி
எங்களது கால்களை
எட்டியெட்டிப் போடுகிறோம்.

வேங்கைகள் சிங்கங்கள் யானைகள
குளுக்கடாக்கள் ஆங்காரங் கொண்டு
அலைகின்ற காட்டுவழி
நாங்கள் துணிந்து நடையாய் நடக்கின்றோம்.
நீங்கள்
எமைப்பார்த்து ஏனையா கவல்கின்றீர்
எங்களில் கழிவிரக்கம்
உள்ளவர்போல் நடிக்கின்றீர்
நாங்கள் பயணம்
நடப்பதிலே என்னபிழை?
உங்கள் தொடைகள்
உதறல் எடுப்பதையும்
உங்கள் இதயங்கள்
ஓங்கி அடிப்பதையும்
எங்களால் காண இயல்கிறது.

அதற்காக
நாங்கள் பயந்து நடைதளரப் போவதில்லை
எங்களுக்கு முன்னே
எத்தனையோ பேர் போனார்
தங்கள் இரத்தம் தரைநனைக்கும்

படிசென்றார்
போனதுந்தான் போனார்கள்
போனவழி தென்பட்ட
பூங்காவில் தங்கிப் புளகித்து
சங்கீத நாற்காலி
மற்றும் விளையாட்டில் மாட்டி - விழித்தார்கள்

மாட்டி விழித்த மேதைகளை
அன்றே நீர் காட்டி
எமைப்பார்த்துக் கலகலத்துச் சிரிக்கின்றீர
நாங்கள் அதையும் நன்கறிவோம்
நண்பர்களே
நாங்கள் அதையும்
நன்கறிந்த பின்னேதான்
காட்டு இருளிடையே
கண் சிமிட்டும் மின்மினியின்
கூட்டு வெளிச்சத்தில்
குறிபார்த்துக் குதிகொண்டு
நீட்டு மரங்கள் நெருங்கி
இடர் செய்யும் காட்டுவழியே
கடுகி நடக்கின்றோம்.

# மீசைகளைச் சுத்தி செய்க!

வெல்லவும் ஏலாமல்
வெல்லாமை தந்த துயர்
மெல்லவும் ஏலாமல்
மெத்த விசனித்து
கல்லை விழுங்கிய
காரணத்தால் சீரணிப்பு
இல்லா வயிற்றின்
இழி நிலைக்குத் தள்ளுண்டு
அல்லல் படுகின்ற
அன்பர்காள்!
நும் ஆத்மா
வல்லவரின் தோல்வியிலே
வானுலக மோட்சத்தை
வெல்லத்தான் போகுதெனின்
விட்டுத் தருவதற்கு
இல்லை இனி அட்டி
எழுக!
புழுதிகளை
மெல்லத் துடைத் துங்கள்
மீசைகளைச் சுத்தி செய்க!
வல்லவர்க்கு உண்டோ வசை.

# தமிழ் விழாக் காணும் தகவுடையாள்

வங்கக் கடலலையின் முத்தத்தில் மெய்சிலிர்ப்பாள்
தங்கக் கதிர்வயல்கள் தென்னை வளர் தோப்புக்கள்
பொங்குநீர் வாவி பூம்பொழில்கள் நீரமுது
தங்குங் குளங்கள் சலசலக்கப் பாடிவரும்
வற்றா நதிகள் வளம் பெருக்கும் கானகங்கள்
குட்டை உழக்கிக் குலவும் எருமைகள்
பட்டி பட்டி யாகப் பழனங்கள் மேய்ந்து வரும்
முட்டி முலைப் பசுக்கள் முன் பாயும் வெள்ளாடு
மந்திகளைச் சீண்டி மயிற் கூட்டம் ஆடிவர
குந்தியிருந்து குறிபார்க்கும் கொல் புலியைக்
கண்டு மறுகும் கலைக்கூட்டம் வெண்முத்து
கொண்டு மதம்பிடித்துக் கொம்பன்கள் கொட்டமிட
செல்வ மகள் என்னுஞ் சிறப்புக்கு ஆளாவாள்
கல்முனை என்ற தமிழ் வளரும் மாவட்டம்.

காவல் பறணில் கண் விழிக்கும் காளையரும்
பூவல் அடியில் புனல் கொள்ளும் பூவையாரும்
பால் நிலவு காலத்தில் முற்றத்தில் பாயிழைத்து
வெல்லத்தை வாய்ப்பாட்டால்
மெல்லுகிற கன்னியரும்
கட்டிக் கரும்பைக் கனியமுதச் செல்வத்தைத்
தொட்டிலில் இட்டன்புத் தாலாட்டும் தாய்மாரும்
கொல்லும் வெயிலில் வலைவிரித்து வாட்டுகிற
பொல்லாப் பசிக் கொடுமை போக்கும் வெறியுடனே
'அம்பா' இசைக்கும் அருமைச் சிறுவர்களும்
செம்மைத் தமிழ்ப்பாக்கள் செப்பி மகிழ்ந்திடுவார்

கூத்தும், குரவையும், கோலாட்டம், சீனடியும்
பக்தி வளர்க்கும் பள்ளிகளும் கோயில்களும்

தேவாரம், பைபிள, திருக்குர்ஆன் ஆகமங்கள்
நாவார ஓதுமிசை நாற்றிசையும் தேன்பொழிய
சிந்துகள் பாடிச் செந்தமிழை வாழ்விக்கும்
மங்காப் புகழ் பூத்த மாதரசி கல்முனையாள்!

சங்கம் வளர்த்த தமிழ்ச் சால்பைப் பறைசாற்றி
ஓங்க ஒலிக்கும் உரிமை மிகவுடையாள்
மங்கை ஓம் கல்முனை மாது!

# மக்கள் விடுதலைக் கும்மி

செம்மலர் போலும் நம் பிஞ்சுக் கரங்களைக்
கொட்டியே கும்மி யடித்திடுவோம்,
நம்மீழ நாடு செழித்து நலம்பெற
நாமெழுந்தே கும்மி யாடிடுவோம்.

பாடுபடும் தொழிலாளர்கள் வாழ்விலே
இன்பம் பெருகிடக கும்மியடி
நாடி உழைத்திடும் நம்விவசாயிகள்
நன்மை அடைந்திடக் கும்மியடி.

உழைக்கின்ற மக்களின் வாழ்வைச்
சுரண்டிடும் உலுத்தர் அழிந்திடக் கும்மியடி.
மழைக்கரம் கொண்டே இந் நாட்டை வளர்த்திடும்
மக்கள் மகிழ்ந்திடக் கும்மியடி.

பதுக்கல் முதலைகள் இருட்டு வணிகர்கள்
பண்ணு கொடுமை யழித்திடுவோம்,
விதியென்று சொல்லியே ஏழையை வாட்டிடும்
வீணனுக் கால்களி னால்மிதிப்போம்.
வல்லவர்கள் பணம் பண்ணும் அமைப்பினை
வன்மையுடனே தகர்த் தெறிவோம்
எல்லோர்க்கும் எல்லாமும் உண்டு எனும்
நல்ல ஈழம் மலர்ந்திட நாமுழைப்போம்.

சொத்து மிகுந்தவர் எல்லோரும் ஓரணி
சேர்ந்து மகிழ்வதை நாமுணர்வோம்
ஒத்த குரலினில் பாட்டாளி மக்களும்
ஒன்று திரண்டு கிளர்ந்தெழுவோம்.

பாட்டாளி மக்கள்நாம் ஓரணி சேர்ந்தபின்
பாடாய்ப் படுத்தும் பிரச்சினைகள்
ஓட்டமெடுத்திடும் இங்கு சமத்துவம்
ஓங்கி மலர்ந்திடும் கும்மியடி.

இங்கு பிரிவினை பேசிடுவோர் மாய
ஓங்கார மாய்க்கும்மி ஆடுங்கடி
எங்கள் மணித்திரு நாடுஇவ் விழாவென்(று)
எல்லோரு மேகும்மி ஆடுங்கடி.

ஏகாதி பத்திய நாய்களுக் கிங்கிடம்
இல்லை யென்றே கும்மி ஆடுங்கடி
ஏகாதி பத்திய ஏவலர்க்கும் இங்கு
இடமில்லை என்றெழுந் தாடுங்கடி.

# இயற்கையைப் பழிப்பதோ இவள்?

*கருமுகில் இவளின் அரிகுழல் கண்ட*
*கவலையில் குளிர்மழை சொரியப்*
*பிறைமதி நுதலின் வடிவதை நோக்கிப்*
*பயந்திருள் முகிலிடை மறைய*
*கருவிழி ஏவும் குளிர்கணை நாணிக்*
*காளிடை மானினம் மறுக*
*மருநிறை ரோஜா மலரெழில் வதன*
*மகிமையில் வாடியே உதிரும்*

*முத்துகள் சிற்பியில் முடங்கிக் கிடப்பது*
*மயிலியல் பற்களைப் பார்த்தா?*
*தத்தைகள் கிளைகள் தாவி மறைவதும்*
*தளிர்க்கொடி செவ்விதழ் கண்டா?*
*பொத்திகள் வாழைப் பூவென விரிந்து*
*பூமியில் விழுவது மிந்த*
*முத்தொளிர் மங்கை கொங்கைகள் முன்னே*
*மகிமை எமக்கிலை யென்றா?*

*மெல்லிடை யென்பது சொல்லளவேஇம்*
*மாதிடை இல்லாக் கொடியே!*
*மெல்லியல் கைம்மலர் கண்டதும் காந்தள்*
*மலர்தலை கவிழ்வதும் சரியே!*
*வல்லியின் பாதம் இருக்கையில் நமக்கொரு*
*வாழ்வினி உலகினி லென்றும்*
*இல்லையே என்று தாமரை மலர் தன்*
*இதழ்சரு காதலிப் பூவிலில்.*

# நிலமை மாற்றவேண்டும்

செங்கதிர் அம்பு மாரிச்
செய்யுமோர் வெறிய னாகி
பங்கமுந் துழைப்பார் மேனி
பரிவிலா தெறிக்க லானான்

புனலினால் பொருதி மோதும்
வங்கமே குழறச் செய்து
வலைகரை இழுத்துச் சேர்த்தார்.

சரிகைகள் இழைத்த சால்வைச்
சகிதராய் நெடிய சறுவால்
அரையிலே அணிந்து சாரன்
அதற்குமேல் மடித்துக் கட்டி

கரையிலே குடையின் நீழல்
கதைபல அளக்கு மன்னார்
வரையினை ஒத்த வாகர்
வலைக்கவர் உரிமைக் காரர்.

சன்னதக் கதைகள் பேசிச்
சம்மாணம் போட்டிருந்து
மண்ணிலே கோடு கீறி நாயும் புலியும்
மறிக்கின்ற ஆட்டம் ஆடி
கண்ணய ராதி ருந்த
வணிகரும் முதலாளிமாரும்
உன்னியே எழுந்து வந்தார்
உழைத்தவர் விலகி லானார்.

# இதயம் அளைந்துரை

காவியத்தின் கனிவு
காவிய நிமிர்வு
காவிய பரிபூரணத்துவம்
இப்படியொரு கலைத்துவ வாழ்வு
ஒருவர்க் கமைந்தது.
ஆ மு ஷரிபுத்தீனுக் கமைந்தது.
அவரது வாழ்வும் வழியும்
கலையெழில் மணக்குமொரு காவியம்!
எனவேதான்
அவர் காவிய நாயகன்!
பெற்றோர்க்கு மூத்த பிள்ளை!
ஊருக்கு முதல் ஆசிரியன்
தன்னோடு மாத்திரம் அமையாது
தன் பின்னோடு பரம்பரைக்கும்
ஆதர்ஷம் தந்த ஆளுமை!
இசைப்பா அவர் எழுது கோலைச் சல்லாபித்தது.
செய்யுள் அவர்சித்தம்
மகிழ் மோகனாங்கி ஆகியது.
நடையினிய தமிழ் நாவில்
சலங்கை ஆடியது.
சித்திரமும் கைவினையும்
கரதலங்களில் காதல் பயின்றன.
உரையாக்கம் உள்ளங்கவர் கன்னியானாள்
நாட்டுக்கவியாம் மேனகை முன்
நிஷடை குலைந்த விசுவாமித்திரன்
நாடக மாதவி
அவர்மடியைக் கோவல மஞ்சமாக்கி
அறிதுயில் கொண்டாள்
ஊரிலே, கல்விக் குலமகள்
மணமஞ்சில் அமர
ஞான காமியாய் ஆடிய
நர்த்தனம் சொல்லப் போதுமெனில்

பொழுது மாளாது.
ஜனித்து,
வாழ்வினிய வாழ்வு மகிழ்ந்து,
சமிப்பிலும் சர்வாநந்தம் காணும்
மனத்தோடு காமித்திருக்கும்
சொந்த மண்ணில்
மருதமுனை ஆம்
மகிழினிய மருதூரில்
நன்றி விழா! மகிழ்வு விழா!
மரபு எனில்
பாராட்டு விழா!
என்கின்ற
திருக்கலியாண திருநிகழ்வின்
நீங்கா நினைவாய் வெளிவரும்
காவிய நாயகன்
கனியுமொரு வாழ்வு நூலுக்கு
அணிந்துரை அல்ல இதயம்
அளைந்துரை
மகிழ்ந்து வழங்கும்
மருகனா? இல்லையா?
மகன் அவர் மனம் நிறைந்த
மாணாக்கன்.

# ஏன் பதவி மோகம்

சிற்றெறும்பு தேனீ கறையான் முதலான சிற்றுயிர்களும்,
கூட்டமாக வாழும் பறவைகளும், விலங்குகளும்,
தங்களுக்குள் தாமே பதவிகளை வழங்கி,
இங்கிதமாய் வாழும்
இயற்கை நெறி நாமறிவோம்.
ஆகவே பதவிகளும்,
அவை மூலம் அமுலாகும் சேவைகளும்,
இயற்கை வழிவந்த இனியபாடந்தான்.
சாரதி இல்லையென்றால் வண்டி நடக்காது
குறித்த இலக்கைப் பயணம் அடையாது.
ஆறறிவு பெருத அந்த உயிரினங்கள்
தலைமைக்குக் கட்டுண்டு தத்தமது கடமைகளை,
பொறுப்புடன் நிறைவேற்றி
சிறப்புடன் வாழும் சீர்மையினை நாமறிவோம்.
தலைமை வயதேறித்தளர்ந்தாலும்,
மரணத்தின்வயப்பட்டு மாண்டு ஒழிந்தாலும்
புதிய தலைமை பூசலின்றி அமைத்து,
தத்தம் கடமையைத் தடையின்றி நிறைவேற்றும்
இயற்கை வழி மனித இதயத்திற்கு நற்பாடம்.

இயற்கையின் இந்த இனிய ஒழுக்கத்தை
மனிதர்களும் கடைப்பிடித்தால்
தலைமை எனும் வண்டி தனக்குரிய தடத்தில்
உலாவந்து சற்றேனும் ஓரம் விலகாமல்
நீதி வழுவாமல் நல்ல பணி செய்தால்
மக்களும் தம் பொறுப்பை
மனமொப்பிச் செய்வார்கள்
மன்னன் உயிர்த்தே
மலர்தலை உலகு
பொன் வாக்குக் கொப்ப
மக்கள் புன்னகைத்து வாழ்வார்கள்.

*இன்றோ*
*குயில் செய்யும் தேனிசையை*
*கோட்டான்கள் செய்வது போல்,*
*மயில் செய்யும் ஆட்டத்தை*
*மந்தி புரிவது போல்,*
*கற்றவர்கள் அடையத்தகும் பதவிகளைக்*
*குதிரை விட்ட மட்டைகள்*
*அலங்கரித்து மனித சமூகத்தின்*
*ஆணிவேர், வெட்டும்*
*அடாவடிக்காரியங்கள்,*
*வீணர் பதவியெனும் அம்பாரி மேலமர்ந்து,*
*ஊர்கோலம் போகின்ற*
*ஒய்யாரக் கீழ்த்தனங்கள்,*
*எங்கும் நிறைந்து*
*இருப்பதையும் நாமறிவோம்.*

# இந்தியப் பிரதமருக்கு மோகனா விடு தூது

அறிவிலர் வளர்ந்த பிரான்ஸ் நாட்டின்
மாரிஷ புகைலெனும் மருத்துவ விஞ்ஞானி
மகப்பேற்று மருத்துவத்துறையில் மேதை
வேதங்கள் இதுபற்றி விளம்புவதென்ன?
அறியும் ஆசையில் உலக மதங்களின்
வேத நூல்களை ஆழ்ந்து படித்தார்
கருமு லங்கள் கருவாய் ஆதல்
வளர்ச்சிக் கிரமம் தாய்வயிற் றிலிரு
இருட்சிறை இருப்பு பிறப்பு என்று
இந்த இருபதாம் நூற்றாண்டமைவில்
அறிவில் ஆய்ந்து கண்ட முடிவுகளை
அன்றே குரஆன் அசசொட்டாக
அறிவித் துளதே! அறிந்து வியந்தார்
ஆய்வுத் தனத்தை மேலும் விரிக்க
பிரபஞ்சத் தோற்றம் அமைப்பு, இயக்கம்
அழிவு விண்வெளி மறுமம் என்று
விஞ்ஞானம் கண்ட முடிவுகளைக் குர்ஆன்
விண்டுரைப் பதுவும் கண்டு வியந்தார்!

குர்ஆன் என்பதோர் அறிவியல் புதையல்
அதனைச் சரியாய் விளங்கவும் விளக்கவும்
மனித அறிவும் ஆய்வும் மேலும்
மேலும் வளர வேண்டும் என்றார்....
விஞ்ஞான ஒளியில் பைபிளும் குர்ஆனும்
என்றொரு ஆய்வுநூல் ஆக்கி அளித்தார்
மோகனா!
புதிய டில்லிக் கோட்டைக்குப் போய்,
ஹிந்துஸ் தான வல்லரசு கண்ட
இணையில் பிரதமரும் கவிஞரும் ஆன

அதல்பி ஹாரி வாஜ்பே அவர்களிடம்
“சிஞ்ஜீல் என்பது எரிக்கும் அணுக்கல்
அபாபீல் என்றால் ஏவும் எறிகணை!
ஆனைப் படையை ஆழப்புதைத்தவை!
பாருங்கள் ஐயா அணுப்போர்
பற்றி குர்ஆன் எப்பவோ கூறி விட்டது.
மாரிஷ புனலின் அந்த நூலை
உடனே நீங்கள் படிக்க வேண்டும்”
என்று தூது மொழியை
நளின நாவால் நவின்று வாயேன்

# பேசச் செய்யும் விதியின் கை

*பெரியார் அண்ணா நாவல ரென்றே*
*வரிசையில் நின்று ஊர்வலம் வந்தவர்*
*அண்ணா உயிருடன் இருக்கையிலேயே*
*கண்ணைப் பலரும் குத்தியிழந்த*
*தி மு காவின் பொதுச் செய லாளர்*
*தாமே யான நெடுஞ்செழி யனார்*
*இருபதாம் இந்த நூற்றாண் டுக்கு*
*குர்ஆன் என்பது ஏற்றதென*
*பேசிப் பெரிய பரபரப் பாகப்*
*பேசப் பட்டான் அதனால் போலும்*
*அடுப்பி லேறிக் கொதித்த போதும்*
*கொடுப்பி லேறக் கதை யுமாகி*
*மோகங் கொண்ட முதல்வர் பதவி*
*ஆகா தவர்க்கு ஆகிப் போனது*
*இருபத் தோராம் நூற்றாண் டுக்கு*
*குர்ஆன் பொருத்தம் ஆகா தென்று*
*பெருமைக் குரிய பாரத நாட்டுப்*
*பிரதமர் வாஜ்பே புகற்றிட் டார்கள்*
*ஆணிகள் கழன்று அரியனை கடந்த*
*போணி யடைந்த கதையா கிடுமோ?*
*ஆவதை நம்மால் அழித்திட லாமோ?*
*பாவம் நம்போல் பாவலனாகி*
*நுழலும் வாயால கெடுமென்......*
*வில்தன மாக விண்டும் போனார்*

# வேண்டல்

உச்சிக்கு மேலே உயர்ந்துவிட்ட சூரியனும்
கச்சை இறுக்கிபார் காய்ச்சத் துணிந்துவிட்டான்
அப்பாடா என்ன அகோரம் எனத்தெருவின்
கூடப்பாடு போட்டுக் குமுறுகிறான் ஓர்கிழவன்
பாயில் வரியாய்ப் பரப்பிவைத்து வெய்யிலிலே
காயும் கருவாட்டைக் கண்டே பெருமித்ததில்
பூரித்துச் சந்தோஷம் பொங்குகிறாள் ஓர்கிழவி
சாரம் நனைத்துச் சவர்க்காரம் பொங்கநுரை
பூசித் துவைத்தழுக்கும் போக்குகையில் வையத்து
நீசத் தனமெல்லாம் நீங்காதோ என்கின்ற
எண்ணத் தரங்கினிலே எற்றிவிளை யாடிமனம்
பன்னியொரு செந்தமிழ்ப்பா பாடத் துணிகையிலே
“இந்தாந்தா! பாபா” எனுமோசை காதினிலே
வந்து குழலும்யாழ வந்ததிசை நோக்கிநின்றேன்.
யாழின் நரம்புகளை யாருமே மீட்கவில்லை
வேழம் மயங்கிடவும் வேய்ங்குழல் ஊதவில்லை
என்றன் வளவின் ஒருமருங்கில் பூரித்து
நின்று செழித்து நிலத்துக் கழகூட்டும்
மாங்கன்றின் கீழ்ப்பிறந்த மேனியனாய்ச் சின்னமகன்
பூங்கரத்த்ற் சோறு பிசைந்தே மறுகையால்
தோண்டுகிறான் மண்ணைத் தொடருகிற அன்பழைப்பில்
நோண்டுகிற வாதையிலே
நெஞ்சம் வலிக்காதோ?
வாண்டுமகன் உள்ளத்து
வாஞ்சை மழைதோய்ந்த வேண்டல்.

# விதைக்கப்பட்ட விளைவு

முன்னாளில் பசுமையும்
அமைதியும் தனமாகி
அழகும் கலையும்
கொலுவிருந்த சோலைதான்
காலங்காலமாய் வீசிய விஷக்காற்றை
உள்வாங்கியதன்
விளைவு இது.
என் இளந்தளிரைத் தானும்
மென்றவுடன்
கண்கள் சொருகச்
சுருண்டு விழுகின்றீர்

சந்தேகம் வேண்டாம்
சுவர்க்கத்து நீரருவி தேங்கிய
தண்புனல் தடாகந்தான் நேற்றுவரை
மந்தைகள் பட்சிசாரங்கள் மனிதர்கள்
தாகந்தீர்ந்து
புத்துணர்வு பெறப்
புளக முற்றது உண்மைதான்
மாரிதோறும்
அமில மழை பொழிந்து
என்னை நிரப்பியதன் விளைவு
குடித்ததும் குப்புற விழுகின்றீர்
சோலையிலும் தடாகத்திலும்
பசிய முகை உடைத்து
வண்ண வண்ண நிறங்களில்
வண்ண வண்ண வடிவங்களில்

பூத்துக் குலுங்கிப்
புதுமணத்தைச் சிந்தியதும்
தேனமுதைச்
சுரத்தும் உண்மைதான்
பருவந்தோறும் தழுவிய
நச்சுத் தென்றலும்
கொட்டிய அமில மழையும்
எமது சுயத்தை
இழக்கடித்து விட்டன.
பூமணத்தை முகர்ந்து
தேனமுதை உறிஞ்சி
துவண்டு விழுகின்றீர்.

அதோ!
மூண்டுவிட்ட நெருப்பில் அவியாகி
வரவிருக்கும் வசந்தத்தில் புடமாகி
எங்கள் சுயத்தை அடையும் வரை
இந்த
விஷந்தோய்ந்த வீறாப்பு
விட்டு விலகாது.

# வெண்ணிலா

நீல வானக் கடல் மீது
நீந்தும் வெள்ளி ஓடம் உனை
பாலை நில வாய்ச் சிந்தும் வானி
பசுவென் றழைத்தல் பிழையாமோ
வளர்ந்து வளர்ந்து வானகத்தில்
வட்டம் போட்டு ஆளும் நீ
தேய்ந்து மறையும் மாயத்தை
தெரிய உரைக்கக் கூடாதா?
கூனப் பிறையாய் வரும் பொடியா
கூட வெள்ளிப் பொடிச்சியினை
ஏனோ தலைமேல் வைத்துள்ளாய்
அவள்உன் இனிய காதலியா
குனிந்து முற்றம் கூட்டி நிற்றி
கூனக் கிழவியை முட்டியதால்
சினைந்து ஈர்க்கில் வாருகால்
சாத்தினாள் என்பதும் நிசமாமோ
எட்டும் தொலைவில் வந்து நின்று
இதயம் மகிழத் தவழ்ந்தாயாம்
பட்ட அடியால் தூரத்தில்
போனாய் என்றும் சொல்லுகிறார்
கூனக் கிழவியை இழுத்தெடுத்து
மீளாச் சிறையில் வைத்தாயாம்
உன்னில் கரிய மறுவாக
திருப்பவள் வுந்தக் கிழமாமோ
நடந்ததை மறந்த வெண்ணிலவே
நானிலம் தழுவ வாராயோ
அழைத்து மகிழப் பாலகர்கள்
ஆர்வம் மிகுந்து துடிக்கின்றார்.

# புதுப்பாடம் படிப்பித்தாய்

“பாழான கொதிபாலை உமிழ்தீய்க்கும்
பயமின்றி வருகின்றேன் நினதோடு
சூழ்கின்ற கனலாறக் குளிர்சிந்திச்
சிதையாதுன் சுகம்வாழ வகைசெய்வேன்
வாழ்வென்னும் களங்கண்டு பகைசாய்க்க
வருகின்றேன் துணையாக” எனச் சொன்ன
யாழ்வென்ற குரலின்று வளியோடு
அலைகின்ற தெனுமுண்மை மறவாதே!

வாடகைக்குக் குளிர்தாவி உடன்கொள்ளும்
வாதைக்கு நெருப்பாக இருப்பாய் நீ
பீடைக்குப் பழம்பாயில் படுக்கும் அப்
பொதைக்கு மருந்தாய் இருப்பாய் நீ

காலங்கள் கரைந்தாலும் பெரியோர்
கனவென்றும் நனவாகும் பிரபஞ்ச
கோலங்கள் நிலைமாறி அழிந்தாலும் எனதன்பே
சீலங்கள் யுகம்நீ அழிந்தாலும்
குலையாத துணிவோடு நினதோடு
வாழ்வென்றும் பகைக்கே
வருகின்றேன் துணையாக எனச்சொன்ன

காசும் பொருள்பண்டமும்
கணிகையர்கள் தானமும்
சாடாது கோளுரையும்
கூறிப் பதவி பெறும்
கோமான்கள் ஒரு சிலரே
தாயை, சகோதரியை, தந்தையை, மச்சானை

நேயரை, நண்பரை நல்லாரை
துரோகமெனும் சாக்காட்டில்
தள்ளிப் பதவியெனும்
மின்பிடிக்கும் கரையான்கள்
கறையான் புத்தெடுக்க
குடிகொள்ளும் கருநாகம்
ஆன இவர்கள் அடிக்கின்ற பறையொலியை
மேள இசையென்று மெய்மறக்கும் ஆளவந்தார்
பொம்மை நடனம் புரிகின்ற திருக்கோலம்
ஆடலரங்காய் ஆகிவிட்ட இந்நாடு
பதவி மோதிகளின் பிடியில் சீரழியும்
அவலம் இருள்கழைய
ஆயிரம் சூரியன்கள்
உதிக்கும் ஒரு நாளை
உவப்போடு எதிர்பார்ப்போம்.

# கவிஞன் பணி

நல்ல எதிர் காலமையா
நாம் காண எண்ணுவது
சொல்லில் வடிப்பதெலாம்
தூயகலைக் காவியமாய்
வெல்லச் சுவைதந்தே
வீங்குபுகழ் பூத்ததென்று
வல்லவர்கள் காமம்
வரையாதே ஓதுகின்ற
நல்ல எதிர் காலமையா
நாம் காண எண்ணுவது
வாழ்க கையிலே நம்பிக்கை
வளர்ப்ப தையா என்குறிக்கோள்
தாக்கும் இடரை
தகர்த் தெறிந்தே முட்களிடை
பூக்கும் மலரெனவே
புன்மைகளை நீக்கியென்றும்
ஆக்குந் திறமையினை
அடைந்ததிலும் வெற்றிகொள
வாழ்க்கையிலே நம்பிக்கை
வளர்ப்பதுவும் நம் குறிக்கோள்.

வெயிலைக் கடுமழையை விரவும்
கவிஞன் சபதம் குளிர் பனியை
துயிலைப் பொருளெனநான்
துயரின் வசமழிய
வயலில் உழுதிடுவேன்
வளவாழ்வினை அடைவேன்
குயிலின் இசை எனது
குறியைத் தொடமுடியா
ஆலைத் தொழிலாளி
ஆவேன் அது வாழி

நூலைத் தறிசெய்வேன்
நூலாடைகள் நெய்வேன்
கூலிக்கிருகாசு கொண்டே
மனை செல்வேன்
மாலைமதி வந்தென்
மண்குடிலுள்
சுக்குத் தண்ணீர்
வெற்றிலையோடு சுதிபீடி
செக்குப் போலும்
செய்வன யாவும் செய்கின்றான்
புக்குப் புக்கென்றூதும்
அடுப்புப் புகைஏறி
கக்குக் கக்கி தும்மல்
எழுந்து கதைபேசும்
கடைசியில் வந்த அலுவலை
வடிவேல் காதுக்குள்
விடவும் இடுப்புச் செருகல்
அவிழ்த்தான் எடடநீ
கொடையிற் குமணன்
என்தென் மனதுட் கூறும் முன்
அடைவுத் துண்டால் அறுவான்
அதையேன் வலியவே.

ஒன்றுலகம் அனைத்துமொரு
குடும்பத்தில் வாழ்கின்ற
உயிர்கள் யாவும்!
என்றிருக்க வேண்டுமந்த
இல்லாமை எனும் பிணிதான்
இம்சிக்காமல்
கொன்றழிக்க வேண்டுமடா!
கொலைக்கருவிஅனைத்தையுமே
கொளுத்த வேண்டும்!
நன்றினுக்கம் செயல் வேண்டும்
நாடுபிடித்திடுமாசை
நலிதல் வேண்டும்!

நீருளதேல் அதன் துளிகள்
ஒவ்வொன்றும் நெல் விளைத்து
நிதியம் தேட
ஏருழுவோர் தமக்கே வுலகத்தின் நிலமெல்லாம்
எழுத்தில்லாது
போருளதேல் அது அன்புப்
போரென்று புவியாவும்
புகழ்தல் வேண்டும்!
உழையாமல் உண்ணுகின்ற
ஒரு மனிதன் இருப்பின் அவர
ஒழிக! நாட்டில்.

தொழில்வளமே பெரிகிடுக!
தொன்மை மிகும் வள்ளுவனார்
குறளாம் அன்பு
மழையினிலே மனிதமெனும்
பயிர்விளைக! மானிலத்தில்
மடமை மாய்க!
விளையாடும் சாந்தியயெனும்
வியன்குழவி கண்டுவய்யாள்
உலகத்தாயே!
பக்கத்தில் நின்றவனைப்
பார்க்கத் தவறிவிட்டு
திக்கெல்லாம் சென்றே
திருக்கோயில் கூட்டத்திற்குள்
புக்கு எனைக் காண்பதற்கே
பூப்பார் பலவருதல்
எக்காலம் காண்பாரோ
என் ஓர்க்கும் வேலையே!

தோணியிலே ஏற்றிமிகத் தூரம் - வலை
துணையோடு செல்லுகிற விதம்
காணில்அவர் குடும்பப் பாரம் - நமது
கண்முன்னே தோன்றுமந்த நேரம்

கல்லூரிப் பட்டங்கள்
தாங்கி அலைவோரை
காலாட்டிக் கொண்டுழைக்கும்
கனவான்கள் தம்மை
செல்வாய செல்வங்கள்
சேர்த்துவைத்தும் வாழ்வைச்
செம்மையிலே ஓட்டாத
சின்னவர்கள் தம்மை
சொல்லத பலவீனம்
சொந்தமெனக் காயின்
சோர்ந்துவிடப் போவதில்லை
வேந்தர்களின் முன்னும்
நல்லோரை நாடுய்ய
உழைப்பவரைக் காணின்
நலிந்துருகும் பலவீனம்
நமது பலவீனம்.
மேதினம் வந்ததடி - தொழில்
மேன்மை தெரிந்ததடி
ஏதினி துன்பமடி - எமக்கே
மேதினி சொந்தமடி.

# இருளின் குழந்தை

இருளின் குழந்தையென
உலகில் பிறந்தவன் நான்
இருளையே போர்வையெனப்
போர்த்துழன்ற பெற்றோரின்
அருமைக் குழந்தையென
அவதாரம் செய்தவன் நான்

இருள் கவிந்த சந்தில் - இன்னும்
இருள் நிறைந்த குச்சிலில்
கருவாகி அன்னை
கருவறையின் இருட்டுக்குள்
உறைந்து இருள் சூழ்ந்த
ஓருரில் பிறந்தவன் நான்.

தத்தித் தவழ்ந்த தரையெல்லாம் இருள்மயமே!
எற்றிவிளையாடி மகிழ்ந்ததுவும் இருள்புலமே
பற்றி ஒருசிறுமி கருங்குவளைக் கையிரண்டை
ஒற்றி முகத்தில் ஒளித்து விளையாடியதும்
சிற்றில் அமைத்துச் சோறாக்கி அவளூட்ட
கிட்ட இருந்து கிளுகிளுத்துக் களித்ததுவும்
நட்ட நடுநிசிக்கு நிகரான இருட்போதே!
இருளின் உலகத்தை ஓர்மையுடன் முகங்கொண்ட
திருவான அன்னை கண்திறக்க மறுத்ததுவும்
ஊரவர்கள் கூடி உயிரற்ற அவளுடலை
தூரக் கிடந்த சிறுகாட்டில் கொண்டுபோய்
ஆழப் புதைக்க அவள் அயர்ந்ததுவும் இருள் மனையே!

தந்தையென்ற இருளின் தனயன் கரம்பற்றி
உந்தி நடந்த தடமும் இருட்தடமே!

வந்து உறைந்த சேரியும் சிறு குடிலும்
பந்தமாய் இருளோடு பழகிய பாழ்வெளியே
இருள்நிறைந்த அந்தக் குடிசையின் நாயகியாய்
அருளொழுக மடியில் இருத்தி அரவணைத்து
அன்பு மழைபொழிந்த மறுதாயும் இருள் மகளே!

இருளின் குழந்தையென
உலகில் பிறந்தவன் நான்
இருளையே போர்வையெனப் போர்த்துழன்ற
பெற்றோரின் அருமைக் குழந்தையென
அவதாரம் செய்தவன் நான்.

# தாமரையின் ஊடல்

கள்ளால் நிறைத்த வெள்ளிக்கிண்ணம் - வெள்ளை
கமலத்தாள் நின்றிருந்த வண்ணம்
அள்ளிப்பருக மனத்திண்ணம் - அங்கு
ஆசைவண்டு ஓடிவந்த எண்ணம்

இரவெல்லாம் முல்லையுடன் நேசம் -காலை
இன்னேரம் மட்டும் என்மேல் நேசம்
கருவெல்லாம் நான் அறிவேன் மோசம் - ஆணகள்
காதலென்று சொல்வதெலாம் வேஷம்.

என்றே தன் கோபமெலாம் கூட்டி - கமலம்
ஏசுகையில் வண்டுபல்லைக்காட்டி
ஒன்றும் அறிந்திடேன் சீமாட்டி - வீணாய்
உனக்கேனோ முல்லையுடன் போட்டி.

சொன்ன வார்தையினை க்கேட்டு - அவள்
படும் துப்பாக்கி வேட்டு
விட்டுவிடில் சினேகம் என்ற சாட்டு - கண்
பட்டுவிடில் பல்லழகி கூட்டு.

கட்டழகி நீ மதுவைச் சொட்ட - கணிகை
நின்மய லை நாடுவனோகிட்ட
விட்டுவிடு கோபத்தினைஎட்ட - என்று
வீணை மீட்டி வண்டருகில் ஒட்ட

பாட்டால் மயக்கி எனை நாளும் - என்
பருவம் சுவைத்ததினிப் போதும்
மாட்டேன் மறதியினைக் கேளும் - அந்த மாதரசி
மாருடன் போய்வாழும்.

உன்னைப் பிரிந்தெங்கு போவேன் - இந்த
உலகத்தை விட்டு இன்றே சாவேன்
என்னை உனக்கின்றிக் காவேன் - எந்த
எழிலரசி மேலுமினித் தாவேன்.

வண்டின் வருத்தங்கண்ட வஞ்சி - தன்
வண்ண இதழ்திறந்து கொஞ்சி
கண்டின் இசைபாடக் கெஞ்சி - நின்றாள்
கானம் பிறக்கும் யாழைமிஞ்சி.

# புலவர்மணி

அல்-மனார் என்னும் நம் அன்னை மணிவயிற்றில்
பள்ளிகொண்ட பிள்ளையிவர் பக்குவம் வாய்ந்தவர்கள்
பாத்திறத்தால் வையத்தைப்பாலிக்க வந்ததிருக்
கோத்திரர் பாருங்கள் குறுஞ்சிரிப்புப் பூக்கின்றார்
தேனையே பாகாக்கிச் செய்தெடுக்கும் எண்ணெய்
பணியாரம் வாய்க்குப் படைப்பார் சிலுசிலுப்பு
வேண்டாத கூட்டமிவர் வாய்ச்சலாக் குப்பைகளைத்
தீண்டாத நோன்புடையார் சொல்புதிதாய்ச் சொல்லும்
பொருள் சிறந்ததுவாய்ப் பாடுகின்ற பாணி
அருமையாய்க் கேட்போர் அலுப்புக்கு ஔஷதமாய்
நீளம் குறைத்து இரட்டிக்கும் உத்தியினை
ஏலுமட்டும் கத்தரித்துப் பாடஇருக்கும் பாவலர்காள்
பாவிக்க வந்த புலவர் மணிஐயா!
சோலிகளைச் சற்றே துறந்துவிட்டு வந்திருக்கும்
நண்பர்காள் நல்ல கவியுண்ணும் நாட்டமுள்ள
அன்பர்காள் பாவலர்க்கு ஆடகப்பொன் மாலையன்றோ
சூடத் தகுந்ததுவாம் செய்வீரா? போகட்டும்
வாடாது உள்ளமவர் வாஞ்சையுடன கைதட்டி
ஊக்கம் கொடுங்கள் சமாதானம் சாந்தி
பூக்கப் பொலக புவி.

# கொண்டாடுவோம் சமத்துவ வழி பற்றுவோம்

இருள் சூழ்ந்து சிறைப்பட்டு உலகம் காடாய்
இழிவுற்று நலிவுற்று இருந்த தன்று.
வெறிகொண்டு தனுப்போட்டு வேங்கைக் கூட்டம்
வேட்டைக்கும் மேலாக வேட்டை யாடித்
தறிகெட்டு அலைந்தமளி செய்த காலை
தகவுரைத்து வாழ்த்திற்று கூகைக் கூட்டம்
பொருளற்ற துயர்வாழ்விற் பிணைந்த மான்கள்
புலராதோ பொழுதென்று பொருமி ஏங்கும்.

கீழ்மையிலே வாழ்ந்துழன்ற அவற்றின் நெஞ்சக்
கிளர்வுகளின் கட்டியமாய் கவிந்து நின்ற
கீழ்மைகளைத் துடைத்தெறியும் பேரார்வத்தின்
கீற்றுகளாய்ப் போர்முரசாய் கனவின் ஊற்றாய்

ஏழ்மைகளைத் தகர்ப்பதற்கோர் ஏவு கணையாய்
எத்தர்களைத் தீய்த்தளிக்கும் எரி வெந் தணலாய்
கீழ்வானிற் செஞ்சுடரின் கற்றை, தோன்றிக்
கும்மிருட்டை உலுப்பித்து ஒரு நாட் காலை.

அன்றந்தப் பாலையிலே உதித்த ஜோதி
அஞ்சாது துஞ்சாது ஆர்த்தெ ழுந்து
சென்றோடி மூலையெலாம் துழாவிப் பார்த்துச்
செறியிருளின் படையழித்துச் சினந்த வேங்கைக்
குன்றுகளைத் துகள்செய்து குமைந்த மான்கள்
கொத்தடிமை விலங்கொடித்துக் குறைகள் தீர்த்த
பொன்றுத பெருங்கருணை முகம்மத் என்னும்
புகழ்ப்பெயரைக் கேட்டுலகம் புளகிற் றன்று.

# நீசங்கள் உளவென்றும் நிரூபித்தாய்!

வாடைக்குக் குளிர்தாவி உடல்கொள்ளும்
வாதைக்கு நெருப்பாகிக் கனல்வாய் நீ
பீடுற்றுப் பழம்பாயில் படுக்கும் அப் பீடைக்கும்
போதைக்கு மருந்தாகிக் கலப்பாய் நீ
நாடிக்குள் விரைந்தோடும் இரத்தம் ஓர்
நாளுக்குத் தகைந்தால்நீ அதுவாகி
வாடிக்கை புரிவாயென் றெதிர்பார்த்த
வாதிக்கு எதுமாற்றம் புகல்வாய் நீ

நீயென்றன் நினைவுக்குள் விருந்தாகி
நெஞ்சத்தே மழைபெய்த அதுபோழ்து
நானுன்றன் நினைவாலே மயலாகி
நாசங்கள் அணுகாத பெருவாழ்வு
தானென்றே இறுமாந்தேன் உனதன்பின்
தாழென்றும் அடையாதென் றுயிர்வாழ்ந்தேன்
நீயின்றே புதுப்பாடம் படிப்பித்தாய்
நீசங்கள் உளவென்றும் நிரூபித்தாய்!
காலங்கள் கலந்தாலும் பெரியோர் காண்
கனவென்றும் நனவாகும் பிரபஞ்ச
கோலங்கள் அழிந்தாலும் எனதன்பே!
குலையாத துணிவோடு நிசமாக
வாழ்வென்னும் களங்கண்டு பகை சாய்க்க
வருகின்றேன் துணையாக எனச்சொன்ன
யாழ்வென்ற நினதன்புக் குரல்காற்றில்
அலைகின்ற தெனுமுண்மை மறவாதே!

# தங்கமுடியில் முள் முளைத்தால்....

*தங்க முடியை அணிகின்ற*
*தலைக்கு உண்டு பேரழகு*
*பொங்கும் பசிய வாழ்வென்னும்*
*புதிய வெள்ளம் ஆழ்ந்தின்பம்*
*தங்கி ஆன்ம நிறைவையது*
*தருதல் கூடும் எனில் யாரும்*
*சங்கை மிகுந்த பொன்முடியைத்*
*தலையிற் சூடல் பிழையல்ல.*

*தங்க முடியின் உள்ளேமுன்*
*தளிர்ந்து நுனிகள் கூராகிப்*
*பொங்கி இரத்தம் குடித்தற்குப்*
*புளகம் மிகுந்து தலைவழியே*
*அங்கம் முழுதும் விடம்பாய்ச்சி*
*அழிக அழிக என வாழ்வைப்*
*பங்கப் படுத்த முளைத்த தெனில்*
*பறித்து எறிதல் பிழையல்ல.*

# தனக்குவமை இல்லாத தலைவ!

*பட்டிருப்பின் கீர்த்தியினைப்
பாட்டிசைத்த மாணிக்கமே!
கட்டறுத்து, விண்ணைக்
கலங்கடித்து, - விட்டெழுந்த
ஏவுகணையாய் உரிமைக்குப் போராடிப்
பூவில் அடைந்தாய் புகழ்!*

*ஏறு நடையை எளிமைத் திருவுருவை!
ஆரும் மயங்கும்
அருள் நோக்கை - பாராண்டும்
பொன் குவித்துச் சேற்றில் புரளாத
தூய்மையினை எண்ணி உருகு திதயம்!*

*எனக்கொரு வாழ்வை
உவந்தளித்த ஐயா!
தனக்குவமை இல்லாத் தலைவ! - மனக்கினிய
நெஞ்சில் எனை இருத்தி
நேசித்தோய்! ஏழையென்
அஞ்சலியை ஏற்று அருள்!*

# பாலம்

பாலம் போட்டுப் பார்க்க ஆசை
பாலம் மீது சாரி போகும்
பாண்மை கண்டு மகிழ ஆசை

வாய்மை சிந்தி வழி கரையில்
வாழு மினிய கோலம் சீர்மை
பாயு செஞ்சொற் பரவின் வேகம்
பாய்ச்சி மேன்மை விளைப்பதாலே
தூய்மை யென்ற கரையிற் பொங்கி
துளும்பு மினிய அமுத வெள்ளம்
வார்ந்து நெஞ்சு அளைந்து இதவு
வழங்கி யங்கு அழைப்பதாலே.

பாலம் .....

நேர்மை யென்ற நீள்கரையில்
நிலவு வண்ணக் காட்சி யின்பம்
சோதி வெள்ளம் சிந்தி நின்று
தொடர்க என்றே அழைப்பதாலே
அன்பு என்ற கரையிலாடு
அழகு சிந்து மரு மலர்கள்
கொள்ளை கொண்டு இதய வானிற்
குயிலி னோசை பிழிவதாலே.

பாலம் .....

பொறுமை யென்ற கரையிற் குலவு
பொலிவு மதுர மழலை பெய்து
வருக வென்று குழைந்து வின்பம்
வாரி வாரி இறைப்பதாலே...
கருணை யென்ற கரையி லென்பு
கரையு வண்ணம் அமுத மாரி
பொழிதல் கண்டு நெகிழு மிதயம்
போபோ வென்று புகல்வதாலே

பாலம் .....

# பதவிக்கு உரியோர்

*சிற்றெறும்பு தேனீ கறையான் முதலாக*
*சிற்றுயிரும் சேர்ந்துவாழும் பட்சி விலங்குகளும்*
*தங்களுக்கு வேண்டும் பதவித் தரந்தந்து*
*இங்கிதமாய் வாழும் இயற்கைநெறி யாமறிவோம்*

*ஆறறிவு இல்லாத அந்த உயிரினங்கள்*
*ஆரார் பதவிக்கு அருகதை என்றாய்ந்து தானைத்*
*தலைமையினைத் தந்து அவர்போடும்*
*ஆணைக்குக் கட்டுண்டு அன்போடுவாழுகின்ற*
*அந்த இயற்கை அமைப்பைச் சற்றேனும் சிந்தனை*
*செய்தல் சிறப்பே ..........*

*தலைமை தளர்வுற்றால் சாவில் சமைத்தல்*
*தலைமை தருந்தவர்க்கு தந்து மனமொப்பி*
*வாழும் இயற்கை வழங்குகின்ற மேலான*
*சீலத்தை மானிடரும் செய்முறையாய்க் கொண்டால்*
*தலைமையென்ற வண்டி தனது தடயத்தில்*
*உலாவந்து சற்றேனும் ஓரம் விலகாமல்*
*மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகென்ற*
*பொனவாக்குக் கொப்பமக்கள் புன்னகைத்து*
*வாழ்வார்கள் மானிட வாழ்வும் மாற்றவொணா*
*இயற்கை நெறி பேணும் நலமும் பெருகும்.*

*குயில்செய்யும் தேனிசையைக்*
*கோட்டான்கள் செய்வதுபோல்*
*மயில்செய்யும் ஆட்டத்தை*
*பக்தி புரிவதுபோல்*
*கற்றவர்கள் செய்யத்தக்க*
*காரியம் குதிரைவிட்ட*

மட்டிகள் செய்ய முனைந்து சமூகத்தின்
ஆணிவேர் வெட்டும்
அடாவடிக் காரியங்கள்
வீணர் பதவியெனும்
அம்பாரி
மேலமர்ந்து
ஊர்கோலம் போகின்ற
ஒய்யாரக் கீழ்த்தனங்கள்
வேரோடிப் போயும் - இன்றைத்திருநாளில்
பெற்றோர் பதவி போதுமா மேலும் மேலும்
உற்று உயிர்வேர் ...... தருவோரிற்
சப்பாத்தில் ஒட்டியுள்ள
சாணி மலம் சேறு
சப்பாத்தி நெய்மற்கற் சவ்வாதுச் சார்......
நக்கி இலக்கணத்தில்
நாக்குகள் தேய்ந்துள்ள
குக்கலின் கூட்டம்
கொலுவருக்கும் காலமிது.

காசும் பெருபண்டம்
கணிகையர் தானமொடு
கூடாது கோளுரைகள்
கூறிவரும் பெற்றெடுத்த
தாயைச் சகோதரியை
தந்தையை மச்சானை
நேயரை நண்பனை
நல்லாரைப் பின்முதுகில்
குத்தித் துரோகச்
சாக்கடையில் மீன்பிடிக்கும்
மெத்தப் பெரிய பரதரவர்கள் செல்லெடுத்த
புற்றில் குடிகொள்ளும்
பூநாகம் ஆனவர்கள்
தட்டும் பறையொலியை
மேள இசையென்று

பொம்மை நடனம் இ.... ஆனவர்.....
தம்மை மயக்கித்தம்
காரியம் முடிப்போர்கள்
புத்தர் காவியத்தின் ஓர்மைகள் தம் கழுத்து
சுத்தம் புரிவது துதிப்போர்க்கே இவ்வுலகு
பொம்மை நடனம் புரிகின்ற ஆணவத்தார்
அம்மான்கள் மூலம் எதையும் அடைகின்ற
சித்தர்கள் தா................. தியா............
புத்தர் இருந்தார் புவி.

# ஓ......நற்றலைவி

ஓயா துழைத்து மனைவிளக்கு
ஒளிகுன் றாது காத்த தவம்
தாயார் விட்டுச் சென்றவிடந்
தனைநன் றியற்றல் யாரென்று
பேயா வறைபட் டலமந்த
பேதை என்ன நின்தந்தை
ஓயா தழுது செயலற்று
விடிந்த காலை துணிவோடு

ஓ.... நற்ற லைவி நீ எழுந்தாய்
உறுத்தும் துயரில் சக்தியினைக்
காண முயன்று புத்துணர்வு
கண்டாய் கவலை புறங்கண்டாய்
காவின் பசிய மென்மலராய்க்
காட்சி நல்கும் இளமகளே
ஓ.... நற்ற லைவி நீவாழ்வில்
உயர்க! உயர்க! உயர்ந்திடுக!

தேனீ எனவே சிட்டெனவே
செம்மாந் துலவும் தென்றலென
வானிற் கழுகு தருநிலவாய
வலம்வந் தில்லம் நிறைவிக்கும்
மானே, கலைஞன், இளமகளே,
மனதில் நிறைந்த திருமகளே,
நீ நன் றுயர்க நின்வாழ்வில்
நிறைவு பொலிந்து பொலிந்திடுக!

# டி கிளாக்குக்கு ஒரு பாமாலை

*உடுக்குலம் பொடியாகித்
தலைமீது வீழ்ந்தாலும்
எனது பணி ஓய மாட்டேன்
என்றோதி விடுதலைச் சங்கநா தம் செய்து
ஓங்கார மாக நின்றோன்
கொடுமைக்குமேற் கொடுமை
இழைத்திட்ட போதிலும்
தன் மக்கள் விடுதலைக்காய்
குறியாக குலையாத மனவீரன்
நெல்சன் மண்டேலாவின்
எடுத்தபணி வென்றிட
உருக்கு மனம் கொண்டுடன்
உழைத்திட்ட டீக்கிளாக்காம்
உண்மைக்குத் தலைசாய்த்த
வெள்ளை மனத்தினன் நீ
உண்மையில் வெள்ளையனும் நீ
கொடுமுடியால் வரலாற்றில்
கோலோச்சும் உன்மேன்மை
கூற ஒரு நாபோதுமோ?
கொஞ்சுமென்மன மலர் குவியல்கள் தமையேற்று
கொள்ளுவாய் மகிழ்ந்து நீயே!*

# இழப்பு

உன்னை இழந்தேனா? இல்லை
என்னையே நானிழந்தேன்

நெஞ்சத்துப் பூவிதழின்
அணுக்களிலே நீயுறைந்து
வீசுகின்ற மென் மணத்தில்
வசமாகி நெக்குருகி
அடையும் துயரத்தை
வடிக்கமொழி தெரியவில்லை.

பொன் மணி வைர வைடூரியங்கள்
கொண்டு குவித்த பெருமலையைத் தானும்
உனக்காய் இழந்திருக்கலாம்
உன்னை மாத்திரம் இழந்திருக்கக்கூடாது
இழந்து விட்டேன்.

செஞ்சொல் கவியமுதச் சுவையை
விஞ்சுகின்ற நீ

இயற்கையின் வனப்பையெல்லாம்
இழந்து நின்றதில் வியப்பென்ன!

சூரியனை விலக்கிவிட்டு
வானத்தில் பூத்த புதுச்
செங்கழுநீர் மலராக
மேகத்திரை விலக்கி
என்னுள் சுடரை
ஏற்றிவிட்டு
தேடாத் திரவியமாய்
கோடிதவம் கொண்டாலும்
வாய்க்காத வரமாக
நீயென் மடியில்

மிதக்க நின்ற பாக்கியத்தை
சூழமறுத்த ஏழை மதியை
எண்ணிக்குமையும் மனம்.

இனிய கலைக் கனவின்
பொருளாக வந்த உன்னை
வரிதாய்ப் பிரிந்து
வந்தென்ன கண்டுவிட்டேன்?
மென்மனத்துப் பஞ்சணையில்
தாலாட்டிய பூங்கொத்து
சப்பாத்துக் கள்ளிகளாய்க்
குத்தி உதிரம் குடிக்குமிவ
வேளையில் உன்
கைத்தலம் பற்றாக்
கவலை கடலாகிறது.

முற்றத்துச் செவ்வரத்தை
மரக்கிளையில் தனியாக
பூக்குடிச்சான் குருவி பாடுவது
தேனிசையா? இல்லை
அது உன் தூது மொழி
என்ற உணர்வு உறுத்துகையில்
இந்த இதயம் இற்று உலிகிறது.

உன்னை நினைக்காத
ஒரு கணத்தின் மென் சுகத்தை
எண்ணித் தொழுதாலும்
ஏமாற்றம் நகைக்கிறது
உன்னை இழந்த
துயரத்தின் புண்ணாற்ற
எத்தனை பிறவி
எடுத்தாலும் ஆகுமா?
உன்னை இழந்திருக்கக் கூடாது
இழந்துவிட்டேன்.

# தாடி வளரட்டும்

*ஆசைகளை வென்றெடுத்து*
*அமைகின்ற யோகத்தில்*
*பாசமில்லை யென்றாலும்*
*பரவுயிராம் பெண்களின் மேல்*
*நேசமிலை யென்றாலும்*
*நம்மினிய தோழர்களே!*

*எங்களது தாடைகளில்,*
*எடுப்பாய் மிகச் சடைப்பாய்*
*தாடி அதன்பாட்டில்*
*தழைத்து வளரட்டும்!*

*இன்று இனியவர்போல்*
*எம்மை வலம் வருவோர்*
*தங்களது முஷடிகளின்*
*தகைமையினைக் கண்டறியும்*
*ஆவலில் இடந்தேடி*
*அலைகின்ற வேளைவரின்*
*எங்களது தாடைகளே*
*அவர் விருப்பை ஆற்றிடலாம்....*

*அவர்கள் தரும் பரிசை*
*அமசடக்கமாய்க் காக்க*
*எங்களது தாடைகளில்*
*எடுப்பாய் மிகச் சடைப்பாய்*
*தாடி அதன்பாட்டில்*
*தழைத்து வளரட்டும்!*

# பணிபுரிந்தான் புகழ்பாடு

சோழவந்தான் கந்தசாமி செந்தமிழில் தோய்ந்தின்ப
ஆழம் உணர்ந்தோன் அரியகுணன் காலத்தை
வென்றானாய் ஆக்கி மடல்கங்கை விட்டமனம்
கண்டு மகிழ்தல் கடன்.

பூரணையில் பால்நிலவு பெய்யினிய நள்ளிரவில்
நீருறையும் மெல்லியர்கள் நல்லிசையில் - ஆராமை
கொண்டு சுவைதுகர்ந்து யாழிசையின் மாண்பங்கு
கண்டு தெளிந்த கவி!

தமிழிசையின் மேன்மை தனையோதும் யாழின்
அமைவுமுறை ஆய்ந்துநூல் செய்து - இமயவரை
என எழுந்து இசையுலகோர் மெய்மறக்கும்
வண்ணம் இழைத்தானை வாழ்த்து!

விஞ்ஞானி செந்தமிழின் மேன்மை நுகர்ந்தமுது
விஞ்சக் கவிபுனைந்த வேந்தனவன் மெய்ஞ்ஞானம்
பாதை தெளிந்து, பரமனுளம் தானறிந்து
போதம் அடைந்தான் புவி!

மேலை இலக்கியத்தின் மேன்மைகண்டு நன்மதங்க
சூளா மணிசெய்த செம்மலெதிர் - காலம்
உணர்ந்துதமிழ் மாணவர்கள் ஏற்றமுறக் கல்விப்
பணிபுரிந் தான்புகழைப் பாடு!

முத்தமிழ் மேதை விபுலானந்தத் தேனில்
சித்தம் மகிழாத் தமிழ்வாழ்வு - இத்தரையில்
வாழ்தலோ பேதமை, வள்ளல் திருவுளத்தைச்
சூழ்தலால் உண்டு சிறப்பு!

# நிறைவே வா!

ஆடவர் தோழிலுங் காவென்றும்
அரிவையர் நாவிலுங் காவென்றும்
பாடலைச் சூடிய தமிழ்மண்ணுன்
பாதங்கள் தோய்தரப் பரிந்துவா!
கூத்திலே ஆனந்தம் குலவுவதே
ஆடிய நெஞ்சத்து வித்தி எம்
அருமைக்கு விருந்தின்று அளிக்க வா!

முத்தமிழ் மாமுனி விபுலாநந்த
மொய்ம்பினில் தழைத்திடும் முருகே! வா!
வித்தகன் கணபதிப் பிள்ளையின்
வாரிசாய் உலவுநல் விளைவே! வா!
மத்தியில் குறிஞ்சிநல் மண்ணில் யாழ்
பல்கலைக் கழகத்துத் தலைமைகொள்
வித்தியே கல்முனை மண்ணிலுன்
மெல்லடி தோய்தர மகிழ்ந்து வா!

நறைவாரு மலரெங்கு மலர்ந்தாலும்
நசையோடு நுகர்கின்ற வண்டென்ன
பிறைச்சின்னம் கரமேந்திப் பூவெல்லாம்
புதுமைகள் விளைத்திட்ட முஸ்லீம்கள்
நிறைகண்டு கலைப்பண்பு ஆய்ந்தோர்ந்து
நூல்செய்து தந்திட்ட நிறைவே! வா
பிறையன்ப பெருமனது கொண்டெங்கள்
பதிமீது நின்பாதம் பதிய வா!

# நெருஞ்சி வனத்துக் குயில்

*நரையும் படர்ந்து நன்றென்று புன்சிரிக்க*
*அரைநூறாண்டு மலையருவியால் இழிய*
*திரையும் குறைவின்றிச் சித்திரங்கள் தீட்டும்*
*பருவம், சுமைகள் பலமான கட்டுக்கள்*
*இந்த நிலைமையிலும் உள்ளத்தில் கண்படுக்கும்*
*அந்த நினைவுகளை அழித்தெழுதக் கூடுதில்லை.*

*பள்ளிப் படிப்பும், புத்தகங்கள் பன்னூறு*
*அள்ளிப் பருகி அடுக்குமிது அடாதென்று*
*தெள்ளந் தெளிந்த திருவுடையன் ஆனநிலை*
*உள்ளத்தில் கோடி உறுத்தல்கள் குடியிருக்கும்*
*இந்த நிலைமையிலும் எண்ணத்தில் கண்படுக்கும்*
*அந்த நினைவுகளை அழித்தெழுதக் கூடுதில்லை.*

*உன்னைக் கரம்பற்றி ஒய்யார நடைபழக்கி*
*சின்ன இதழ்திறந்து சிந்தும் மொழிபருகி*
*கன்னத்தில் கிள்ளிவிட்டு கண்கள் குளமாகும்*
*வண்ணம் ரசித்து வடுவாத் தனம்புரிந்த*
*இந்த நிலைமையிலும் எண்ணத்தில் கண்படுக்கும்*
*அந்த நினைவுகளை அழித்தெழுதக் கூடுதில்லை.*
*சின்னப் பாவடைைச் சிறகடிக்கும் சிட்டாக*
*பொன்னின் சலங்கை பொழிகின்ற மோகனமாய்*
*கன்னம் குழியக் கலகலத்துச் சொக்கவைக்கும்*
*வண்ணம் கரம்பற்றி வட்டத்தில் சுற்றவைக்கு*
*இந்த நிலைமையிலும் எண்ணத்தில் கண்படுக்கும்*
*அந்த நினைவுகளை அழித்தெழுதக் கூடுதில்லை.*

*நெல்லிப் புதர்முகட்டில் கூடுவைத்த பூக்குடிச்சான்*
*புள்ளைச் சுருக்கிட்டுப் பிடித்துமென் பூங்கரங்கள்*
*அற்றக் கொடுக்க அகமகிழ்ந்து நீகுதிக்க*
*துள்ளி அதுபறக்கத் திட்டியுனை நானடிக்க*

அள்ளி என்னிடுப்பைக் கட்டிப் பிடித்தழுத
அந்த நினைவுகளை அழித்தெழுதக் கூடுதில்லை.

ஓடையிலே பளபளத்து உருண்டு வந்த மாங்கனிக்கும்
கூடை நீ காட்ட தமுக்கடித்துப் பற்றுகையில்
ஓடையின் நீரோடு உடுத்ததும் உரிந்தோட
ஆடிக் கரைசேர்ந்த அம்மணத்தை நீ பழித்தாய்
இந்த நிலைமையிலும் எண்ணத்தில் கண் படுக்கும்
அந்த நினைவுகளை அழித்தெழுதக் கூடுதில்லை.

அக்கரையில் கூடின்றி ஆர்வலிக்கும் பூங்குயில்
இக்கரையிற் கோழை. ஏற்றிவரத் தோணியொன்று
எக்காலம் கிட்டுமோ? என்று அது வாய்க்குமோ?
தற்காலம் நோக்கி அழுதழுது நோற்கின்றேன்
நெருஞ்சி வனத்தில் நடமிடுங்கள் எனும் ஆணை
விடுத்த அவனை வீழ்த்தத் துடிக்கின்றேன்.

# நந்தவனத்து ராசாவும் நன்றி உள்ள பக்தர்களும்

*நந்த வனத்திலோர் ராசா - புவி*
*ராச்சியம் செய்வதில் பேர்பெற்ற ராசா*
*இந்த உலகினில் ராசா - இவர்போல்*
*உண்டெனபோர் பச்சைக் களிமண்ணின் கூசா.*

*நந்த வனத்தி லமர்ந்து - பக்த*
*நம்பியர் சூழ்ந்திட இன்பம் நயந்து*
*சிந்தைகள் கள்வெறி கொள்ள - அருள்*
*செய்யும் திறன்கண்டு நெஞ்சங்கள் துள்ளும்.*

*நந்த வனந்தரு வாழ்வை - மிஞ்சு*
*ராச்சியம் வந்தாலும் கொள்வார் மகிழ்வே!*
*பந்தியாய்ப் பக்தர்கள் கூடியப் பாதை*
*போகிடச் செய்குவார் மெய்ப்புகழ் பாடி.*

*தம்பட்டை தாரை முழங்கும் - வெண்*
*கம்பளம் மீழிசை பூக்கள் நசுங்கும்.*
*அம்பா இசைவெள்ளம் பாயும் - யானை*
*அம்பாரி மேலே அமர்ந்துடல் சாயும்.*

*பக்தர்கள் ஆவேசம் முற்றி - உடன்*
*பரதம் பயிலுவர் கைத்தாளம் கொட்டி*
*டக் கென்று ராசாவை தூக்கி - எழில்*
*டாட்டாவும் காட்டுவார் அன்பரை நோக்கி.*

*ஆசை பிறந்திட்டால் ராசா - அந்த*
*அழகிய காவந் தமர்வார் சொகுசாய்*
*பாசம் மிகுந்த நம்குடியார் - தூய*
*பாதார விந்தங்கள் நாவால் துடைப்பார்.*

பாதப் புழுதியை மென்று - எம்
பாவ வினைபோக உய்வோமே நன்று
நாதம் நயந்தாடு நாகம் - என
நர்த்தனம் ஆடி நிமிர்வோமே யோகம்.

காசு பிடியாத ராசா - பாத
காணிக்கை செய்குவோம் பொன்னிறை கூசா
பூசையும் செய்குவம் பேஷாய் - மனம்
பூரித்தே ஆசீர் வதிப்பீரே லேசாய்.

நந்த வனங்களை ஒன்றாய - இந்த
நாட்டு மடையர்கள் ஆக்குவர் என்றால்
எந்தையே! எம்வனம் முந்த - நீங்கள்
இயற்றுக யாருக்கும் ஆகாத விந்தை.

ராசாதி ராசாஉன் கால்கள் - வீழ்ந்து
நன்றியோ டாட்டுவம் நம் சுருள் வால்கள்
சேசர்கள் இவ்வாறு கெஞ்ச - நிறை
வேற்றுமே என்பார் இதழ்நகை கொஞ்ச.

நந்த வனங்களும் கூடும் - சில
நாயகம் என்று முடிகளும் சூடும்
வேந்தர்க்கும் ராச்சியம் வாய்க்கும் - கொலு
வேழமும் மெல்லவே பாதம் பெயர்க்கும்.

சீரகக் கொச்சிப் பழத்தை - எழில்
கண்டு சுவைத்த குரங்குக் குலத்தை
நேரக் குதிப்பதே பக்தர் - ராசா
நினைத்து மகிழ்வரே சித்தம்.

# களைக் கூத்து

*சிலரின் சுயாதீனமாய் இருந்த* freedo*த்தை*
*பலரின் பராதீனம் செய்யென்ற*

Russow*வை*
*மீளப் புதைக்க*
*வெட்டியுள்ளோம் ஆழமடு.*

*எறும்பு கறையான் தேனீக்களே!*
*நீங்கள் கொண்ட தலைமையும்*
*அத்தலமை ஏற்று, அவரவர் படிநின்று*
*அவரவர் கடமைகளை*
*ஆற்றுகின்றீர்கள், அழகுதான்!*
*ஏற்ற இயற்கை நெறிதான்:*
*அது ஏன் எங்களுக்கு.*

*குயில்களுக்கு மட்டுந்தான்*
*குரலினிமை உண்டென்று*
*ஏந்த மடையன் இயம்பினான்? சொல்லுங்கள்?*
*ஏகாலித் தோழனின்*
*மாராப்புத் தாங்கிகள்:*
*தேனைக் குரலில் குழைத்து,*
*வினியோகம் செய்யும் விருந்தைச்*
*சுவைப்பீர் செகுடர்களே!*

*மலர்ப்பொய்கை ஓரத்தின்*
*மேன்புல் அரங்கத்தில்,*
*களிநடனம் செய்கின்ற குத்தகையை*
*தோகை மயிலுக்கு மட்டும்*
*வழங்கிய மடையர் யார்?*
*நெடுவாலும் குடவயிறும் நீண்டபின்காலும்*
*குடுவை முகவடிவும்*
*கொண்ட நம் நர்த்தகர்கள்*
*ஆடும் நடனமாம் நல்விருந்தை உண்ண*

குருடர்களே!
நோக்கமற்ற கண்கள் திறவுங்கள்.

ஆரங்கே! ஆரச நெடுஞ்சாலையிலே?
போடா! மடையா! புழக்கடைப் பக்கம் போ!
மாணிக்கப் பட்டு முகக்கவசப்
பட்டத்து யானை-
அதோ பார்! அசைந்து வருகிறது
அம்பாரி மீது அமர்ந்து,
குருவித்தலையில் 'ஜிஹ்னா' முடிபுனைந்து
ஊர்கோலம் போகின்ற
எங்கள் புவிராசா செப்பம் பார்!

பூலோகம் மேலோகம் மட்டுமல்ல
கீழுள்ள பாதாள லோக
அரச நெடுஞ் சாலையெலாம்
சூடமும் பூவகையும் கொண்டு
பூசை செய்யும் பூசாரி மாரே!
போங்கள் வெளிப்பக்கம்

கோழி, கருவாடு, பீச்சும்பு, Glucose
ஆகியன கொண்டுநாம் அர்ச்சனை செய்குவோம்!

சிலரின் சுயாதீனமாய் இருந்த freedoத்தை

பலரின் பராதீனம் செய்யென்ற Russowவை
இங்கே இழுத்து வா
பாடுபட்டு வெட்டியுள்ள
இந்தக் குழியில் இடு! மிதி! மண்போடு.

# நான் தமிழன்

நானொரு பச்சைத் தமிழன் - இதை
உலகம் ஒலிக்க உரைத்து மகிழ்வேன்
சீனத்துக் கவிதைகள் செய்வேன் - அவை
செய்யும் விதிமுறை சீராய் விதிப்பேன்
ஹைகூவை அழகாய் அமைப்பேன் - அதன்
ஆழம் அகலம் ஆய்ந்தும் உரைப்பேன்
விமரிக்கை நனறே படைப்பேன்- அதன்
விமரிசை யாவும் மெத்த உரைப்பேன்
புதிது படைப்பது காலத்தின் ஆணை - அதிலென்
பங்கை நிறைவுடன் செய்து நிமிர்வேன்
பண்டைய முன்னோர்கள் கனம்மிகவாக - செய்த
கதைகளை காதினால் கேட்டதும் உண்டு
மண்டையைப் போட்டதில் ஏன்மாய வேண்டும்? - சாடை
மாடையாய் மினக்கெடல வீண்பொழுதாகும்.
ஏனெனில் நான்பச்சைத் தமிழன் - இதை
என்றும் உரைத்து இன்பம் நுகர்வேன்.

# ஈமான்

*பேரண்டப் பரவெளியும்*
*பல்கோடி உடுக்கணமும்*
*சீரமைந்த ஓரமைப்பாய்ச்*
*செயலாற்றும் சூக்குமத்தை*
*ஆராய்ந்த விஞ்ஞான*
*ஆய்வாளர் மனிதனது*
*ஆராய்வுக் கெட்டாத*
*ஆற்ற லொன்றின் விளைவிதென்பார்.*

*எல்லைக்குள் தளைப்பட்ட*
*மனிதனது பேரறிவு*
*செல்லவொண்ணா நெடுந்தொலைவில்*
*சமீபத்தில் எப்பொழுதும்*
*வல்லாண்மை செய்தெல்லாம்*
*படைத்தழித்துக் காக்கின்ற*
*வல்லானை "அல்லாஹு"*
*எனும் நாம சிரேஷ்டத்தை*

*அல்லாத "இலாஹ்" இல்லை*
*அவனன்றிச் சிருட்டிகளால்*
*சொல்லாலும் மனத்தாலும்*
*மெய்யாலும் வணங்குதற்கு*
*"உள்ளமை" வேறெதுவும்*
*இல்லையென்ப(து) "ஈமானின்"*
*துல்லியதாம் அச்சாணி*
*அவன்பணியை அச்சொட்டாய்*
*ஆற்றிடுவோர் அமரர்கள்*
*அவன்படைப்பு ஒளிமயத்தார்*

நாற்பெரும் திருமறையை
நானிலத்தும் மேனிலத்தும்
நற்பாதை நடப்பதற்காய்
நல்கியதைப் போதிக்க
நற்குணத்து றசூல்மாரை
நபிமாரை நியமித்தான்.

தீர்ப்புநேர் வழங்கவும் ஓர்
திருநாளை வைத்துள்ளான்
ஆரெவர்க்கு நன்மைகளும்
அல்லனவும் சேருமென்ற
ஓர்மையதும் அவனுக்கே
உரித்தாகும் என்பவற்றை
ஒப்புதல்நல் ஈமானே!

# வண்ணங்கள்

*பேயாப் பெருமழையும்
கொல் விலங்கும் கும்மிருட்டும்
பேயார் உலாவும்
இரவில்வழி போகின்றோம்.*

*பார்வைப் புலனும்
பறிபோன காரணத்தால்
பார்த்து வழி காணுகின்ற
பாக்கியமும் நாமிழந்தோம்.*

*மோதி இடியோசை
மூர்க்கத் தனம் புரியக்
காதும் பிளந்ததனால்
கேட்காச் செவிடானோம்.*

*கல்லடித்து முள் கிழித்துக்
கட்டைகளில் பட்டிடறி
கால்களிலே ஒன்றிரண்டா
காயம் நடக்காவரம் தரும் இடைஞ்சல்.*

*தொட்டு வழி காணத்
தோதான கைகளையும்
பட்டதெல்லாம் புண்ணாகிப்
பாழ் படுத்தி விட்டனவே.
ஊர்தல், தவழ்தல்,
அரைதல் உடல் முற்றாய்ச்
சோர்தல் தொல்லைகளோ
சொல்லி முடியாது!*

*எங்கோ தொலைவில்
அடர்ந்த பெரும் கானகத்தில்
கங்குல் குலவும்*

*சுரங்கத்துள் பொந்துகளில்*
*கன்னங் கரியனவாய்ப்*
*பூனைகள் உள்ளனவாம்*
*எண்ணிப் பிடிக்கின்ற*
*எத்தனத்தின் புத்திரர்நாம்*
*பிடிக்க முயல்வோர் நாம்*

*பூனை எதற்கா?*
*புரியவில்லை மட்டிகள்நீர்!*
*பூனையில் கொள்ளை*
*மயிர்கள் புரிகிறதா?*
*பூனை இறைச்சிப்*
*புரியாணி தின்றீரேல்*
*கூனல் நிமிரும்!*
*குதிரும் இழந்தவையும்!*

*என்னே பிசத்தல் இது?*
*என்றெண்ண வேண்டாம்!*
*வீண் விண்ணாணம் பேசாதீர்!*
*வீணாகும் நேரங்கள்!*
*இற்றை யதார்த்தத்தின்*
*அச்சொட்டாம் வார்ப்புகளின்*
*வண்ணங்கள் தாம் நாங்கள்!*
*வாய்க்குள் ஏன் சிரிக்கின்றீர்?*

# அழகு வண்ணப் பூச்சிகள்

*பட்டாம் பூச்சிக் கூட்டம்நாம்*
*பறந்து திரிவோம் பாட்டமாய்*
*சுற்றி மொய்ப்போம் பூக்களில்*
*சுவைத்துத் தேனும் அருந்துவோம்*

*சின்னஞ்சிறிய பிளளைகள்*
*சிந்தை கவரும் நாங்களோ*
*வண்ண வண்ணச் சிறகுகள்*
*வாய்ந்து கண்ணைக் கவருவோம்.*

*அழகு குலுங்கும் சோலைகள்*
*அனைத்தும் எங்கள் வீடுகள்*
*மலர்கள் எல்லாம் மஞ்சங்கள்*
*மகிழ்வு வாழ்வில் தினம்கொஞ்சும் .*

*வானப் பரப்பில் நாம்போகும்*
*வடிவைப் பார்த்துச் சிறுவர்கள்*
*கானம் பாடி மகிழ்வார்கள்*
*காட்சி கண்டு பூசிப்போம்.*

*பூக்கும் பூக்கள் வசிக்கவும்*
*புவியோர் உண்டு மகிழவும்*
*ஆக்கம் புரியும் நாங்களே*
*அழகு வண்ணப் பூச்சிகள்!*

*எங்கள் சேவை போலவே*
*உலக மாந்தர் வாழவே*
*பொங்கும் தொண்டு யாவரும்*
*புரிக என்றே நாடுவோம்.!*

# பொன் ராஜகோபால் அன்பினால் அன்பர்க்கு ஆதர்சம் ஆனவன்

*சிரித்த முகவடிவும் சிந்தனையின் ஆழம்
தரித்த விழிகளும் தாங்கிப் பரிவார்ந்த
அன்பினால் அன்பர்க்கு ஆதர்சம் ஆனாய்நீ!
பொன்ராஜ கோபாலெப் போதும்!*

*போகின்ற போதெல்லாம் பொன்னாம் முகம்மலர்ந்து
பாகாய் இனிக்கும் பழகு மொழியாலே
"வா"வென் றழைக்கும் வடிவை இனித்தேடிப்
போவதும் எங்கே புவி!*

*தமிழ்வீர கேசரியின் வார இதழை
அமுத கலையின் அடக்கம் மிகவாகத்
தந்தவனே! நன்பனே! தக்கவனே! உன்னிழப்பை
எந்தவிதம் ஏற்கும் உளம்?
பத்திரிகை வாழ்வின் பழுத்த அனுபவத்து
முத்திரையின் கோலமாய் வந்த தினக்குரலைக்
கண்டேன் உனைநேரில் காணும் நினைப்பினிலே
மண்வாரிப் போட்டேன் மறைந்தாய்?*

*"மனைவியுடன் மக்களும் யாழ்ப்பாணத் தீவகத்தில்
நானோ கொழும்பில் நலிந்த மனத்தனாய்
போய்ப்பார்க்க நோயுடம்பு, போர்ச்சூழல் என்றுதடை
நாய்களோ மேலிங்கு நமக்கு!
மரபுக்கவிதை ஒறுப்பாகிப் போச்சு
கிரமமாய் யாத்து அனுப்பப்பா கேசரிக்கு
என்றுநாம் சந்தித்த போதுரைத்த உன்வார்த்தை
மென்று உருகும் மனம்.!*

*பிறந்தோம் வளர்ந்தோம் கலைத்துறையை வாழ்வை
நயந்தோம் நலிவடைந்தோம் நாடடைந்த கேவலத்தால்
சேர்ந்தாய் இறையடியைச் சீர்குணத்த உன் ஆன்மா
சாந்தி அடைந்தங்கு வாழ்க!*

*சிந்தை கவர்ந்தவனே செம்மனத்த உன்நினைவு
இந்த உலகில் இருக்கின்ற காலமெலாம் நீங்கா
தொளிரும் நினதன்பில் மாலாகி
ஏங்கி உருகும் உளம்.!*

# பூரான்

பூரான் பென்னம் பெரியதோர் பூரான்
மட்டைத்தேள் என்கிற மறுநாமம் தானுமுண்டு
காலையில் கண்விழித்து சிறுநீர் கழிப்பதற்குக்
கொல்லையை நாடிச் சென்ற அவ் வேளையிலே
பூரான் பென்னம் பெரியதோர் பூரான்
பார்வையில் பட்டதிலே பாதத்தால் மிதிக்கும்கேடு
நேராது தோன்றிமனம் நிம்மதி கண்டதையா.
பூரானை நான்மிதிக்க பெருங் காயம் அது தீண்ட
கடிதிலியும் பாய்ந்த விஷக் கொடூரமும் சேர்ந்துகொள்ள
புளியம் பழமெடுத்துப் பூசி இல்லையெனில்
வெங்காயம் வெட்டிக் கடி வாயினிலே தேய்த்து
ஒருநாள் முழுக்க உபத்திரவம் தாங்கவேண்டும்.
வயதாகிப் போயுடலில் ஏதேதோ வருத்தமெலாம்
வாடிக்கை யாய்விட்ட நிலையிலே இதுபெரிய
வருத்தத்தின் ஊன்று விதை யாகிவிடவும் கூடும்
என்று தலைகுனிந்து உற்றதனைப் பார்க்கையிலே
குற்றுயிராய் பூரான் கிடந்து துடிக்கின்ற
உண்மை புரிந்து உள்ளத்தைச் சிறிதான
தேறைக் கீற்று வெட்டிநெகிழ்த்தியது
இன்னும் குனிந்து நோக்குகையில் இதற்கு முறிது
சின்னம் சிறிய சிற்றெறும்பின் வேட்டைக்கு
ஆளாகி சிண்டியிற் மரணத்தின் கணங்களினை

# தனக்குவமை இல்லாத சான்றோன்!

ஷரீபுத்தீன் வாத்தியார் என்கின்ற நாமம்
சரித்திரம் ஆகிவிட்ட சான்று! - சிரித்து
எழுகின்ற பருதி என ஊரில் கல்வி
ஒழுகவைத்த ஏந்தல் உவந்து!

மருதமுனை ஊரின் மகிமைக்கு வித்தாய்
வருகை புரிந்தகலை வள்ளல் - மருதமுனை
ஊரின் முதலாசான் என்றுயர்ந்து பின்னவரும்
சேர உழைத்தான் தினம்!

கல்வியொடு நில்லாமல் அன்றூரின் தேவைகளை
துல்லியமாய்க் கண்டறிந்து தீர்த்துவைக்க - எல்லா
வகையும் உழைத்து வழிகாட்டி நின்ற
தகையாளர் சற்புகழைச் சாற்று!

ஆசிரிய சேவைக்கு அழகைநீர் சேர்த்தசீர்
பேசநா கோடிகள் பெற்றிலனே! - பாசமுடன்
வித்தகம் செய்த விதத்தால் மாணவர்கள்
சித்தம் மகிழ்ந்தார் சிறந்து!

பூமணத்தைத் தும்பியிடம் பேசல் பொருத்தமெனும்
நேமத்தை அரசு நினைத்ததனால் - சேமமுறக்
கல்வி அதிகாரி ஆக உயர்த்தியதால்
உள்ளம் களித்த துலகு!

தமிழில் பெரும்புலமை தான் வாய்க்கப் பெற்று
அமிழ்தம் எனப்பா இயற்றி- இமயமென
ஓங்கி உயர்ந்து புலவர்மணி நற்பேரைத்
தாங்கிச் சிறந்த தகை!
சின்னாலி மப்பாவின் ஞானரை வென்றானை
பின்னாளில் நூலாய்ப் பதிப்பித்து - பொன்னாரம்
அன்னை தமிழுக்கு அணிந்து மகிழ்ந்தசீர்
எண்ணி மகிழும் உளம்!

நிமிர்ந்த அழகுநடை நேர்கொண்ட பார்வையும்
திமிர்ந்த அறிவுத் தெளிவும் - சமைத்த
உருவாய் எழில்சிந்த ஊர்கோலம் வந்த
திருவை இனிஎன்று காண்போம்!

மலைசாய்ந்த தென்றால் மனந்தேறல் கூடும்
தலைசாய்ந்து போன தமிழை - உலகிடை
என்றினிக் காண்போம் இனிய கலையூற்றுக்
குன்றாய் அமைந்த குருவை?

எனக்குத் தமிழ்தந்த என்னினிய ஆசான்
தனக்குவமை இல்லாத சான்றோன் - மனக்கினியோய்!
ஏடு தொடக்கி உயர்வகுப்பில் மேதமையாய்ப்
பாடங்கள் தந்தாயே பரிந்து!

இந்த உலகில் இருந்து பெருவாழ்வு
வாழ்ந்து சிறந்த வளம்மேவி - அந்த
மறுமை உலகின் சுவனம் சுகிக்க
உருகி வேண்டினேன் உளம்!

# கலைஞனுக்கு வண்ணத்தில் வெளிச்சமிட்டேன்

என்ன இனிமை
ஞாயிறு தினகரன் புதியகலை
வண்ணம் மிகவாகி
வடிவம் இதமாகி
விசயகணம் நிறைவாகி வருகிறது.
கேள்வி சிந்தனையைக்
கிளறிப் படுத்துகையில்
உன் அன்பு மனமழைத்த
திருமுகம் வந்துபுதிர்
தன்னை விடுவிக்க
உன்னில் ஒரு கோடி
வெள்ளைப்பூ இதழ்திறக்க
மெள்ளச் சாய்மனையை
முதுகு சுமக்கிறது.
செக்குக்கும் சிவலிங்கத்துக்கும்
விததியாசம் காணும்
வக்கற்றோரும் உறையும்
வையகம் தானிது
என்று நீ எழுதிய வரிகள்
எழுந்து கிறங்க வைத்தது
எழுதும் யாகத்திற்கு
அவியாக அமைந்தது.

முற்போக்குக் கலை இலக்கிய
முனைவன் நீ
இலக்கியத்தில் நற்போக்கை
நாடி உழைத்தவன் நீ
படைப்பிலும் பத்திரிகைக் கலை நுணுக்கத்திலும்
முத்திரை பதித்த
முகனகராஜனே!
அரசியல் வாதிகளுக்கும்

*சினிமாக் காரர்களுக்கும் தான்*
*கலர் வர்ணத்தில் பிரசுரிப்பர?*
*இல்லை*
*கலைஞனுக்கும் இலக்கியக்காரனுக்கும்*
*கலைப் படைப்புக்களை*
*வண்ணத்தில் வெளிச்சமிடும்*
*வரலாற்றைத் துவிக்கின்றேன்.*

*என்னடா இப்படியெல்லாம் கதைத்து*
*இதயத்தில் தேன்வார்த்த*
*நண்பா!*
*வாடாத அறிவாய் வதங்காத பூவாய்*
*இன்னும் பலகாலம் இருந்திருக்கக் கூடாதா*
*உன் ஆன்மா சாந்தியடையட்டும்.*

# நீ

*நீரென்ற அமுதை*
*நெடுநாட்கள் உண்ணாது*
*ஓர் முத்தம் இன்றி*
*எரியும் பெருமூச்சு*
*விட்ட நிலத்தின் மேல்*
*சோவென்று மாரி*
*சொரிந்ததென நீ வந்தாய்!*

*பாலைவழிப் போக்கன்*
*பையில் இருந்த நீர்*
*முற்றும் முடிந்துவிட*
*தாகம் மிகவாகித்*
*தவித்திட்ட வேளையிலே*
*சின்னதொரு நீரூற்றுத்*
*தெரிந்ததென நீ வந்தாய்!*

*பனிப்பாறை மீது*
*வெறுங்கால் பயணியாய்*
*இற்றதொரு துண்டை*
*இறுக்கிப் போர்த்த படி*
*நடை மெலிந்து உடலம்*
*சில்லிட்ட போதினிலே*
*சிறு நெருப்பாய் நீ வந்தாய!*

*தின்னுதற்கு ஏதேனும்*
*இல்லாத நெடும் பசியால்*
*கண்களும் வற்றி*
*உடல் சோர்ந்து பட்டமர*
*அடியில் கிடக்கையிலே*
*காகம் நழுவவிட்ட*
*கனியாக நீ வந்தாய்!*

*மோகனப் புன்னகை*
*மேய்கின்ற தாமரையை*
*மோட்சத்து இனிமைகளின்*
*சாய லெனக்காட்டும்*
*சாணக்கியம் மிகுந்த*
*மோகனம் ஆனதனால்*
*மோகனா நீ எனக்கு!!!*

# நோற்பாயே நோன்பு!

*வானத்து மேல்விளிம்பில் வஞ்சி யெழில் நுதலை*
*ஏனோ எறிகின்றாய் எல்லோர்க்கும் - மானத்தால்*
*நைந்துருகி மீண்டும் நயனங்கள் மேயவிட்டேன்*
*பைந்தொடியே நோன்புப் பிறை*

*'வாங்கோ'சை யில்லை வரிசை மிகு 'றம்ழான்'*
*இங்குபுகழ் பேச ஒருவரில்லை - ஈங்குனது*
*கெண்டைச் சிலம்போசை கிண்ணென்று 'சகர்'*
*கண்டெழும்பு கின்றதை நீ காண்*

*பொய்கை வளர்கமலப் பூக்கரத்தாற் தொட்டெழுப்பின்*
*வைகறையின் கூதல் வலுவிழக்கும் - இவ்வறையில்*
*நாக்கிற்கே மாற்றம்: நடுக்கமுந் தாழவில்லை*
*நோற்கின்றேன் என்றாலும் நோன்பு!*

*காதற் சுவையருந்தி கர்த்தனை யுந்தொழவே*
*ஏவுதடி எங்கள் இயற்கைமதம் - ஈதறியா*
*மூக்கைச் சீறியோர் முழக்குகிறார் வெற்றுடப்பா*
*தூங்கட்டும் அன்னார் தொடர்ந்து!*

*சேந்நாப் புலவோர் செழுமை மிகுபாவால்*
*உன்தாய் வளர்கின்றான் உண்மையிது - இன்கவிதை*
*ஓட்டந்தா னும்வாய்க்கா ஊத்தைகள் மாய்ந்தொழிய*
*நோற்பாயே இத்திங்கள் நோன்பு!*

*ஒருவனது பிள்ளைக்கு இன்னொருவன் நாமம்*
*தருகின்றார் இன்றெங்கள் சான்றோர் - முருகான*
*ஈழத் திலக்கியத்தின் ஏற்றங் கெடுத்திடுவோர்*
*வீழப் பிடிப்பாய் விரைந்து!*

(தினகரன் 27-1-64)

# கலையின் இறைவன்

அலரும் மலரின் திரளாய்
அழகில் ஒளிரும் திருவாம்
புலரிப் பொழுதின் கனகம்
புலரும் கதிகள் தழுவி
குலவும் கடலின் புனலில்
குறுகும் ஒளியின் புனிதம்
பொலியும் உளமே உடைய
புலவன் புகழின் தலைவன்
புனியின் நனைவில் கொழுமை
பொதுளும் கனிகொள் தருவே
அனையாள் மடியில் மதலை
அமுதம் கிடைகொள் கலசம்
கனிவாய் நுணையப் பசியும்
கழரும் நிறைவின் இதவில்
பணையும் வதனப் பொலிவே
பழியில் புலவன் மனமே
பயிரின் செழுமை நிலையைப்
பருகித் துலவில் மதிய
வெயிலின் கொடிய கணையின்
வெறியில் வதையும் சடல
அயர்வு இரிய உழவன்
அடையும் மகிழ்வின் குளுமை
பயிலும் மனமே உடைய
புலவன் கலையின் இறைவன்

# அழைப்பு

தமைத்தேடி வருவோர்க்கு
நறைவார்க்க விழைகின்றேன்
இமைப் போதும் துயிலாது
இயலாமை புகலாது
அமை வான கலைஞான
அணி யாலே உலகாள
தமைத்தேடி வருவோர்க்கு
நறைவார்க்க விழைகின்றேன்

உறவாட வருவோரை
உளமாற அழைக்கின்றேன்
திறமான பொருளதிலே
தினந்தோறும் இசைபாடி
இடுவர்கு புகழ்பாடி
இதமான பணியாற்று
உறவாட வருவோரை
உளமாற அழைக்கின்றேன்

கனிச்சாறு பிழிவோரைக்
கரம் நீட்டி அழைக்கின்றேன்
மனிதத்தை அழிக்காது
மனசசாட்சி மறக்காது
இனிதான பணிகொண்டு
இறும் பூதும் நெஞ்சத்துக்
கனிச்சாறு பிழிவோரைக்
கரம் நீட்டி அழைக்கின்றேன

கவிவாணர் தோளுக்குக்
களுநீரில் வடங் கோப்பேன்
புவிமீது தமிழ் கன்னி
புரப்போர்கள் தமைநாடி
அவியாத மனங்கொண்டு
அமிழ்தான கவிபாடும்
கவிவாணர் தோளுக்குக்
களுநீரில் வடங் கோப்பேன்

வீரகேசரி ஞாயிறு 12-04-1964

# செம்மல்கள் எம்மவர்கள்

வான்வெளி ஊர்கின்ற தாரகை தன்னிலே
வளர்கலை ஆய்ந்தவர்கள் - சிந்தும்
தேன்துளி யன்ன பொருள்நிறை புர்கானை
தேர்ந்து பயின்றவர்கள்!

பாலையிலே முதல் பாங்கிசை பெய்துளம்
பாகாய் நெகிழ்ந்தவர்கள் - அகல்
வேலை கடந்துதல் வாணிபம் செய்துமே
வேண்டும் பொருள் குவித்தோர்!

விண்ணை அளந்திடும் வெற்பினம் போற்கலைக்
கோயில் படைத்து - அகக்
கண்ணால் இறைவனைக் கண்டு வணங்கியே
கவலை மறந்தவர்கள்!

மக்கா நகர்கூடி ஹக்கன் தனைநாடி
ஹஜ்ஜை நடாத்துதலால் - சீர்
கக்கிடம் ஒற்றுமை காட்டி உலகோரை
கல்லாய்ச் சமைத்திடுவோர்!

சாதி பிரித்துச் சமயம் வளர்த்திடும்
சண்டாளச் செயல் துளியும் - இன்றி
சாந்தி பெருக்கிச் சமதையாய் வாழ்ந்திடும்
சாதனை கொண்டவர்கள்!

வீரகேசரி 2-2-1962

# நெடுங்கவிதைகள்

# மோகனா கவலை விடு

*ஆதம் தன்பாவந் தொலைய*
*அருந்தவம் பன்னூறு*
*ஆண்டுகள் இயற்ற*
*அனுப்பப்பட்ட பூமி*
*புத்தனும் தன்*
*கமலப் பொற்பாதச் சுவடு பதிக்க*
*சித்தம் மகிழ்ந்து*
*தேர்ந் தெடுத்த தலம்*
*மங்கையொரு பாகனும் தன்*
*பங்கயப் பாதமலர் பதிக்க*
*பரிந்தெடுத்த மண்*
*மேட்டிலொரு சிறுகுளமாய்*
*நீரேந்து நிலங்களிலே*
*பொழியும் மழை நீர்வந்து*
*நிறைந்தழகு ஊட்டிநிற்க*
*நீந்திமகிழ் மீனினும்*
*நிரைந்துலவும் பறவைகளும்,*

*மலர்ந்தாடும் பூக்களும்*
*மணமஞ்சிலே அமருமின்*
*மங்கையாய் மகிழ்ந்ததும்*
*ஊருணி என்றே*
*உவக்கப் பேர் பெற்றதும்*
*பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போக*
*கோரமாய் வந்த கோடையின்*
*கொடுமையினை ஆற்றாது*
*கோலங் கலைந்து*

கணமும் வெடித்து மீன்
கணமும் மடிந்து வெங்
கானலை வீசிநிற்க
காரணம் விதியல்ல.
மதி செய்த கேடு
என்றுதானே! நீ மோகனா!
ஏளனமாய்ச் சிரிக்கின்றாய்?
போதி மாதவத்தின்
போதம் மிகவிருந்தும்
பேதம் மனிதரிடைப்
பார்க்கின்ற பரவணிதான்
ஏனென்று கேட்கின்றாய்
ஏனிந்த முரண்பாடு?
என்றுதான் நகைக்கின்றாய்.
முரண்பாடுகளுக்குள் ஒரு
சமன்பாடு காண
மந்திரம் சொன்னான்
வானத் தமரன்போல்
வந்த ஒரு கிழவன்
மூடக் கிழம் என்று
முனைந்தவனை மொத்திவிட்டார்.
தடையாய் இருந்த பாறையைத்
தன்னுடைய,
ஒடிசல் உடம்பின்
ஒல்லிக்கை மென்நகத்தால்
கீறினான் மேலும் மேலும்
கீறிக் கொண்டேயிருந்தான்
மூடக் கிழவன்
"என் மொக்குப் பேரர்கள்
கடப்பாறை நாடார்;
லேசர்க் கதிர் கொண்டு
ஊதிப் பொடிப்பார்"
என்றுதன் பொக்கை

வாயால் மொழிந்த வண்ணம்
கீறலெனும் யாகக் குண்டத்தில்
ஆவியானான்.

மோகனா!
மேகத்திரை கிழித்து மின்னுகின்ற
உன் முக மோகனம்
ஆஹா என்றாங்கு
அழகை மிகக் காட்டிப்பின்
ஆவேசம் காட்டுதற்குக்
காரணம் இன்று
எல்லோர்க்கும் புரிகிறது.

அரியணை என்கின்ற
முனிசாபத்தின் முன்
அழகியாய் இருந்தாளே
அழகிய தாடகையின்
பெரிய தனங்களெனும்
தலையணையில் கண்வளரும்
மோகக் கழிப்பில்
மூழ்கியுள்ள இவர்களுக்கு
புலரிப் பொழுதைப்
பிடிக்க நியாயமில்லை.
காஞ்சுரை விதைத்து
கனியுமதில் தேன் தோடை
வாஞ்சையுடன் உண்ண
வழிந்து கிடக்குமிவர்
ஆம் காரியம் தேடுமவர்
ஆற்றத் துணிவார்
ஆற்றார் கவலைவிடு.
சோலை எரிந்த
சாம்பல் தடத்தினிலே
சிறுதகரை என்றாலும்
முளைக்காது போய்விடுமோ!

# விதியின் பிழையன்று...

*ஆதம் தன்பாவந் தொலைய*
*பன்னூறு ஆண்டுகள்*
*தவம் இயற்ற*
*இறக்கி*
*வைக்கப்பட்டதும்*
*போதி மாதவனும் தன்புனிதப்*
*பாதச்சுவடு பதிக்கச்*
*சித்தம் கனிந்ததும்*
*மங்கையொரு பாகனும்*
*பங்கயப் பாதமலர்*
*பரவித் தடம் பதித்துப்*
*பாலித்ததும்*
*ஆன சங்கை மிகுந்த*
*சங்கதிகளில்*
*எங்குமே இல்லாத*
*பெருமைக்காளாகி,*
*வளப்பம் மிகு குளமுமாகி,*
*வாடிக்கை செய்யும்*
*பறவைகளின் பாட்டொலியும்*
*நீந்தி மகிழும் மீன்களின்*
*துடிப்பொலியும்,*
*பூவழகும் வாசனையும் பொலிய*
*மண மேடையில் அமரும்*
*எழில் இள மங்கையாய்*
*ஊருணி என்றே*
*உவக்கப் பேர்பெற்றதும்*
*பழங்கதையாய்ப் போக,*
*கானலும் வீசிக்*
*காய்ந்து கணம் பேந்து*

மீனும் அழிந்து
பறவைகளும் ஏக
பதியிழந்தவள் போன்ற
பாத்தியதை வந்ததற்கு,
காரணம்?
“விதியின் பிழையன்று”
என்றுதானே மோகனா!
ஏளனமாய்ச் சிரிக்கின்றாய்?

“போதிமரக் காற்று
ஏழேழு ஜன்மத்துக்கும்
போதுமாய் வீசியும்
பேதங்கள் மனிதரிடம்
பார்க்கின்ற பரவணிதான் ஏன்?
ஏனிந்த முரண்பாடு?
என்று தானே கேட்கின்றாய்?
முரண்பாடுகளுக்குள்ளும்
சமன்பாடு காண
மந்திரம் சொன்ன
முதிர்குயிலின் மென் குரல்வளையை
சப்பாத்துக் கள்ளிகள்
சல்லடை செய்தன.
மோகனா!
மேகத் திரையிடையே
பேகடைராகமாய்ப்
பொலிந்தும் உன்வதனம்
பின்
மோகன ரௌத்திரம் காட்டி
முறைப்பதற்குக் காரணம்
இங்கு எல்லோர்க்கும் புரிகிறது.
புரிந்தென்ன?
அவர் உள்ளரங்கில்
சாபத்தின் முன்னிருந்த

மோகனாங்க வடிவில்
அரியணை என்கின்ற
அலங்கிருதத் தாடகை
ஆலோலம் பாடுகிறாள்
அவள் பெருந்தனச்
சௌகரியங்களில் துயில் செய்யும்
மோகக் கனவில்
மூழ்கியுள்ள இவர்களுக்குப்
புலரிப் பொழுதைப் பிடிக்காது.

“கபடமில்லாத ஆத்மாதான்
ஞான திருஷடியைக்
கல்யாணம் செய்யும்.
பலனை எதிர்பாராது
கடமையைப் புரியும்”
என்பாய் நீ!
கபடம் கடைவிரித்த
சந்தையில் தானே
இங்கு சரக்கு விலை போகிறது!
காஞ்சுரை விதைத்துத்
தேன்தோடை உண்ண
வாய் பிளந்து கிடக்கும் இவர்
ஆம்காரியம் ஒருநாளும் ஆற்றார்.
கவலை விடு!

இவருக்குப் புரியாத சங்கதிகள்
இயற்கை கைகட்டி இருப்பதில்லை
என்பதுவும்
விளைவுக்குப் பதில்விளைவு
விளையுமென்ற உண்மையுந்தான்
காடு கரிந்த சாம்பல் புழுதியில்
மழைநீர் விழுந்தால்
தகரை முளைத்துச்
சடைத்துச் சிரிக்கலாம்.

மீண்டும் பெருமரங்கள்
முளைத்தும் வளரலாம்!
இலைகளே முட்களாகிக்
கடன்தீர்த்தும் கொள்ளலாம்!

காடுகள் அழிவதால்
பேய்கள் வ்டுகளிலேயே வாசம் புரிகின்றன.
பத்திரம் அடித்து
உச்சியில் ஊதவும்,
மஞ்சள் கரைத்த
மந்திர நீரை
மாவிலையால் விசிறவும்,
மங்கள ஈஸ்வரி
யந்திரம் எழுதி
அரையில் கட்டவும்,
வளவின் மூலைகளில்
காவல் தகடு எழுதிப் புதைக்கவும்
நல்ல பரிகாரி
உடன் தேவைப் படுவதால்
வானவீதியில் உலாவரும்
சத்தியத் தேவதையே
பூமிக்கு நீ
புறப்பட நாள்குறி.

# காதில் விழுந்த கனல்!

எங்களது கந்தோர்ச்
சிற்றுண்டிச் சாலைக் கதவுகள்
விரியத் திறந்தே உள்ளன.

கதவுகள்
விரியத் திறந்திருப்பது
வருகை தருவோர் வசதிக்காகவே
இங்குள ஊழியர்
தாகமும் பசியும்
தணிக்கவே
உணவுச் சாலையும் உளது.
என்பது உண்மையே!
எனினும்
தினமும், எங்களது கந்தோர்ச்
சிற்றுண்டிச் சாலைக் கதவுகள்
விரியத் திறந்து இருப்பது
வருகை தருவோர் வசதிக்காகவே!

என்ன தம்பி,
கயிறு திரிக்கிறாய்?
விற்பனை ஒன்றே
வினையாகக் கொண்ட
வர்த்தக நிலையக் கதவுகளை யாரும்
தாழ்ப்பாள் இட்டு வைப்பதும் உண்டோ?

என்பீர்
அதுவும் உண்மை.
எனினும்
எங்களது கந்தோர்ச்
சிற்றுண்டிச் சாலைக் கதவுகள்
விரியத் திறந்தே உள்ளன.
கதவுகள்
விரியத் திறந்து இருப்பது
வருகை தருவோர் வசதிக்காகவே.

மாபிள் மேசைகள்,
மேசைக்கு நான்கு
இரும்புக் கதிரைகளும்
இருக்கின்றனவே
மூலைப் புறமாய்
மரத்தால் ஸ்கிறீன் நிலைகளை நிறுத்திய
மறைவுகளுண்டு
பத்துமாதக் கர்ப்பிணி போல்
காட்சி தருகுது
கண்ணாடிச் ஷோக்கேஸ்
கேக்குகள், மஸ்கோத்
கிரிபத
துதள்கள்
எள்ளுருண்டை
எண்ணெய்ப் பலகாரம்
வடைகள்
தேன்குழல்
வட்டிலப்பம்

பெற்றிஸ்
முறுக்கு
பணிஸ்
பகோடா, நிறைந்து
ஷோக்கேஸ்,
நிமிர்ந்து நிற்குது.
ஆனை
இதரை
கோழிக்கூடு
பன்றி
கதலி
செவந்தான், ஆய வாழைப்பழங்கள்

அந்நாசி
பப்பாசி
தோடை
கிறீம் புரூட்
இலங்கைத் திராட்சை
பதமாய்க் கனிந்த
பழங்களு முண்டு.

சூடான கோப்பி, பால்வகை
சுவையான தேனீர்
நெஸ்பிறே
நெஸ்டோமோல்ட்டும்
பசுப்பால்
ஹோர்லிக்ஸ்
ஓவல்,

குளிர்பானங்கள்,
செவ்விளநீர்கள்
சொக்லேட்
டொபி வகை
புகைக்கும் பொருட்கள்
எல்லாம் உண்டு
எங்களது கந்தோர்ச் சிற்றுண்டிச் சாலையில்
கதவுகள் விரியத் திறந்தே உள்ளன.
வருகை தருவோர்
வசதியே எங்கள் குறிக்கோள்
என்பதைக் கூறி வைக்கிறேன்.
தனியே அவரைச்
சபிக்க விடோமெனும் உண்மையை
இங்கு
உரைப்பதும் என்கடன்.
சாதியில் உயர்ந்தவர்
இழிசனர்
என்றோ
பணக்காரர்கள்
ஏழைகள்
என்றோ
பாகுபாடு காட்டாப் பெருந்தகை
எங்கள் கந்தோர்க் கிளாக்கர்கள் போல்
யாருளர
இந்தப் பூவுலகினிலே

பகலெலாம்
இந்த உணவுச்சாலையில்

வருபவர் தம்மோடு
மனங்கலந்து அழைத்து
அன்பு கனிந்து
அழகுறப்பேசி
தோழமை செய்யும் சீர்மையே! சீர்மை!
எங்களது கந்தோர்க் கிளாக்கர்கள்
பொழுதெலாம்
கண்டீன்
கந்தோர்
இரண்டையும் இணைத்து
ஊடுபா ஓடி அலைவது எல்லாம்
வருகை தருவோர் வசதிக்காகவே.
எனக்கு முன்னே
இந்தப் பதவியைத்
தனக்குநேர் இன்றித்
திறம்படச் செய்த பையனோ
சுத்தப் பைத்தியக் காரன்
எல்லோரும்
இந் நாட்டு மன்னரே என்று
வெல்லமாய் இனிக்க விளாசிடும்
மக்களாட்சியின் உட்பொருள்
அறியாச் சிறுவன்
யானையும்
கரடியும்
சிறுத்தையும்
சீறும் கானகம் மத்தியில்
ஏழை வாத்தியார் ஒருவரும்
எங்கள் கிளாக்கர் ஒருவரும்

ஸ்கிறீன் மறைப்பு மேசை அருகில்
அமர்ந்த வண்ணம் உண்டி அருந்தி
இருக்கும் வேளையில்
வாத்தியார்
சற்று ஆத்திரமாகப் பேசி
ஐயாவை அறையப் போனாராம்.

மாஸ்டர் அடிக்கடி வருவதும்
இருவரும் காரமாகக்
கதைத்துப பிரிவதும்
பார்த்துப் பார்த்து அலுத்தவர்கள்
கிளாக்கர் ஐயாவின் முகத்தைப் பார்த்து
சடக்கென
ஐயாவின் இடக்கை நீண்டதால்
பையனின் கன்னம்
ஓய்யெனச் சிவந்ததாம்
அடுத்தநாள் அவனுக்குச்
சீட்டுக் கிழிய
எனக்கு வாய்ப்பு
வந்து குதிர்ந்தது.
அப்பன் இறந்து
ஐந்து வருஷம்
மருந்தை உணவாய்
மாந்திடும் அன்னையைப் பேணவும்
வீட்டில் அணிவகுத்திருக்கும்
தம்பி தங்கையர்
வயிற்றைக் கழுவவும்
வேலை தேடி அலைந்த வேளையில்

மடைபோட்டழைத்த
மந்திரவாதிமுன்
கடலென முழங்கிக் காட்சிதந்த
பேயைப் போலவும்,
பசியில் அலையும்
மீன்களின் முன்னே
புழுவை விழுங்கிய
தூண்டில் போலவும்,
தரிசனந் தந்தார்
கந்தோர்க் கிளாக்கர்
கருணை வள்ளல்.

அம்மா கழுத்தை அகன்று
பெட்டியில் சும்மாகிடந்த தாலியின்
அடைவாய் அறுபது வாங்கி
ஐயா கையில்
ஐம்பதைப் படைத்து
அடுத்த பத்தில் நானும்
மூலையில்
ஸ்கிறீன் மறைப்பு மேசையைச்
சுற்றி இருந்து
சிற்றுண்டி சுவைத்த மூன்று தடவை
போனது போக
முப்பது சதங்கள்
முழுசாய் மிஞ்சின.

முப்பது ரூபாச்
சம்பளம் நல்கும்

உத்தியோகமும் வந்து சேர்ந்தது.
மூன்று வருடம்
உருண்டே போயின
முத்தாய் மணியாய்
அம்மாவின் மூச்சாய்
இத்தனை காலமாய்
இருந்ததோர் செல்வம்
செட்டியார் போட்ட ஏலத்தில்
விற்பனையான செய்தி
அம்மா செவியில்
கனலாய் விழுந்தது.
காலனும் வென்றான்
அவள் போய் இன்று
ஒன்றரை வருடம்.
செட்டியார்
அந்தச் சீமான் வாழ்க.
வட்டியும் முதலும் போக
மீதியை அப்படியே
அன்று அவர் தந்ததாலே
அம்மாவின் ஈமச்சடங்கை
ஒருபடியாக இயற்றினோம் யாமே!

# உழைப்பால் செழிக்கும் உலகம்

உழைப்பால் செழிக்கும் உலகம் பற்றிப்
பாட்டால் பணித்த நண்பநீர் நன்றி!
மழைபோல் கவிதை அமுத மாகி
பொழிந்து தமிழைப் பிறப்பதே பிறவிப்
பயனென உழைக்கும் பாவலர் தலைவா!
பழகு தமிழில் கனிரசம் செய்து
செழுமலர்த் தேனைச் சேர்த்தும் குறைத்துக்
கவித்தொழில் செய்யும் கமக்காரர்என
புவியோர் போற்றும் வெற்றிகொள் புலவீர்!
பாவலர் என்னும் பைத்தியர் சிலரை
கூவிட இன்று கூடுவர் நாமும்
போயிருந் தன்னார் பிதற்றுதல் கேட்டதில்
காய்ந்தால் இதயம் களித்திடல் கூடும்
என்று வந்த நண்மதீர்
அன்புடன் பணிந்தேன் அவையில் நானே!

முனறிலிலே நிற்குங்கால் விலையோ பெரிது
மொழு மொழுக்கும் வகை வகையாய்த் தளபாடங்கள்
மின்விசிறி மின்விளக்கு அறைக்குளிப்பு
மேலான ஆசைகளின் மினுமினுப்பு
கிணுகிணுத்து எங்கெங்கோ பேசவைக்கு

பொல்லாத தொலைபேசி இடைக்கருவி
பொன்பொருளின் காவலனாய் இரும்புப் பெட்டி
பொன் பஸ்பம் கலந்துண்ணும் பெரியவாழ்வு.

வீதிகள் உணவு விளையுங் களனிகள்
சேதிகள் புதிதாய்ச் செப்பிடும் வானொலி
மாடங்கள் ஆற்றை மடக்கிப் பிடிக்கும்
பீடணைக் கட்டுக்கள் பாலங்கள் தோப்புக்கள்
மோட்டார் இரதங்கள் மின்சார சாதனங்கள்
வாட்டும் பிணிக்கு மருந்து வரிசைகள்
நீராவி வாகனங்கள் நீச அணுக் குண்டுகள்
போராட்டம் அண்டவெளி எங்கும் புரிந்துகள
வெற்றிகொளும் ஆசைக்கு வேல்பாய்ச்சும் சாதனங்கள்
இந்த இருதயமாற்று சேச்சே! எதற்காக?
புத்தம் புதிதாய்ப் பொருந்திவிட்டா போகிறது
முத்தாரம் கலைகளொடு ஜீவனுள்ள இலக்கியங்கள்,
பேச மொழிகள், பிரச்சினைக்கு ஆட்சிமுறை
ஈசன் புகழை எடுத்தியம்ப வேதங்கள்
அத்தனையும் மாந்தர் உழைப்பிற் செழித்து
பூத்ததே இந்தப் புவி!

காடுகளெல்லாம் அழித்துவிட்டோம் - பெருங்
கழனிகள் அங்கு புதுக்கிவிட்டோம்.
ஓடும் நதிகளைத் தேக்கிவிட்டோம் - பெரும்
ஓதக் கடல் மூழ்சி முத்தெடுத்தோம்.
தொடரும் ஆலைகள் கட்டிவிட்டோம் - அங்கு
தேவைப் பொருட்களைச் செய்துவிட்டோம்.

பீடை ஒழித்திட மருத்துவத்தில் - நாம்
பென்னம் பெரியன செய்துவிட்டோம்.

மண்ணை அகழ்ந்தோம் கனிப்பொருள்கள்- மா
மலைமலையாகவே கொண்டுவந்தோம்
எண்ணெய்க் கிணறுகள் தோண்டிவிட்டோம் -
அதில் எத்தனையோ இனம் கண்டறிந்தோம்.
தண்ணீரில் வாழ்ந்திடும் மீனினங்கள்
விண்ணில் உலாவரும் பட்சிவகை - தானும்
விட்டுவைக்க நாங்கள் எண்ணவில்லை.

பூதங்கள் ஐந்தையும் ஆய்ந்தவற்றால் - பெரும்
புண்ணியம் பற்பல பெற்றுமுள்ளோம்.
ஃதுநல் அரசியல் வாழ்வியல் என்று - திட்டம்
எத்தனையோ இங்கு தீட்டியுள்ளோம்.
வேதாந்த சித்தாந்த சாகரங்கள் - மட்டும்
வேண்டு மளவுக்கு மூழ்கியுள்ளோம்.
வாதங்கள் போதங்கள் செய்யாமல் - நாம்
வாழாதிருந்ததுங் கிடையாது.

ஆனாலும் பட்டினி ஓயவில்லை - அதன்
ஆங்காரம் சற்றுந் தணியவில்லை.
வேனில் மழையினுக் கொதுங்குதற்கு - சொந்த
வீடென்று சொல்லிட ஏதுமில்லை
மானிட ஜன்மங்கள் பாதைகளில் - மர நிழல்
ஒதுங்கவும் போட்டியுண்டு.
மானம் மறைத்திட முழுத்துணிக்கு - இங்கு
மண்டியிடுபவர் கோடி உண்டு.

பொல்லாத காலம் நமைச் சூழ்ந்த தென்று
மூதேவி பலபேரைத் தேடிப் போக,
செல்வமகள் பட்டுடுத்துப் பொன்னுஞ்சூடி
சேல் விழியால் மொழிபேசி நடனம்ஆட,
பொல்லாத சட்டமெலாம் அவர்தாள் வீழ்ந்து
புரிகின்ற கேட்டுக்குத் துணையாய் நிற்க,
இல்லாத உறவுகளும் உதவிக்காளும்
ஓடோடி வந்தவர்க்கு உதவிசெய்ய,

வானத்தை குடைவனவாய் மாடிவீடும்
வகைவகையாய்த் தோட்டங்கள் காணிபூமி
ஞானத்தைக் கற்க வந்த ......
சீனத்தை மட்டுமல்ல உலகமெல்லாம்
சென்றடைந்து கலைகளெலாம் கற்பதற்கும்
மானொத்தார் தனிர்மேனி முத்தில் பொன்னில்
வைரத்தில் நகைநட்டு வரிசை செய்து
பேணத்தான் வைக்கின்ற பெரியவாழ்வு
பூரணமாய் வாய்த்தோரும் உண்டு இங்கே.
நேரான வழிகளிலே உழைத் துழைத்து
நிறை வாழ்வு பெற்றவர்கள் உளரே யந்தச்
சீராளர் புகழ்பாடல் முறையே அந்த
செல்வத்தை நேர்மை யாய்த் துய்த்து வாழ்க
பேரான அவ்வாழ்வு அவர்போல் மற்றப்
பேர்களுக்கும் சித்திக்க என்று நாமும்
ஆராத னைசெய்வோம் அவனி எங்கும்
அன்பு நெறி சமநீதி ஓங்கி வாழ்க!

ஒன்றுக்கு நூறு இலாபம் வைத்து
ஊர்வயிற்றில் அடிக்கின்ற உலுத்தர் நீதி
கொன்று குவித்திடுகின்ற கள்ளச் சந்தைக்
கோமான்கள் அடைந்துள்ள பெரியவாழ்வும்
நன்றிங்கு வியாபாரம் நடக்களன்று
நாடெங்கும் அரசாங்கம் வைத்தசேவைக்
குன்றுகளாம் துரைமார்கள் லஞ்சம் பெற்றுக்
குவிக்கின்ற செல்வமும் பெரிய வாழ்வும்
சட்டத்தை நன்றுநிலை நாட்டி நாளும்
சமாதானம் சௌஜன்யம் காக்க வந்த
பட்டாளம் புரிகின்ற தில்லுமுல்லு,
மானங் குவிக்கக் கையாளும் குயுக்தி மார்க்கம்
முட்டாள்கள் ஆனவரைக் கைக்குள் போட்டு
மோதவைத்து இருசார்பும் இயலுமட்டும்
கட்டாகக் கறந்தெடுத்து ஆக்கிக்கொள்ளும்
கறைவாழ்வு கண்டுமனம் பொறுப்பதெவ்வாறு?

பாலங்கள் சாலைகளை கட்டிடத்தைப்
பதுக்கிடவும் தேவைக்காய், புதியதாக
மேலுமிங்கு அமைத்திடவும் ஒதுக்குகின்ற
பொதுப்பணத்தைத் தம்பாட்டன் பூட்டன் சொத்தாய்
ஏலுமட்டும் கறந்தெடுத்து ஏப்பம்விட்டு
ஏமாற்றும் பெருச்சாளிக் கும்பல் இங்கு
மேல்மட்டம் கீழ்மட்டம் எங்கும் உண்டோ
முறையற்ற இவ்வாழ்வை வாழ்த்தலாமோ?
நெய்கின்ற தொழிலாளி வறுமையுற்று

நெஞ்சொடிந்து அவ்வாழ்வு அவலக்காடு
செய்க் களங்கள் உழுதுழுது நெல்குவிக்கும்
சீராளன் சோகத்தில் சிதைந்து போக
நெய்தவற்றை நுட்பங்களை .......
நல்வாழ்வு வாழ்கின்றார் நெல்லில்.....
செய்பவரும் அவ்வாழ்வு கூடப்பெற்றார்
செகமெங்கும் இத்தகையோர் நிறையப் பெற்றார்.

செழிப்பான உலகத்தில் வாழும் இந்தச்
சீமான்கள் கூசாமல் நாங்களுந்தான்
உழைப்பாலே இவ்வாழ்வு பெற்றோம் என்பார்
ஏற்பதற்கும் இருக்கினம் இளிச்சவாயர்
உழைப்பாளர் உழைப்பாலே செழிக்கும்
இந்த உலகத்தை தம்வயமாய் ஆக்கிஉள்ளார்
உழைப்பாலே இவ்வுலகம் செழிக்குதையா.

உண்மைநிலை தெரிந்தேதும் செய்வோமையா
உழைக்காத பெருமான்கள் துய்க்கும் போக
உயர்வாழ்வு அவர்காண வேண்டாமையா
உழைப்பாலே இவ்வுலகம் செழிக்கல் தப்பா...
உழைப்புக்கு உரிதான ஊதிபத்தை
ஒறுக்காமல் கொடுத்தாலே போதுமையா
உழைக்காத ஒருகூட்டம் போகவாழவை
உரித்தாக்கும் நிலைதகர்த்தால் நிலைமாறும்.

# வாழ்த்துரை

சோலைகள் அடர்ந்து
செழித்து
வனம் சேர்ப்பதனால்
சூரியக் கதிர்கள்
இலகுவில் நிலம் புகா
குளிர் நிழல் எங்கும்
கொலுவிருக்கும்.

அதனாலா!
இருண்ட கண்டமென
உனை எவரெவரோ அழைத்தார்கள்?

உன் அடர்ந்த கானகங்களின்
நித்திய வாடிக்கை
வசந்த கோகிலங்களின்
மோகன இசை வெள்ளம்.
உன் பாலை வனமெல்லாம்
கானற் பறவைகளின்
பாலைப் பண்பரந் தொலிக்கும்
உனக்கோ இறுமாப்பு
குன்றுகளிலும் மலைத் தொடர்களிலும்
குலவும் புள்ளினங்கள்
பாடும் குறிஞ்சிப் பாட்டொலி
துள்ளும் நீர் வீழ்ச்சிகளும்

வளைந்தோடும் ஆறுகளும்
நிறைந்து ததும்பும் இயற்கை வாவிகளும்
கல்யாண தெம்மாங்கு பாட
செம்மாந்து நீயிருப்பாய்.

வீரம் விளைக்கும்
மூர்க்க விலங்குகளும்
கவின் பெற்றுலவும் மான்முதலானவையும்
தோகை மயிலும் தோழியரும்
பயிலும் பரதம் உனக்கு
தெகிட்டா விருந்து .

நஞ்சையும் புஞ்சையும்
தோண்டக் கிடைக்கும்
தங்கம் முதலானவையும்
நீயொரு செல்வச் சீமாட்டி என்பதற்குக்
கட்டியம் பாடும்
சேவகிகள் அல்லவா?

எல்லா அழகுகளும் உன்னில் சம்பூரணம்
நீயோ சுந்தர வதனி சுகிர்த லட்சுமி
திருஷடிப் புள்ளிபோல
உன் பூங்காக்கள் எங்கும்
கறுத்த மலர்களை
மலர்விக்கச் செய்கின்றாய்?
மோப்பம் பிடித்து வந்த
வெள்ளை வண்டுகள்
தேன் நிறைந்த கரும்பூக்கள்

வீரத்தையும் தேக்கிவைத்திருந்ததனால்,
பரிசக் குழாய்கள் போதாதென்று
துவக்குக் குழல்களையும்
துணைக்குக் கொணர்ந்தன.

தேனை நுகர்ந்தன
உன் தேகத்தின் சாரத்தையும் உறுஞ்சின
பூக்களைப் பறித்து
அடிமைச் சந்தையில் ஏலத்தில் விற்றன.

“வெள்ளைத் தோல் தெய்வத்தின் திருக்கோலம்!
நாமோ ஆண்டவனின் பிள்ளைகள்!
ஆளப் பிறந்தவர்கள்.
எங்களின் நலனுக்காய்
ஆளப்படவேண்டிய சண்டாளர்களையும்
ஆண்டவன் படைத்துள்ளான்
ஆளுதல் அவன் பிள்ளைகளின் திருவிளையாடல்
அதற்கான பொம்மைகளைச் செய்யும் ஆற்றலையும்
அவனே எங்களுக் களித்துள்ளான்.”
உன் எழில் மேனியை
விளையாடு களமாவும் மாற்றின
பீரங்கிகள், டாங்கிகள், விமானங்கள்,
துவக்குகள் என்று
விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு
பல்வேறு ஆட்டங்கள்
பயின்று மகிழ்ந்தன.

உன் புஷபங்கள் அவர்கள் காலில் நசுங்குகிப்
புற்களாய் ஆகின
போர் என்பது அழிவின் தாண்டவந்தான்.
அதர்மத்தை அழிக்கவும்
அது தேவைப்படுகிறது.
போர் என்பது ஆக்கத்தின் கருவியுந்தான்.

இரண்டாம் உலகப்போர்
தெய்வக் குழந்தைகளுக்குப்
பாடமும் புகட்டியது
ஆட்டம் போட்ட களங்களிலிருந்து
மூட்டை முடிச்சுகளுடன்
வெளியேறவும் வைத்தது.
ஆகவே "வாழிய போர் நீ" என்று
அதற்கொரு வாழ்த்துக் கூறுவோம்
விதியின் கைகாட்டி
திசைமாற்றம் காட்டியதால்
உன்னகத்து
ஆடுகளங்கள் பலவற்றிலிருந்தும்
மூட்டையும் கட்டின.

காலனின் திசை தெற்குகள்பார்! அதற்கு
மேலும் விளக்கம் கொடுக்க விரும்பி,
உன்தெற்கே,
"வேர்வூட்" என்ற வெள்ளை வண்டு
நரகாசுரன் ஆக ஜன்மம் எடுத்தான்
ஆளுவதற்கென்றே படைக்கப்பட்டவர் நாம்

அந்த உரிமையை விட்டுக் கொடோம்
எங்களிற் பலர் முட்டாள்கள் ஆகியதால்
எங்கள் பிறவிப்பயனை இழக்கவேண்டுமோ?

ஆளும் ஊழி பரியந்தம்
ஆடியே தீருவோம்" என்று
புதிய ஏற்பாடொன்று புதுக்கி
வெள்ளை வேதத்தின்
பரிமாணம் பெருக்கினான்.

நீரேந்து பூமி விளைபூமிகள் குளிர்பூஞ்சோலைகள்
பொன்னும் மணியும்
புதைந்த வளநிலங்கள்
பூலோக சொர்க்கம் படைக்கப் பொருத்தமென
கண்ட இடமெல்லாம் பராதீனப்படுத்தினார்
பிதாவின் கட்டளையை அமுல்செய்துள்ளேன்
சுதனே என்னை ஆசீர்வதியும்" என்று
யேசுவின் சிலைமுன்
முளந்தாளிட்டு வணங்கினான்.

ஒழிந்த கட்டாந் தரைகளைச்
சட்டச் சுவர்களால்
சிறைக்கூடம் செய்து
கறுத்த மலர்களைக் காய அடித்தான்.

வேர்வூட் தெடங்கிய
தூதுப் பணியை
வாரிசாய் வந்த மேய்ப்பர்கள் எல்லாம்

கண்ணாய்க் கருத்தாய்க் குறிபிசகாது
காரியப்படுத்தினர்.
கரும் பூக்களோ
இதழ்களை அகல விரித்து
பரணி பாடிச்
சிலிர்த்து மலர்ந்தன
"ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸ்"
என்னும் தானை அமைத்து
களங்காணப் புறப்பட்டன.
"காந்தீய" ஆயுதமும்
உலக மனச்சாட்சியென்னும்
கேடயமும் பற்றிக் களத்தில குதித்தன.

கருமலர்ப் படையிடையே
ஒரு பெருஞ் சூரியன்
உதயம் செய்தது.
"நெல்சன் மண்டேலா" என்னும்
நாமமும் பெற்றது.
உள்வனத்துப் பறவைகள் எல்லாம்
பூபாளம் பாடின
அந்த இன்னிசை உலகம் முழுக்க
ஓங்கி ஒலித்தது.

சூரியனின் தகிப்பைத் தாங்க வொண்ணாது
சிறைக் கோட்டக்
கூண்டில் அடைத்தனர்
காராக் கிரகத்தின
கனமான கருங்கற் சுவர்களையும்

கருஞ்சூரியனின்
செங்கதிர்கள் துளைத்தது
நானா திசையும்
ஆரோகணித்துப் பாய்ந்தது
சுவர்களின் கற்கள்
சுக்குநூறாகி தீச்சுவாலையால் பஸ்பம் ஆயின

சிப்பியிலே முத்து, முள்ளிடை ரோஜா
சேற்றில் முளைக்கும் செந்தாமரை போன்ற
வாய்ப்பாட்டு விதியாக
“டீக்கிளாக்” என்ற வெள்ளை வண்டு
பொய்யுடல் களைந்து
புதுப்பிறவி எடுத்தது.
கருஞ்சூரியனை
அன்புச் சிறையில் அடைத்தது.
பாடிய பழைய வேதத்தையும்
இணைந்த புதிய ஏற்பாட்டையும்
கிழித்து
நெருப்புக்கு விருந்து படைத்தது.
வெள்ளை வணடுகளும்
வெண்ணிறப் புஷபங்களாகப்
புனர் ஜென்மம் எடுத்தன.

கறுப்பு வெள்ளை மலர்கள்
பூத்துக் குலுங்கித்
தென்றலில் அசைந்து,
வசந்த கோகிலங்களின்

மோகனப் பண்ணிசையில்
மெய்மறக்கும் காட்சியினை
தெற்கில் நீ காண்கின்றாய்!

உடுக்குலம் பொடியாகித் தலைமீது வீழ்ந்தாலும்
எடுத்தபணி ஓயமாட்டேன்,
என்றோதி விடுதலைச் சங்கநாதம் செய்து
ஓங்காரமாகி நின்றோன்
கொடுமைக்கு மேற் கொடுமை இழைத்திட்ட போதிலும்
தன்மக்கள் விடுதலைக்காய்
குறிவென்ற குலையாத மறைவீரன்
நெல்சன் மண்டேலாவின்
எடுத்தபணி வென்றிட
உருக்கு மனம் கொண்டுடன்
உழைத்திட்ட டீக்ளிாக்காம்
உண்மைக்குத் தலைசாய்த்த வெள்ளை மனத்தன் நீ
உண்மையில் வெள்ளையனும் நீ
கொடுமுடியாய் வரலாற்றில்
கோலோச்சும் உன்மேன்மை
கூற ஒரு நா போதுமோ
குவியல்க தமையேற்று
கொஞ்சுமன் மனமலர்க்
குவியல்கள் தமையேற்று
கொள்ளுவாய் மகிழ்ந்து நீயே!

# விண்ணப்பம்

இருள் சூழ்ந்து சிறைப்பட்ட உலகம் காடாய்
இழிவுற்று நலிவுற்று இருந்ததன்று.
வெளிகொண்டு தனுப்போட்டு வேங்கைக் கூட்டம்
வேட்டைக்கும் மேலாக வேட்டையாடித்
தறிகெட்டு அலைந்தமளி செய்த காலை
தகவுரைத்து வாழ்த்திற்று கூகைக் கூட்டம்.
பொருளற்ற துயர்வாழ்விற் பிணைந்த மான்கள்
புலராதோ பொழுதெனறு பொருமி ஏங்கும்.

ஏழ்மைகளைத் தகர்ப்பதற்கோர் ஏவு கணையாய்
எத்தர்களைத் தீய்த்தளிக்கும் எரி வெந்தணலாய்
கீழ் வானிற் செஞ்சுடரின் கற்றை தோன்றிக்
கும்மிருட்டை உலுப்பிற்று ஒரு நாட் காலை.

அன்றந்தப்பாலையிலே உதித்த ஜோதி
அஞ்சாது துஞ்சாது ஆர்த்தெழுந்து
சென்றோடி மூலையெலாம் துழாவிப்பார்த்துச்
செறியிருளின் படையழித்துச் சினந்த வேங்கைக்
குன்றுகளைத் துகழ் செய்து குமைந்த மான்கள்
கொத்தடிமை விலங்கொடித்துக் குறைகள் தீர்த்த
பொன்றாத பெருங் கருணை முகம்மதென்னும்
புகழ்ப் பெயரைக் கேட்டுலகம் புளகிற்றன்று.
அல்லாவின் தூதுரைத்த அண்ணல் கோமான்
அருள் விளக்கின் ஒளிச்சுடர்கள் அரபு மண்ணில்
மல்லாடி அறிவற்று மமதையுற்று
மதியற்றுக் குணமற்று மகிமை யற்றுப்
பொல்லாத புரிந்துழன்றோர் மீது பாய
புன்மைகளைக் கழைந்துலகிற் புதுமை செய்தார்
எல்லோரும் கொண்டாடி மகிழ்வோம்
அன்னார் இயற்றியுள பெருவீரம் பரணி போற்றி.

அந்தலூஸ் நாட்டினிலே எழுநூறாண்டு
அரியணையிற் கொலுவிருந்து அழகு செய்தோம்
சிந்து வெளி ஆரியரின் சிரங்கள் கொய்து
சீனத்தின் எல்லைவரை செயங்கள் கொண்டோம்.
சிந்தைகளைக் கலக்கியாண்ட பார சீகம்
சீர் பெற்று நின்ற ரோம சாம்ராஜ்யங்கள்
பந்துகளை உருட்டுதல் போல் உருட்டி விட்டோம்.
பாருலகின் பெரும்பரப்பை பரிபா லித்தோம்.

பாய்விரித்து ஏழ்கடலும் பவனி வந்தோம்
பண்டங்கள் பரிமாற்றம் செய்து ழைத்தோம்
கோபுரங்கள் கொடி மாடம் கொத்த ளங்கள்
கூன் பிறையின் பகைபுலத்திற் கட்டி வாழ்ந்தோம்.
தீவிரித்தோம் இஸ்லாத்தின் சிறப்பை யெல்லாம்
திக் கெட்டும் பரப்புவதில் செயமே கண்டோம்
ஆயிரத்து நானூறு ஆண்டு கால
அசையாத வரலாறு சமைத்து விட்டோம்.
பத்தி வழி நடத்தியதில் மேண்மை காணும்
பக்குவத்தை ஊட்டிவரும் வறுமை வாழ்வின்
முத்திற்கு வழிகாட்டி விட்ட தோடு
முற்றிற்றுப் பணியென்று முடங்கி டாது
சொத்துக்கு வரிபோட்டு ஏழை வாழ்விற்
சொர்க்கத்தை மலர்வித்துச் சமத்து வத்தைச்
சித்திக்க எனமுரசு ஆர்த்து நின்றோம்
செழுமைக்கு நாம் வித்து என மகிழ்ந்தோம்.

இன்றுலகில் நிறைந்துள்ள முஸ்லீம் நாட்டு
ஏழைகளின் விகிதத்தை எண்ணு வோமா?
உண்ணஒரு வேளைக்கு வழியு மின்றி
உடுக்கின்ற கந்தைக்கு மாற்று மின்றி
திண்ணைகளில் ஒன்றுதற்கும் வகையு மின்றித்
திரிகின்ற அவரேழ்மை சிந்திப் போமா?

உண்மையிலந் நாடுகளின் அரசுகட்டில்
உள்ளவர்கள் வேற்றவரா? இல்லை இல்லை.
கொழுத்தவர்கள் அயலிருந்து இழைக்கும் பொல்லாக்
கொடுமைகளால் சுரண்டல்களால் அழுந்தி நாளும்
கொழுந்துவிட் டவயிற்றில் எரிநெ ருப்பின்
கோரத்தை ஒழிக்க வழி கண்டி டாமல்
தொழுதிடுங்கள், நோன்பிருங்கள், ஆன்ம வாழ்வின்
துவஜத்தைக் காத்திடுங்கள் மறுமைக் காக
உழுதிடுங்கள் பயிரிடுங்கள் என்று மட்டும்
உபதேசம் பண்ணிவிட்டு ஓய்கின் றோமே!
உழைக்கின்ற பாட்டாளி வியர்வை காய்முன்
ஊதியத்தைக் கணக்கிட்டு கொடுப்பீர் என்று
மழைக்கரத்து நபி கோமான் மலர்ந்த வாக்கை
மதிப்பவரார்? காப்பவரார்? மறையை ஓதி
விழாவெடுத்து விருந்தளித்து மகிழ்ச்சி கண்டு
வேடிக்கை செயலன்றி வள்ளல் நெஞ்சால்
விழைந்திட்ட சமவாழ்வு விளைத்திட் டோமா?
வெற்றுரைகள் விட்டிவற்றைச் சிந்திப போமா?

நித்திரையும் மறக்கின்றோம், பதுக்கல் மூலம்
நிதி திரட்டும் லட்சியத்தில் நிறைவா கண்டோம்?
பத்துக்கு நூறாக லாபம் வைத்துப்
பணம் பண்ணும் காரியத்தில் பக்தி மிக்கோம்
சொத்துவரி கணக்கிட்ட பைத்துல் மாலில்
சேர்ப்பதற்குச் சிறிதேனும் சிந்தித் தோமா?
சொத்தற்ற ஏழைகட்கு அவற்றை ஈந்து
சுவர்க்கத்தை அவர் வாழ்வில் மலர்வித் தோமா?

எங்களது நாடுகளை அரசாள் கின்ற
அதிபர்கள், மன்னர்கள், மதி மந் திரிகள்
எங்களது சமூகத்துப் பணம் மிக் கோரே

இருமைக்கும் பயன் நல்கும் மதிமிக் கோரே
எங்களது சமுகத்தின் இழிவு தாழ்வை
இளவில்காள் உன்னிப்பாய்க் கவனிக் கின்றார்
உங்களுக்கு அவர் சார்பில் ஓர் விண்ணப்பம்
உங்களது திறமைக்கு அருஞ்சந் தர்ப்பம்.

நாமளிக்கும் இவ்வாய்ப்பை ஏற்றுக் கொள்வீர்
நமது மறை விதித்துள்ள சொத்து வரியைக்
காமத்துக் கிடமின்றிக் கணக்குப் பார்ப்பீர்
கடமைப்பட் டவர் வாழ்வில் வசந்தங் காண்பீர்
தாமதங்கள் செய்யாதீர் நமது செல்வத்
தத்துவத்தை உலகமது அறியச்செய்வீர்!
நாமளிக்கும் வாய்ப்பைநீர் நழுவவிட்டால்
நாளை வரும் மாற்றத்தால் நசுங்கிப் போவீர்.

# வெண்பாவில் புலவர்மணி

காலத்தை வென்றதமிழ் கட்டிளமை குன்றாது
பாலோடு தேனோடு பாகும் பழச்சாறும்
தேவ அமுதமும் சேர்த்துக் கலந்தாலும்
மேவுந் தமிழுக்கு மேலாய் இனிக்காது
என்றும் இளமை சொடியா அழகோடு
கன்னித் தனத்தோடு காலத்தை வென்றுநிற்கும்
வண்ணக்குமரி வயங்கு தமிழ்மாது
தென்மதுரை மன்றத்தில் சிம்மாசனமிருந்தாள்.
பின்னர் கபாடபுரம் பொங்கு புகழ் நகரில்
அன்னை அரியணையில் ஆரோ கணித்திருந்தாள்
பஃறுளி யாற்றோடு பன்மலை கொள்ளடுக்கம்
மிகு புகழ் தென்குமரி மேவும் வளநிலமும்
பொல்லாங்கு செய்வதையே
பேர்வழக்காய்க் கொண்டகடல்
கொள்ள, வடமதுரைக் கோநகரில் வாழ்ந்திருந்தாள்
எல்லா மொழிகளுக்கும், எங்கள் தமிழ் மூத்த தென்போம்.
வல்லாண்மை பெற்றதென்போம்,
வாரிதியை ஒத்த தென்போம்
கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்தே வந்த தென்போம்
எல்லா உயிரும் ஓம்புகின்ற ஈசனவன்
நல்லாசி பெற்ற தென்போம்
நானிலத்தை ஆண்ட தென்போம்

இல்லை தமிழென்னில் இங்கெதுவும் இல்லை யென்போம்
எல்லாம் மிகச்சரியே! யாவையுமே
வாஸ்தவமே! இல்லையென்று சொல்லுகின்ற
ஓர்மை எவர்க்குண்டு

ஆழ அகலம் அளந்தாய்வு செய்வதற்கும்
நீளம் கனதி நிறைவுகள் காண்பதற்கும்
பத்தி பத்தி யாக வின்று பண் பாய்வு செய்வதற்கும்
வித்தாரம் பேசி விழாசிக் கழிப்பதற்கும்
சத்தான வாதச் சமர்க்களங்கள் காண்பதற்கும்
ஒத்துழைப்புத் தருகின்ற ஓங்கு தமிழ் மொழியை
காத்து வளர்த்து கலையும் கவினழகும்
சேர்த்து எமக்களித்த செந்நாப் புலவர்கள்.
இல்லையெனில் இல்லையெனில் இங்கு தமிழேது
இல்லையெனில் இல்லையெனில் இன்றெமக்கு
ஏடெடுத்து வித்தாரம், செய்து புகழீட்டுதறகும்
மேடையில் எங்களது மேட்டிமையைக் காட்டுதற்கும்
நாடாளும் மன்றேறி நமது நலம் காக்குதற்கும்
ஓடாய் உழைப்பவரை உள்ளளவும் ஆளுதற்கும்
இன்னபடி இன்னபடி இன்னும் பல செய்வதற்கும்
கன்னித் தமிழே கதி யென்னல் பொய்யாமோ?
இன்னே கதியாய் இருக்கின்ற செந்தமிழை
அன்னை மொழியாய் அழகொழிரும் நந்தமிழை
சங்கத் திருந்து சமைத்த கவிவாணர்
பொங்கும் மரபு வழி வந்த திரு வள்ளுவனும்
சிந்தையினை அள்ளும் சிலப்பதிகாரத்தை
தந்த இளங்கோ, தமிழுக்கு நல்லாரம்
சூட்டும் இராமகதை செய்த தலை வணங்கா

பாட்டாண்மைக் கம்பன், பக்திச் சுவை சொட்ட
உள்ளம் உருக வைத்த ஆழ்வார்கள் நாயன்மார்
வெல்லத் தமிழில் வெற்றி மிகு சீறவைத்
தந்த உமறும் தலை மக்கள் சொத்தாகி
நொந்த தமிழ்மாதை மீட்டெடுத்துப் பாமரர்க்கு
ஈந்த கவி பாரதியும் ஈறாகப் பன்னூறு
நந்தா விளக்கனைய நற்புலவர் காத்த தமிழ்
வாழையடி வாழை யென வந்த பெரும் புலவர்.
மேலாம் மரபுவழி மேலும் சிறப்பிக்க
என்று பிறந்த மகன் ஏழிசையின் சூட்சுமத்தை
நன்றாய்வு செய்தினிய யாழ் நூலை யாத்தளித்த
முத்தமிழ் வித்தகர் விபுலானந்தரது
சத்தை உறிஞ்சித் தமிழுக்குப் பொன்முடியாய்
இந்த நூற்றாண்டின் இணையில் தமிழ் முனியாய்
வந்துதித்த அற்புதமாய், வண்டமிழின் நற் பேறாய்
ஐயா புலவர் மணியான திருத் தொண்டாய்
பொய்யாய் எமை விட்டுப் புன்னுடம்பு நீத்தாலும்
மெய்யாய் தமிழ்க் கோவாய், மேதகையாய், செம் பாவாய்
பொய்யா ஒளிக்கிற்றாய் புஷபிக்கும் பூங்காவாய்
இப்புவியில் வந்தார் இனிய தமிழ் பாமாத்தார்
அப்பா புலவர்மணி

நான்கு வகைப்பாவால் நலமார்ந்த பாவினத்தால்
தேன் கதலி ஈறான தித்திக்கும் எப்பொருளும்
நாமழிந்தோம் நாமழிந்தோம் என்றலறப் பாட்டிசைத்தார்
தேமதுர தண்டமிழின் தெய்வீகப் பாவாணர்.
பாரத வெண்பாவைப் படைத்த பெருந்தேவர்
ஆராத் திருவிரட்டை யாத்தளித்த காரைக்கால்

அம்மையை அவ்வயை இன்னும் பலபேரை
அம்போ எனத தூக்கி வீசி நளவெண்பா
யாத்த புகழேந்தி யாராலும் வெல்ல வொணா
கீர்த்தியினைப் பெற்று தமிழ் கோலோச்சி
நின்றொளிந்தார் பார்த்தனுக்குக் கண்ணன் பகர்ந்தநற்
போதனையை கீர்த்தி மிகுந்தனற் தெய்வீகக் கீதையினை
மேலும் பலபொருளை வெண்பா வடிவத்தில்
சாலவும் கையாண்டு சாற்றும் புகழ்புத்தார்
எங்கள் புலவர்மணி என்பதனை நாடறியும்
தங்கத் தமிழும் தலைநிமிர்ந்த தென்றறியும்
கொல்புலியாய்ப்பாவலரைக் கொட்டுகின்ற வெண்பாவை
வெல்புலியாய் வந்த பெரிய தம்பிப்பிள்ளை
புலவர்மணி ஐயா போட்டுதைத்த வற்றை
உலகே அறியும் உவந்து

புலவர் பெருமக்கள் இல்லையெனில் இங்கு
இலக்கியம் ஏது? இனிய தமிழேது.
சீனி என எழுதி நக்கிச் சுவைத்தாலும்
சீனி என இனிக்கா சிந்தையிலே கொண்டிடுவோம்
எங்கள் தமிழழியாதிங்கிருக்க வேண்டுமெனில்
தங்கத் தமிழ் படைக்கும் தக்கோரை வாழ
வைப்போம் அன்னார் படைப்புகளை நூலுருவில்
ஆக்குதற்கு முன்னின்றுழைப்போம் முடிவு!

# மோகனா

வேகத்திரை விலக்கி
மின்னுகின்ற உன் வதனம்
பேகடை ராகத்தின்
பூஞ்சிரிப்பே யானாலும்
மோகனா என்றே
மொழிய மனம் முனைகிறது.

ஓவியனும் சிற்பியும்
காவியம் செய் கவிஞனும்
கண்ட கலைக்கனவின்
கவினார்ந்த வார்ப்படம் ஆன நீயே
படைப்பின் மோகனம்

எரியும் குண்டத்திலும்
அன்பின் கனிவையே
அவியாகப் பெய்து
கல்யாண குணங்கள் எவையெவையோ
அவற்றையெல்லாம் மோகிக்கும்
உன் மனமும் மோகனம்

பொல்லாப்பையே நேசித்துப்
போரிடும் இவ்வையத்தில்

மானுடம் பூக்குமோர்
மாஞ்சோலை கண்டு
பூபாளமாய்ப் பூத்துக்
கல்யாணியாய்க் காய்த்து
மோகனத்தில் கனியுமதில்
கானக் கோகிலமாய்
சாஸ்வத சங்கீதம்
பாடத்துடிக்கும் உன்
தேடலும் மோகனம்

ஊழித் தாண்டவம் ஆடி
உருக்குலைய அழித்துவிட்டு
புதிதாய் ஓரங்கம் புதுக்கி
அழகிய பரதம் ஆடத் துடிக்கும்
உன் ஆர்வமும் மோகனம்

இச்சகம் பேசி
உச்சகம் வாழ்வதிலும்
வானக் கூரை வாழ்வே நலம்
அலங்கிருதச் சிவிகையிலே
ஆரோகணிக்கும் அடிமையிலும்
நெருஞ்சிவனம் என்றாலும்
அந்தச் சுதந்திர பூமியிலே
வெறுங் காலில் பயணிக்கும்
வழிப்போக்கன் மேல்
பஞ்சணை இலையெனினும்
பருக்கைக் கல் வெறுந்தரையில்
படுத்துப் புரள்வதே யாகம்

கலையின் செஞ்செழிப்பை
நல்லறிவின் கதிர்வீச்சை
நன்மைக்கே உழைக்கும்
வினைத்திறனை
மன்னன் தலைக்கே மகுடம்
எனுமாப் போல்
தக்கார் தலைகளுக்கே
தலைப் பாகைகள் சூடுவதை
அறக்கொத்தி முதலாகப்
பீடைகளை வென்று
கொட்டிக் குவித்த மகசூலைத்
தட்டுகள் தாழ்ந்து மிதக்காமல்
சமன் செய்யும் தராசுகளை
பிதுரார்ஜிதங்களைச்
சுகிக்கும் உரிமையைத்
தம்பிகளுக்கும் தரும் அண்ணனைக்
கண்டு களித்தலே யோகம்
என்று நீ ஓதிய
திருமந்திரங்கள் எல்லாம்
மோகனம் அல்லாமல் வேறென்ன?

உன் மோகன மஞ்சத்தில் மெய்மறந்து
ஓலைப்பாய் சுற்ற
நீ விடுத்த அழைப்பின் மோகனம்
புரியாத கணக்காய்
முழி பிதுங்க வைத்ததன்று
எட்டுந் தொலைவில்
நீயிருந்த வேளையிலே,

தொட்டுச் சுகங்காணத்
தொடை நடுக்கம் தடுத்ததன்று
இன்று நீ எட்டாத் தொலைவில்
உன் அருமை புரிகிறது
புரியாத கணக்குக்கு
விடையும் விரிகிறது
தயக்கமும் விடை கொண்டு
தட்டழிந்து போகிறது.

உன் மோகன ஆவேசிப்பில் வசமாக
மதியற்றுப் போனதும்
மனம் இறுகி விட்டதும்
எத்தனை இழப்புக்களுக்குக்
காரணம் ஆயிற்று.

விட்ட தவறுகள்
வேதனையில் கருவாகி
சூறாவளியாய்ச் சுழன்று
அடித்ததனால் மார்புகள் பிளந்து
எறிபட்ட இதயங்கள்
காரைப் புதரின்
முள் மஞ்சில் சிக்குண்ட
பீஷமர்களை எண்ணித்தானே
கண்ணீர் வடிக்கின்றாய?

சொர்க்கத்தின் சௌந்தர்யமும்
நன்மாராயம் செய்யப்பட்டுள்ள சௌகரியங்களும
கவிழ்ந்த கண்ணழகியரின் கவனிப்பும்

விருந்துதான்...
நீயோ
மயிரிழைக் குழாய்களிலும்
உணர்வுக் கலங்களிலும்
பாய்ந்து பரிகாரிக்கும் மருந்து
நானோ
மருந்தை உபாசிக்கும் நோயாளி
ஆய் மோகனா
பரிந்துரை செய்வோரைப்
பரிகாசம் பண்ணிவிடாதே
அன்றில்களாய் முகாரி பாடியது
போதும்
வானம்பாடிகளாய்
மோகனம் பாட நாள் குறி.

# போர்ப்பத்து

01

உள்ளங் கலந்து தமிழ் பேசுமிரு இன மக்கள்
உறவாடி வாழு மூரின்
உடையவள் பிள்ளைகள் உடனுறையும் பெற்றோர்கள்
ஓங்குபசி தீர்ப்பதற்காய்
செல்லையாப் போடியார் சிந்தை தனைவென்ற
செய்யது இப்றாகீம் என்பான்
கொல்லும் விலங்குகளும் கொடிய விஷப் பாம்புகளும்
குலவு நெடுங் கானகத்தில்
நல்லபடியாக அவர் கால் நடைகள் மேய்த்தங்கு
நடக்குமொரு நாள்தனிலே
நமனாக இனமோதல் பொட்டிலொரு குண்டாக
நடந்திற்று உயிருமெங்கோ!
எல்லையிது என்றெழுத ஒண்ணாத வலைப்பின்னல்
வரைவுக்குள் வாழும் மக்கள்
பொல்லாம்பு தமக்கு ள்ளே புரிந்திடல் சரிதானோ?
புகலுவாய் மோகனா நீ!

02

காடுகளில் முன் நிலத்தில் கண் பரந்த புல்வெளியில்
கால்தேய நடந்து நாளும்
காட்டிலுறை விலங்கென்றோ கூடிய விஷப்
பாமபென்றோ
கவலையோர் சிறிதுமின்றி
போடியார் அலியாரின் கால் நடைகள் மேய்க்கு தொழில்
புரிகின்ற பரமலிங்கம்

பெண்டாட்டி பிள்ளைகள் பெற்றகிழம் ஆனவர்கள்
பசியாற்ற வாழுமேழை.
வாடியிலே பரண்மீது கண்வளரும் நள்ளிரவில்
வீழ்ந்ததொரு "ஷெல்" வெடித்து
வாடியுடன் தான்சேர்ந்து வெந்துடலம் கரியான
வேதனை உரைக்கலாமோ?
உடமை கொழுத்தியரு உயிர்கள் குடித்து உடல்
ஊனம் அளித்து மகிழும்
ஓர்மம் உடனெழுந்த போரோய்தல் எந்நாளோ
உரைத் திடாய் மோகனா நீ!

03

நித்திரை தனை விடவும் தொழுகையே மேலென்னும்
மோகன மொழியும் சேர்த்து
மோதினார் அதிகாலை செய்கின்ற பாங்கோசை
கேட்டிருள் பிரியுமுன்னே
இத்தரை வாழ்விலும் மறுமையின் நாளிலும்
ஈடேற்றம் காணவென்று
இறைவனைப் பள்ளியில் அணியாக உடல்மனம்
ஒன்றித்து வணங்கும் வேளை
சித்தம் இனியவர்கள் செய்யாத திருப்பணியாய்
தீர்த்த சில வேட்டுகளால்
சிறுவர்கள் பெரியோர்கள் சேர்ந்தங்கு மௌத்தாகச்
சத்தியமும் சாய்ந்ததங்கு
சத்தியம் சாஸ்திரம் தழைத்தோங்கும் தமிழ் மண்ணின்
சரித்திரம் மாற்றிவிட்டோர்
சாக்காகப் போரினைக் கொள்ளுதல் சரியாமோ?
சாற்றுவாய் மோகனா நீ!

04

அரக்கர்க்கு நிகராக அமைந்தோர்கள் ஊருக்குள்
அடர்ந்தழிவு செய்தபேறாய்
பொட்டுகள் அழிந்தவரும்! பிள்ளைகளை இழந்தவரும்!
பெற்றோரைப் பிரிந்த பேரும்!
பெரியதோ சிறியதோ தமக்கென்று சொந்தமாய்
சுகங்கண்ட வீடுவாசல்
சொத்துகள் எல்லாமே போட்டது போட்டபடி
புறப்பட்டு வந்த மக்கள்
ஊரினது ஒரு பாலில் உள்ள இறை ஆலய
அடைப்புக்குள் தஞ்சமாகி
இருக்குமுயிர் காத்திடும் ஆர்வத்தில் வசமாகி
இருந்திடும் இரவுவேளை
ஆரோ கொடியவர்கள் புகுந்தழிவு செய்து மன
ஆவேசந் தீர்த்தரங்கு!
என்னதான் காரணம் சொன்னாலும் அடுக்குமோ?
இயம்புவாய் மோகனா நீ!

05

காலடியில் தம்மினத்துப் பிள்ளைகளே கற்கின்ற
கல்லூரி பலவிருந்தும்
கல்முனை நகரிலுயர் கல்லூரி ஒன்றினிலே
கற்பிக்கும் ஆசானாகி
பாலினும் இனிதாகப் பழகுமுயர் குணத்தானைப்
பார்த்தாலே பசியும் தீரும்.
பக்குவும் மிகவாகப் படிப்பித்து மாணாக்கர்
பந்தத்தை வென்ற செம்மல்.

தலைநகர் குடும்பமாய்ச் சென்றூர் திரும்புகையில்
தடுத்துவழி மறித்தெடுத்து
தடயமே இல்லாமல் செய்தார்கள: கர்ப்பிணித்
தாயுமே அதிலடக்கம்.
"சீலங்கள் இதோ" என்று உலகுக்குத் தந்திட்ட
சீராளர் ஆனமக்கள்
பேரைக் கெடுப்போரும் போரிலே மறைவதைப்
பொறுப்பாயோ மோகனா நீ?

06

இந்துவாய் பிறந்தாலும் இஸ்லாம்மத பாடத்தை
எழுதியதில் சித்திகண்டோன்
இஸ்லாமிய மக்கள் தம்மோடு உறவாடி
அவர்மனம் வாழ்ந்த அன்பன்.
செந்தமிழில் நல்ல இலக்கியம் செய்வோரைச்
சிரம்தாழ்த்தி வணங்கும் சீலன்.
சித்தம் முழுவதும் இலக்கியச் சுவைதனைச்
சேமித்து வாழ்ந்த ரசிகன்.
சந்தமும் இன உறவைச் சாதிக்கும் நற்பணியில்
சதானந்தம் கண்டுவாழ்ந்தோன்.
அவன்பயணம் செய்வண்டி அமர்க்களம்
ஒன்றிடையே அகப்பட்ட கொடியவேளை
பாந்தமுடன் ஓர்சிறுமி உயிர்காக்கத் தன்னுயிரை
பரிவுடனே கொடுத்து மாண்டான்!
பண்பான மக்களையும் பலிகொள்ளும் போரேரயப்
பாடுவாய் மோகனா நீ?

07

மனைவியின் விதவைத்தாய் தந்தசிறு
வளவிலொரு பாகத்தை விற்றெடுத்து
கரத்தையும் மாடொன்று வாங்கியதை ஓட்டிக்
காலத்தைக் கடத்தும் மீரான்.
இனமோதல் ஊரெல்லாம் எதுவெதுவோ
செய்தபின் ஓய்வெடுத் திருந்தவேளை
இற்றதன் குடிசைக்கு வேய்ந்திடக் கிடுகுகள்
வாங்கினான் இளையதம்பி.
மனையுள்ள தன்னூர்க்கு எடுத்தேக மீரானின்
கரத்தையைத் தானமர்த்தி
மீரானும் மாடும முன்நடக்க இளையானும்
பின்னாக நடந்துபோனான்.
போனவழி மீரானும் மாடும் கரத்தையும்
மீளாத! காவியங்கள்
புனைந்தோரும் போர்பேரில் மறைந்தார்கள்.
சரிதானா? புகன்றிடாய் மோகனா நீ!

08

அழுக்கடைந்து போகின்ற ஆடைகளைக் கழுவி
அணியக் கொடுத்து நாளும்
அரைவயிறு உண்டுமே வாழ்வைக் கடத்தும்
ஏகாலி ஆன ஏழை
வெளுத்ததுணி மூட்டையைச் சைக்கிளிலே கட்டி
மிதித்தூர்கள் சென்றவற்றை
விநியோகம் செய்துதன் வீட்டுக்கு மீள்கையில்
மிருகங்கள் ஆனபேர்கள்

"இழுத்தெடு அவனை" என்றார்கள் இழுத்தார்கள்.
எங்கேயோ கொண்டு போனார்
இற்றை வரைக்குமவன் எனனானான் என்பது
எவர்க்குமே தெரியவில்லை!
தொழும்புகள் புரிகின்ற தொழிலாளர் தமைத்தானும்
தவிர்த்திட மனமிலாத
வெறியையும் போர் தந்த விளைவென்று
கொள்வதா? விளம்புவாய் மோகனா நீ!

09

தங்கிடும் கூடார வரிசைகள் தீப்பற்றிச் சாவுகள்
நிகழ்ந்தபோதும்
சாத்தானைக் கற்களால் அடிக்கின்ற தளத்திலே
துவையுண்டு மடிந்தபோதும்
தாங்கிட ஒண்ணாத வெப்பத்தால் பல நோய்கள்
தாக்கியே உலைத்தபோதும்
தரையிலும் வானிலும் வாகன விபத்துக்கள்
தாராளம் செய்தபோதும்
இங்கெலாம் தமதுயிர் இழக்காது இறை ஏவல்
இறுதிக் கடமை ஹஜ்ஜை
இயற்றியே தாய்நாடு திரும்பியோர் தம்சொந்த
ஊருக்குப் போன வழியில்
இங்கிதம் என்பது என்னவென்றறியாத
இனவெறி கொண்ட பேர்கள்
அவருயிர் பறித்ததும்! போராட்டம் ஆகுமோ?
உரைத்திடு மோகனா நீ!

10

பந்தல்கால் தறிக்கத்தீப் பள்ளயமும் களைகட்டிப்
பரபரப்பாகி நிற்கும்
பறைமுளக்கும் குழலொலியும் பகலிரவு பாராது
பக்திரசம் ஊட்டி நிற்கும்
வந்திடுவர் கடை வைப்போர். வாங்கிடுவோர் பக்தர்கள
விழாக்காண வருபவர்கள்,
என்றிரவு பகலாக மக்களது பெருவெள்ளம்
அணிதிரண்டார்ப்பரிக்கும்
முந்திடும் பக்கத்தூர் முஸ்லிம்கள் விழாக்காண
மெருகேறும் பள்ளயந்தான்!
முஸ்பாத்தி பார்க்கவே சிவிலுடையில் சென்றபடை
முஸ்லிம்கள் இறந்ததற்காய்
சந்ததமும் அறியாத சங்கதியாய்ச் சிலபேர்கள்
தெருவிலே இறங்கி நின்று
தீப்பாய்ந்து வெறியாடிச் செய்தபோர் சரியாமோ?
செப்புவாய் மோகனா நீ!

# சூட்சுமப் பத்து

01

வானை அளந்து இருள் வாழ அளித்து இடம்
வைகுதொடு சோலை வனங்கள்
வளர்பற்றைச் செடிகொடிகள் தமடியில் ஒருபோதும்
வளராது ஓங்கி நிற்கும்

சேனைப் பயிர்செய்து சீவனம் புரியுமவர்
சரித்து எரி மூட்டிவிட்டுச்
சாம்பல் நிலம்சாடித் தானியம் முதலாகச்
சாகுபடி செய்வரங்கு
ஆன பயிர்விளைந்து அறுவடையும் ஆகியதை
அவர்கொண்டு போன பின்னர்
அடுத்துவரு மாரிமழைத் துளிமண் விழுந்ததும்
ஆகுமொரு புதுமை காணீர்!
சேனை முழுக்கவும் தகரை முளைத்தெழில்
சொரியுமொரு சூட்சுமத்தின்
காரணம் காணாமல் கடுகிப் பறந்தாலும்
காரியம் ஆமோ நவின்றிடு மோகனா!

02

ஆறுகளின் நீர் வரவும் வாவிகளின் உபயமதும்
அமையாத உயர்நிலத்தில்
இடையிலொரு பள்ளத்தில் இருக்கும் சிறு குளமாக
ஏகாங்கி யாகிநிற்கும்
நீரேந்து நிலங்களிலே பொழியுமழை நீர் வந்து
நிறைந்தழகு ஊட்டி நிற்கும்
நீந்தி மகிழ் மீன் வகைகள் நிரைந்துவரு பறவையினம்
நீர்ப்பூண்டும் நிறைந்து நிற்கும்
கோரமாய் வருங்கோடைக் கொடுமையதை ஆற்றாது
கோலங்கலைந்து நிற்கும்
கணமும் வெடித்து மீன் கணமும் அழிந்து கடுங்
கானலை வீசிநிற்கும்
மாரியும் மீளமண மஞ்சிலே அமருமிள
மங்கையாய் மீண்டும் நிற்கும்
மீனும் உலாவரும் மெய்ம்மையின் சூட்சுமம்
மொழிந்திடு மோகனா நீ!

03

வானோங்கு சோலைகளும் சோலைகளில் பலவாக
வளருமரஞ் செடிகொடிகளும்
நீர் நிலையில் பூண்டுவகை நீள்கோடி புல்வகைகள்
நிலமெங்கும் படர்தல் காணீர்!
ஆனஅவை அத்தனையும் நாள்தோறும் பருவத்தும்
அணிபுனையும் மகளிர் நாண
வண்ணங்கள் பலவாக வடிவங்கள் பலவாக
வகைதொகையும் விகற்பமாக
தேனூறும் பூக்களால் ஆராத்தி ஏந்துமுயர்

அழகுக்கு நிகரு முண்டோ
அவைதரும் நறுமணம் ஒன்றைமற் றொன்று
ஒவ்வாத சூட்சுமத்தை
ஞானங்கள் பலகற்று மேதமையும் தாமுற்று
மென்மேலும் ஆய்வு செய்யும்
தக்கபெரு மக்களும் சாற்றுதல் கூடுமோ
தந்திடு மோகனா நீ!

04

எத்தனை விதம்விதம் கனிகளிவ் வையத்தில்
கனிந்துலகு ஊட்டல் காணீர்
ஒவ்வொன்றும் தனிவண்ணம் ஒவ்வொன்றும்
தனிவடிவம்
உண்மையினை உணர்ந்து பாரீர்!
அத்தனை கனிகளின் வெவ்வேறு வாசகத்தின்
அருமைதனை நினைந்து பாரீர்
அவைதரும் சுவைகளும் ஒன்றைமற்றொன்று
ஒவ்வாத சூட்சுமத்தை
இத்தரை விஞ்ஞான ஆய்வுகள மையங்கள்
அமர்ந்தாய்வு செய்வல்லுநர்
எல்லோரும் ஓரணியில்
எல்லோரும் ஒருகுறியில்
உழைத்தாலும் அறியலாமோ
வித்தகம் விண்ணாணம் மேலாண்மை கைவந்த
மேலாளர் நாங்களென்று
மேல்நின்று முழங்கினும் மேருமலை ஆகுமோ
மொழிந்திடு மோகனா நீ!

05

கன்னங்கரி தானகரு வண்ணமும் வளைகொம்பும்
வாளிப்பும் வாய்ந்து எங்கோ
வாழுமொரு எருமைகளின் பட்டியிலே
எஜமானின்
குறிசுடா இளய நாகு
தன்னந்தனி யாகவழி தவறியே வந்து அதில்
தானுமோர் அங்கமாகி
தானீன்ற கன்றுகள் கன்றுகளின் கன்றுகள்
கண்டுகிழ மானதங்கே
கன்றைத் தொலைத்திடையன் தேடுதே டென்றுமே
தேடியும் வியர்த்தமாகி
காலங்கள் உருண்டோடக் கண்பார்வை
தான்தேயக்
கோலூன்றி நடக்கு மோர்நாள்
தண்ணீரில் சேறுசுகம் தானாடிப் புரளுகிழ
எருமையை அவனறிந்து
அணையவும் வாடை உணரும் அவன் சூட்சுமம்
உரைப்பாயோ மோகனா நீ!

06

ஆதி மனிதன் முதல் இவ்வுலகில் அவதாரம்
ஆனவர்கள் கோடி கோடி
அவரவர்க் குரித்தான வேளைவந் துற்றதும்
அழிந்தோரும் கோடி கோடி
தீதோ நலமோ அடைந்திங்கு பிறந்தகடன்
தீர்ப்போரும் கோடி கோடி
தீருமொரு நாள்வரையும் பிறந்தழிய எனவரவு

தரவுளோர் கோடி கோடி
ஓதிக் கணக்கெடுக்க ஒண்ணாத எண்ணிக்கை
உடையதாம் மனிதவெள்ளம்
ஒவ்வொருவர் அங்கையுள் ஓடிடுகை ரேகைகளும்
ஒவ்வாத சூட்சுமத்தை
மேதைத் தனம்மிக்க மேன்மக்கள் பலகோடி
முனைந்தாலும் அறிய லாமோ
மெய்ஞ்ஞானம் விஞ்ஞானம் எதுவாலு
மாகுமோ இயம்பிடு மோகனா நீ!

07

சிவப்பான தோல்வண்ணம் பழுப்பான மயிர் வண்ணம்
பளிங்கான கண்வண்ணமும்
உடைத்தான மனிதர்கள் என்றாலும் அவருள்ளே
விகற்பங்கள் பலவே காணீர்!
கறுப்பாலே அமைதேகம் சுருளான முடிகோலம்
அதைப்பான உதடு நாசி
உரித்தான அவருள்ளும் ஊர்தோறும் உடல்வாசி
வெவ்வேறு அமைதல் காணீர்!
வெளுப்பான எலுமிச்சம் பழமேனி சிறுகண்ணர்
அவருள்ளும் விகற்பம் நூறு
இடைப்பட்ட இனமக்கள் என்போரும் தமக்குள்ளே
இணையாத வடிவு தாங்கி
வாழுவோர் வாழ்ந்தோர்கள் வாழவர உள்ளோர்கள்
முகவாக்கும் ஒன்றையொன்று
ஒவ்வாத சூடசுமம் எதுவென்று கண்டுமே
உரைப்பாயோ மோகனா நீ!

08

மானுடர் இவ்வுலகில் வந்து உயிர் வாழ்ந்தோரும்
மறைந்தோரும் எண்ணில் கோடி
மண்ணகம் எங்குமே வகைதொகை பலவாக
வாழ்வோரும் அன்ன கோடி
வானாதி பூதலயம் எங்குமே இனிவாழ
வரவுளோர் அளவில் கோடி
வாழ்ந்தவர் இருப்பவர் வந்து இனி வாழ்ந்திட
வரவுளோர் எவர்கள் தாமும்
ஆனஇம் மானுட வெள்ளத்தி னோர்தமது
உள்ளத்தில் ஆம்கருத்தை
ஒருவர்க்கு மற்றவர் உரைக்குமொழி யாயினும்
ஒலிக்குறிப் பேயாயினும்
இனித்தாலும் கசந்தாலும் அவர்குரல் ஒன்றையொன்
றொவ்வாத சூட்சுமத்தின்
காரணம் இதுவென்று கண்டிடல் கூடுமோ
கூறிடு மோகனா நீ!

09

பாலுண்டு தேனுண்டு பட்டிகளின் தொகையுண்டு
பழத்தோப்பு பலவுமுண்டு
பழனங்கள் அளவின்றி விளைகின்ற நவதான்ய
பட்டறைகள் பலவுமுண்டு
கோழியா? ஆடா? கொழுத்த இளமாடா?
கொக்கா? குருவி வகையா?
கானுறையும் மான்மரையா? கடல்வாழும் மீன்வகையா?
குளம்வாவி வாழுமவையா?

புளியுப்பு உறைப்பினிப் பென்று அறு
சுவை அணுவும்
பிசகாத நுட்பமதாய்
சுவையாக மணமாகச் சமைத்துடன் ஊட்டிவிடச்
சேடியர் பலருமுண்டு
பாழான பலநோய்கள் பத்தியமும் தடைதுறும்
பரிகார வல்லுநர்கள்
படைசூழ வாழ்கின்ற பெருவாழ்வின் சூட்சுமப்
புதிர் சொல்லு மோகனா நீ!

10

நாற்றம் சிறிதாகத் தந்தைமுன் னாணூறும்
நீர்த்துளியி னோரணுவதாய்
தாயவள் சினையோடு சங்கமம் ஆகியிரு
இருட்சிறையி லேகிடந்து
உற்பத்தி யாகிப்பின் ஈரைந்து திங்கள்கள்
உருண்டோடு மோர் பொழுதிலே
நிருவாணக் கோலத்தில் பிறந்திங்கு சமத்தன்மை
நிலைநாட்டல் நினைந்து பாரீர்!
பிற்றைநாட் சூழ்நிலையில்
பெறுகின்ற வாய்ப்புகளின்
பேறான செல்வ வளங்கள்
பெற்றவர்கள் பெருவாழ்வும்
பெறாத அவர் சீரழிவும்
பெற்றிங்கு வாழ்ந்த பின்னர்
உற்றஒரு நாள்வந்து உதவாத சவமாகி
உயிரெங்கோ போனபின்னர்
தைக்காத வெள்ளாடை தரிக்குமொரு சூட்சுமம்
தனைச் சாற்று மோகனா நீ!

# நபிப் பத்து

01

தந்தையைத் தாயின் கர்ப்பத்தில் இருந்திட்ட
காலத்தில் இழந்த ஒளியை
தாயாரை விளையாடித் திரிகின்ற பருவத்தில்
தவித்துமே இழந்த ஒளியை
தந்தையின் தந்தையார் அப்துல்முத் தலிபவர்
தாவரித் தணைத்த ஒளியை
தாயுமாய்த் தந்தையாய் தாவரம் செய்தவர்
தன்னையும் இழந்த ஒளியை
தந்தையின் தமயனார் ஹாஷிமின் அன்பிலே
சார்பாகி நின்ற ஒளியை
தாய்க்குமே நிகரான எழுத்தறி வென்பதைத்
தெரியாது வளர்ந்த ஒளியை
சிந்தையாய் ஆடுகள் மேய்த்ததொழில் இளமையில்
செய்யவே நேர்ந்த ஒளியை
சிற்பரம் ஒளியான முகம்மதர் பேர்புகழ்
செப்பிடு மோக னாநீ!

02

வம்புத் தனமன்றி வேறொன் றறியாதோர்
மத்தியில் வாழ்ந்த ஒளியை
வாய்மையும் நேர்மையும் நன்மையும் தூய்மையும்
உண்மையும் வாய்ந்த ஒளியை
நம்பிக்கை என்கின்ற மேன்மைக்கு இலக்கண
நாயகம் ஆன ஒளியை
நங்கையர் திருவான நாயகி கதீஜாவின்

நல்மனம் வென்ற ஒளியை
செம்மையாய் அவர்தந்த வாணிபப் பொறுப்பேற்றுச்
செல்வமும் சேர்த்த ஒளியை
சிறந்ததொரு யுக்தியாய்க் கௌபாவில் அடிக்கல்லைச்
சேர்ந்தங்கு நட்ட ஒளியை
எம்மா பெரிதான பிரச்சினைகள் என்றாலும்
ஏற்றமுறத் தீர்த்த ஒளியை
எம்பரம் ஒளியான இறசூல் முகம்மதை
ஏந்திடு மோக னா நீ!

03

ஆரும் மயங்குகிற அழகான வெண்செம்மை
அமையுநிறம் இருந்த போதும்,
ஆஜானு பாகுவெனும் அடலேறு ஆனதிட
ஆகிருதி இருந்த போதும்
நேர்மையும் வாய்மையும் நிகரிலுயர் குணங்களும்
நிறப்பமாய் இருந்த போதும்
பேர்பெரிய குறைஷ்'க் குலத்திலுதி காளையாய்ப்
பீடுபெற வாழ்ந்த போதும்
பதியிழந்து அறுதாலிப் பட்டமுடன்
பதினைந்து வயதுமூத் திருந்த பாவை
அரியகுண கதீஜா அழகுக்குக் குறைவந்த
அருமைக்குப் புதிய வாழ்வு
அளித்திட்ட முகம்மது நபிபுகழ் பாடிட
ஆர்த்தெழு மோக னாநீ!

04

“கூறுமொழி உண்மைநீர் போதிக்கும் புதுமார்க்கம்
கைவிட இணங்கும் என்றார்”
“கொத்தடிமை யாயுமக்குக் குற்றேவல் புரிந்துமனம்
களிப்போமே என்றும் சொன்னார்”
“அரபுமண் முழுவதையும் ஆளுமகா ராஜனாய்
ஆக்குவோம்”! என்று சொன்னார்
“அழகிகள் என்றிங்கு இருக்குமிள மங்கையரை
அளிப்போமே” என்றும் சொன்னார்
“பெருநிதியம் என்றுள்ள அத்தனையும் கொட்டியுமைப்
பூஷிப்போம்” என்றும் சொன்னார்
பருதியை வலக்கரத்தும் பால்நிலவை இடக்கரத்தும்
பணிந்துநீர் தந்த போதும்
பெருகுநல இறைமார்க்கப் போதனையை ஒருபோதும்
கைவிடேன் என்று சொன்ன
பேருறுதி முகம்மது இறசூலின் புகழ்பாடிப்
பெருமைகொள் மோக னா நீ!

05

மார்க்கமும் வாழ அதை ஏற்றவர்கள் வாழமதி
யூகமாய் நடந்த மதியை
மன்னவன் நஜ்ஜாஷின் விருந்தாக அன்னாரை
வழிபோக வைத்த மதியை
மூர்க்கரால் மக்காவில் முஸ்லிம்கள் படுதுன்பம்
முடிக்கவழி கண்ட மதியை
முன்னேறும் நிலைக்காகப் பின்வாங்கும் யுக்தியாய்
ஹிஜ்ரத்துச் செய்த மதியை
மக்கக் குறைஷியர் மகிழ்வெய்த ஹுதைபியா

உடன்பாடு கண்ட மதியை
மதினாவில் மண்ணகம் வியக்குமொரு சமுதாய
மலர்வங்கு கணட மதியை
எக்காலத் தவருக்கும் ஏற்குமிறை ஆட்சிமுறை
ஏற்பாடு செய்த மதியை
இறையோனின் மதியொளி ஆனநபி முகம்மதென
இசைபாடு மோக னாநீ!

06

களந்தேர்ந்தார் பதுறுமலை அடிவாரம் முஸ்லிம்கள்
கதைதீர்க்க ஓடி வந்தார்!
கடியபடை கொண்டங்கு கர்வமுடன் போராடிக்
கடுந்தோல்வி கண்டு மீண்டார்!
புலிகாயப் பட்டதெனப் போர்செய்ய உகதுமலை
புறப்பட்டு மீண்டும் வந்தார்!
புகழாளன் நபிநாதர் முன்பற்கள் உடைந்தாலும்
புறங்காட்டிப் போயொ ளித்தார்!
பலம்மீண்டும் கொண்டு படை நடத்தியகழ்ப்
போர் முதலாய்
களங்கள்பல காண வந்தார்!
படையெடுப் பனைத்திலும் படுத்து அவர் மாண்டொழிய
போர செய்து வீர வாகை
குலவுதோள் படைவீரர் களம்வென்ற படைத்தலைவர்
கோளரியும் நிகரு மாகார்!
கர்த்தனிற சூலான களவீரர் முகம்மதுமேல்
கவிபாடு மோக னாநீ!

07

மலையாகிக் கடலாகி மணல்வாரு புயலாகி
முளங்கியதிர் இடியு மாகி
முதலைமத கஜம்கரடி மூர்க்ககுண சிங்கம் புலி
முற்றுவிஷப் பாம்பு மாகி
நிலைகொள்ள முடியுமா நிலம்மீது புதுமார்க்கம்?
நபியுமவர் கூட்டத் தாரும்
நிர்மூலம் செய்திடுவோம் நீறாக்கி ஊதிடுவோம்
என்றார்த்த குறைஷ்'க் காபிர்
நிலைமைவறி தாகத்தன் வாழ்நாளில் இறைதூதை
நிலைநாட்டி வென்ற விறலை
நாடாளும் மன்னாதி மன்னர்க்கும் தூதோலை
நற்செய்தி செய்த விறலை
தலைக்காக எதிரிகள் பின்னிய சூழ்ச்சிவலை
தவிடுபொடி செய்த விறலை
தரணிமுன் காணாத விறல்கண்ட நபிபுகழ்
சாற்றிடு மோக னாநீ!

08

நெறிகெட்டு ஆளுக்காள் அடிபட்டு நீசம் செய்
நிர்மூடர் தானுமாகி
நன்மையும் நவநாக ரீகமும் எதுவென்று
நாடாத மாக்க ளாகி
இருந்திட்ட அராபியர் இழிநிலை கழைந்தவர்
எழுச்சிபெற் றெழுந்து நின்று
ஆட்சியும் சமுதாய அமைப்பையும் உருவாக்கி
இடர்தரு வல்லா திக்க
பாரசிக மகுடமும் உரோமர்தலைக் கிரீடமும்

படிமீது பறித்தெ றிந்து
பாதியிவ் வுலகத்தை வென்றிளம் பிறைக்கொடி
பறக்கவே விட்ட அவரை
பார்த்தவர் பணிந்திடும பேர்கதி
அடைந்திடும் ஆற்றலை அளித்த மேலாம்
ஆற்றலாம் இறைவனின் அருளொளி நபிபுகழ்
ஓதிடு மோக னாநீ!

09

அறியாமை என்பதெழில் ஆபரண மாய்ப்பூண்டு
அடாவடி செய்து வாழ்ந்தோர்
அகங்களில் குர்ஆன் ஊடுருவி அறிவென்னும்
ஊற்றுக்கண் திறந்த போது
ஆராய்ந்து விஞ்ஞான ஒளிச்சுடரை உலகெங்கும
எடுத்தேகி ஏற்றி வைத்தார்!
எகிப்தினது கய்றோ ஸ்பெயினின் கொர்துபா
எழில்மிகு பகுதாது என்ற
பெரியநக ரங்களில் பல்கலைக்க ழகங்கள்
படைத்துலகை வியக்க வைத்தார்!
பல்கோடி அறிவுநூல் எழுதிநூ லகமெனும்
பரிசினை உலகுக் கீந்தார்
பாருக்கு அறிவொளி பாலித்த அரபியரைப்
பக்குவம் செய்த ஒளியாம்
பரமுத்தன் ஒளியான வரமுத்தர் நபிபேரைப்
பாடிடு மோக னாநீ!

10

சீமாட்டி கதிஜாவின் செல்வப் பெருக்குதமைச்
சேரவே இருந்த போதும்,
சீர்பெருகு மதினாவில் இருந்தரபு மண்டலம்
சிறப்பாக ஆண்ட போதும்
தாமாக வந்துபடை நடத்தியோர் கைவிட்ட
திருவெள்ளம் சேர்ந்த போதும்
தூயநபி மீதன்பு மிக்கோர் செய் பரிசில்கள்
தினந்தோறும் சேர்ந்த போதும்
தாமதியா தேழை மக்களுக் கீந்தவற்றைத்
திளைத்து மகிழ் வுற்ற நபியை
தன்வாழ்வில் ஏழ்மையும் எளிமையும் கோலோச்சச்
சந்ததம் வாழ்ந்த நபியை,
சேமமுறக் குடும்பத்துத் தலைவனாய்த் தந்தையாய்
சிந்தைமகிழ் வுற்ற நபியை,
சற்குணன் ஒளியான தண்மன நபிபுகள்
சாற்றிடு மோக னாநீ!

# நன்றிப் பத்து

## 01

அரசியலில் பெரும்சக்தி ஆனதொரு மந்திரியின்
ஏதிர்ப்பலையை எதிர்த்து நீந்தி,
ஒன்றாகக் கூடுமெழில் மண்டபம் ஓர்மையுடன்
உருவாக்கித் தந்த போதும்
நீரோடீ நெருப்பெடுக்கும் நுட்பமாய் மத்திய
கல்லூரி தானு மாக்கி
நிமிர்ந்து பல வளங்களும் நிறைவாகச் சேர்த்திட்ட
நிதர்சனம் கண்ட போதும்
பேரினிய ஷம்ஸினுயர் சமுதாயம் வாய்நன்றி
தானுமே வழங்கி டாத
பெருமையினைப் பொறுக்காது பெற்றார்கள்,
-ஆசிரியர்கள்

சபைகளில் எழுந்து நின்று
ப்ரியா விடை நல்கப் போராடித் தொற்ற நம
பண்பாளன் யூ எல் றகுமத்
துல்லாவாம் நண்பன்மேல் பரிவாகி நன்றிப்பா
பாடிடு மோக னாநீ!

## 02

இயலும் நிலைமையிலே உறவுமுறை என்றமைந்த
உயர்மக்கள் இருந்த போதும்
இதழுரப் பழகுகிற நண்பர்கள் என்றுபலர்
ஊரிலே இருந்த போதும்
பயிற்றி உயர்வடையப் பாலித்த மாணாக்கப்
பெருமக்கள் இருந்த போதும்
பொதுப்பணிகள் என்றூரில் புரிந்த அறுவடையில்
பயன்கொள்வோர் இருந்த போதும்
மையலாய் இவன் கதைகள் நூலாக்கும் கருமத்தை
மனங்கொண்டு முயற்சி செய்து
மகிமைதரு நூலாக்கி மனங்குளிர வைத்திட்ட
மனக்கினிய அன்பு நண்பன்
செய்ய குணநலமும் சீர்கல்வி நற்பதவிச்
சிறப்போடு குடும்ப மேன்மை
சேர்ந்தவன் எஸ் எச் எம் ஜெமீலுக்கு நன்றி சொலிச்
சிந்தைமகிழ் மோக னாநீ!

# ஊர்ப்பத்து - மருதமுனை

நாவாடு கனிமொழியால் நன்மதுர முனையென்னும்
நாமமுறு இடமுமாகி

நாளக மருத முனைசான்று மருதமுனை
நாமமே நிலையு மாகி

பாவோடித் தறியேறிப் பண்ணாடித் துணி நெய்யும்
பக்குவம் மிகவு மாகி

பன்பாய் இழைத்தலொரு கலையாகிப் பல் தொழிலும்
பயிலுமொரு நிலைய மாகி

மேவுமுயர் ஆசிரியர் மௌலானா மௌலவிகள்
மேன்மக்கள் தலமு மாகி

மனக்கினிய இலக்கிய கலைகளோடு கல்விவளம்
மலருமொரு கள மாகி

புவிலுயர் மக்கநகர்! அடுத்தோதத் தக்கநகர்
பெருமைக்கு உரிமை யாகி

பேரினியாள் எனைவளர்த்தாள்! வாழியநீ வாழியென
வாழ்த்திடு மோக னாநீ!

# 1980.01.31 இல் இலங்கை வானொலி மீலாத் கவியரங்கில்

வாசிக்கப்பட்ட தலைமைக் கவிதை
அண்ணல் நபி பெருமான் இப்பூவில் வந்துதித்த
பொன்னாள் திருநாள் புவியெங்கும் வாழ்கிறார்.
பல்கோடி முஸ்லிம்கள் பக்திப் பரவசமாய்
அல்லாஹ்வின் தூதர் அவனிக்கு நற்கொடையாய்
வந்த பெருமானின் வாழ்க்கையினை, சாதனையை,
சிந்தனையை ஊக்குகின்ற சீர்மைமிகு போதனையை
எண்ணி உருகி அவைகட்கு நல்வழியில்
சென்றுல வாழ்க்கையினைச் சீர்மையுடன் நடத்தி
நாளை மறுமையிலும் நற்பே நடைத்திறையின்
தோழமையில் அன்புத் திருவருளில் மூழ்கிவிடத்
தீர்மானம் செய்வதற்கும், தீன்வழியில் செல்வதற்கும்
ஓர்மைப் படுத்தும் உயர்வுடைய நன்னாளே!
உங்களுக்குச் சங்கை செய்ய ஊழத்து வானொலியார்
இன்று நடாத்தும் இவ்வினிய பாவரங்கை
கேட்டுச் சுவைத்து கிருபை மிகவடைய
நாட்டமுள்ள நேயர்களே, அஸ்ஸலாமு அலைக்கும்!
நபித்துவம் பற்றி, நுபுவத் எனுந்தலைப்பில்
கவிஞர் எம்.எல்.எம். நதிஸ் அவர்கள் பாமாரி
பெய்வார், அதையடுத்து தீங்கவிதை கலைவாதி கலீல்
என்னும் பாவாணர், ஹிஜ்ரத்தை பற்றியிங்கு
பொழிவார் கவிமாரி புளகம் மிகவவைார்
அவைவேந்தர் யூசுப் அழகு தமிழக்கவிஞன்
தௌவத் எனும் தலைப்பில் தருமினிய கவியுணபீர்

அதையடுத்து நம்கவிஞர் எம்.எச்.எம். புகாரியிங்கு
இதமான மொழியாலே எம்பெருமான் வபாத் பற்றி
சுவையான கவிபாடி, நமை உருகச் செய்திடுவார்.
ஆல நபிகள் அழகிய முன்மாதிரியை
வாழும் தமிழில் வடித்தளிக்கப் போகின்ற
பாவாணர் பாவில் பரவசமாய் ஆகுவமே!
இவ்வரம்பில் தலைமை இன்றுகின்ற நான் முதலில்
வள்ளல் நபியின் மீலாத் மகிமைபற்றி
சொல்லுகின்றேன் செவிசாய்த்து செவிமடுக்க
வேண்டுகிறேன்!

யானைப் படை நடாத்தி, அல்லாஹ் திருவீட்டை
தானழிக்க அப்ரஹா தானை நடத்திவந்து
அல்லாஹ் ஏவும் அபாபீல் பறவைகள்
கல்மாரி பெய்ததனால் கூண்டோடழிவுற்ற
ஆமுல் பீல் என்றழைக்கும் ஆனை வருடத்தில்
ஆமினா என்னும் அருங்குணத்து தாமரசின்
சூலத்தை நீத்துச் செகத்தில் அவதரித்தார்
பாலமுதம் என்ன படரும் நிழலென்ன
கோல அழகு சொக்கும் கொஞ்சும் திருவென்ன
நோய்க்கு மருந்தென்ன நொய்மைக்கு உணவென்ன
தீர்க்கும் குலத்தாரின் நலமளிக்கும் ஞானமென்ன
தன்மதியால் அன்புத் திருவாய் அருட்கொடையாய்
மண்மீது வந்துதித்தார் முகம்மத்(ஸல்).
ஆண்டாண்டு தோறும் அணையாது நெய்பூத்து
வேண்டும் அளவும் விளகாட்டிக் காபிர்கள்
தன்னுள் வார்த்த பெருநெருப்பு நூர்ந்தழிய
என்றில்லா விக்கிரக தெய்வங்கள் குப்புற வீழ்ந்து

உடைந்தழிய காபிர்கள் நெஞ்சமெலாம்
மாய்ந்து கவலையிலே மூழ்கிக் கிடந்தனவாம்.
ஆதம் நபிமுதலாய் அல்லாஹ்வின் தூதர்கள்
போதனை செய்த பெருமைமிகு தீன்பயிர்
காதகரால் மாசுற்று காசினியில் கண்சிந்தி
ஆதாரம் இன்றி அலைக்கழிந்த மக்கள்
மடைமையில் மூழ்கி மறமாக்க சொன்ன
கிடந்துழந்த கீழ்மைக் குணத்துக்குழுவே
வையகத்தை நாசத்திலே வீழ்த்திய வேளையிலே
பொய்யும் புரட்டும் கோலோச்சி நிற்கையிலே
அப்துல்லா தந்தை குணநீதிக் குலக்கோமான்
செப்பரிய கய்யுடையே செல்வியாம் ஆமினா
ஆயதவத்தோர் இயற்றிய இல்லறத்தின்
தூயநற் பேறாகப் பூவிற் பிறந்தார்கள்.
நீதியாய் அனாதியாய் அகவெடுத்துச் செல்லச்செய்யும்
சோதியாய் மெய்யாலத் துலங்கும் இறையோனின்
தூதை உலகோர்க்குச் சொல்லி நிறைவு செய்ய
வேத நபியாய் வந்த பெருமானே
எல்லா நபிகளுக்கும் ஏற்றமிகு நாயகராய்
எல்லாப் படைப்பினுக்கும் முந்திய அருட்பேறாய்
வானோர் பணிந்திறைஞ்சும் வக்குடைய கோமானாய்
ஞானத் திருவூற்றும் நல்வழியாய் நற்பேறும்
அல்லாஹ் படைத்த அருள்ஜோதி ஆமுல் பீல்
வல்லமை கொண்ட றபீஉல் அவ்வலாம்
மாதம் பன்னிரண்டாம் நாளிலேநல்லோர்கள்
ஏதமின்றிக் களிக்கூர ஏந்தல் பெருமானே
ஆரணம் கடலே அகுமது நபிகள்கோனை
பூரணன் அளித்தான் புவி

அன்பு மறைதிறந்து பூவெல்லாம் மாய்ந்ததுவே
இன்பம் கொடிகட்டி எங்கும் பறந்ததுவே.
ஞானம் காலத்தே நல்லாட்சி செய்ததுவே
கானம் இசைத்து களித்தது இன்பயிர்
எங்கும் இறைநாமம் எங்கும் இறைவேதம்
பொங்கிப் பரந்து பவியெல்லாம் தந்ததுவே.
பொல்லா மடமை போக்கற்றுப் போனதுவே
பொல்லாக் குபிரும் புறமிட்டுச் சென்றதுவே
அல்லாஹ் திருவருளை அகிலம் அணைத்ததுவே
வல்ல இசுலாமிய வாழ்வுநெறி மக்களினை
ஆரத் தழுவி அவர் வாழ்வைப் பாலித்து
சீரான சாந்தி சமாதானம் நல்வாழ்வு
சோதரத் தன்மை சுதந்திரம் நல்லிணக்கம்
ஆதாரமாகி அகிலம் சிறந்ததுவே!
வள்ளல் நபிகள் அவதாரம் நற்பேறு
எல்லோர்க்கும் தந்த திதாம்.

# தமிழ் தாந்த புலவர்மணி

கண்படு தென்னை கவின்படு நெல்வயல்கள
தேண்படு சோலைச் செறிவளமும் - மீன்படு
வாவி குளமும் வளைந்தோடு மூங்கிலாறும்
பூவில் சிறந்த பதி.

வாளை குதிக்க வரிவரால் துள்ளிவிழக்
கோலம்செய் வாவி குளிர்விக்க - வேல்முருகன்
வள்ளிதெய் வானையுடன் வீற்றிருக்கும் மேன்மையதாய்
உள்ளங் கவர்ந்தோங்கும் ஊர்.

மயிலாடு ஈகனும் மலராடு தோப்பும்
ஒயிலாடு மானும் உலாவ - வயலாடு
நெற்கதிர்கள் சாய்ந்து நிலமகளை முத்தமிடும்
பொற்பதிக்கு மண்டூர் பெயர்.

பரந்துபடு மேய்ச்சல் பசுவெருமை மந்தை
நிறைந்துவளம் பூணும் நிலமாய் - சிறந்தழகு
சிந்தப் படுவானின் சீர்தலமாய் ஓங்குபுகழ்
வாய்ந்தோங்கு தில்லைவளர் மண்டூர்.

திருச்செந் தூரர்ப்புராணத் தெய்வீகப் பாவமுதப்
பாரா யணத்தால் பயஙகாணும் - ஆராமை
மிக்கூரும் மக்களை மேதினியில் கண்டபுகழ்
மிக்கூரும் மண்டூரின் மண்.
மண்டூரோம் நற்பதியில் மேன்மைகொள் நற்குடியில்

வண்ணக்கர் சொமநாதர் மைந்தனே - என்னம்
திருவார்ந்த ஏகாம் பரப்பிள்ளை தந்தை
அருமை மகனென் றறி.

பந்தாவுக் கேற்ற பதிவிரதை: வண்ணக்கர்
சித்தம் இனிய சிதம்பரப் பிள்ளையவர்
அன்பில் கலந்த அழகசின்னத் தங்கத்தை
அன்னையாப் பெற்றான் அவன்.

பிடியோடு களிறாடப் பணையொடு கலையோடிப்
பிணைந்தாடு காத லாடப்
பறந்தோடு செம்மஞ்சள் பூவாடு கான்சேவல்
பெடையோடு சரச மாடப்
படையோடு வெண்நாரை பவளக்கால் சிறுகீச்சான்
பயிலினிய கலவி யாட
பசுமேனிக் கிள்ளைகளும் பண்ணினிய நாகணவாய்ப்
பாட்டமும் மைய லாடப்
கொடியாடு பொன்னாகக் குலையாடு பொற்கொன்றைக்
கலையாடு காவு மான்
கனியாடு மண்டூரின் காளைஏ காம்பரப்
பிள்ளைமயல் தானுமாடிப்
பிடியிடைப் பொன்முலலைப் பூசின்னத் தங்கமகள்
பொற்புடன் புலவியாடிப்
பெருகதிர் மதியமெனப் பெரெழிற் பெரியதம்பி
பிள்ளையமு தீன்றார் பூவே!

பண்டூரோம் மண்டூரின் வெஸ்லிமிஷன் பள்ளியிலே
கண்டாக ஆரம்பக் கல்வியினை - நன்றாகக்

கற்றபின் ஆங்கிலத்தில் கல்முனையில் கற்கமனம்
பெற்றிருந்தும் கூடாதே போயிற்று.

கனக இரத்தினம் நற்தம்பாப் பிள்ளை
கனியாத சிற்றிழமைக் காலத்தே - இனிதாக
ஊட்டிய ஆரம்பக் கல்விக்கு நன்றியினைச்
சாற்றினான் சால்புதானைச் சாற்று.

புலோலியூர் சந்திர சேகரப் பேர்கொள்
பொலிதமிழ் ஆனதோர் சான்றோன் - நலந்தர
வந்தார் தமிழை மகிழ்வுடன் மண்டூரில
தந்தார் மகிழ்ந்தார் தான்.

சொல்வார்த்தை சித்தித் திறனுடைய தந்தையார்
செல்லமாய்ச் சொன்ன சிறுவார்த்தை - வல்வினையாய்
வந்தேற அன்னை வரித்தாள் சிவபதந்தான்
சிந்தை குலைந்தார் செகம்.

சிந்தை குலைந்து செயலற்றுக் குடும்பம்
நொந்து நிலைமறந்து நின்றதால் - வந்தமிர்த
சந்திர சேகர வாத்தியார் பாடமதும்
அந்தரத்தில் நின்றொழிந்த தாங்கு.

ஊரிலே தமிழ்க்கல்வி உற்றிடையில் நின்றொழிய
பேரினிய ஆங்கிலம் கல்முனையில் - சீர்பெருக
பெற்றுயர்ந்த வேளையிலே பொல்லாங்காய் வந்தநோய்
பற்றித் தடுத்ததே பார்.

வர்த்தக நோக்கமாய் வந்து கலந்திருந்த
சீர்மனத்தான் தம்பிமுத்துப் பிள்ளையெனப் - பேரினியன்
மட்டுவில் வாழ்மகா லிங்க சிவத்திடம்
இட்டனன் வாழ்வு இனிக்க.

நாவலர் சைவப் பிரகாச வித்தியா
காவியப் பாடக் கழகத்தில் - ஆவலுடன்
காவியமும் சிற்றேடும் கண்ணாம் இலக்கணமும்
மேவிப் படித்திட்டார் மேல்.

ஆரா அமுதம் அழகு தமிழினிய
சீரான் குமார சுவாமியெனப் - பேரினிய
வல்ல புலவர் மடியில் தவழ்ந்துதமிழ்
வல்லாமை கண்டுயர்ந்தார் வாழ்வில்.

சூடா மணியும திருச்செந்தூர்ப் பேர்புராணம்
பாடமும் பாரதப் பாக்கியமும் - கூடியதால்
தன்வீட்டுக் கூடத்துத் திண்ணையமர் பள்ளியிலே
உன்னிப் படித்தார் உவந்து.
பண்டிதன் செந்தமிழின் பாவலன் விஞ்ஞானக்
கண்டின் சுவைகண்ட கல்விமான் - என்டிசையும்
போற்றும் மயில்வா கனனாரின் பார்வைநலம்
ஏற்றார் நிறைந்தார் உளம்.

காவியப் பாடசா லையிலே கற்கையிலே
பாவிகமாய் நட்புப் பலிதமாகி - பூவில்
கணபதிப் பிள்ளையுடன் அன்பை இறுதிவரை
பேணினான் பேர்தன்னைப் பேசு.

யோகர் சுவாமிகளின் ள்ளத்தில் பள்ளிகொளும்
போகம் அடையும் பெருமையதும் - யாகம்
புரிந்தோர்கள் தாமம் பெறமுடியாப் பேறு
வரித்தார் அடைந்தார் வளம்.

யாழ்ப்பாண மண்ணில் புரையேடிப் போயிருந்த
பாழான சாதிப் பரவணியை - ஆழ்ந்துமனம்
போராடித் தோற்றுப் பிரிவோதா யேசுவழி
சீரேற்றார் உள்ளம் திளைத்து.

தென்னாட்டில் வேதத்தை ஓதப் பசுமலை
என்னூரில் உள்ளதாம் கல்லூரி - சென்றடைந்து
ஈராண்டுக் கற்கை இயன்றங் கிருக்கையிலும்
போராட்டம் வந்ததப் போது.

அன்புவழி ஓதும் இயேசு மதத்தாரும்
துன்பாமாம் சாதிமுறைத் தீட்டுக்கும் - அன்பராய்
உள்ளதும் மேலை இசையில் தமிழ்ப்பாடல்
சொல்லலும் எதிர்த்தார் துணிந்து.

சுதந்திரத் தாகச் சுடர்பொங்கும் வேளை
அதிசேவை செய்த மிஷனரிகள் - ஏகாதி
பத்தியத்தின் சார்பில் பரிவுமிகக் கொண்டதனால்
உத்தமர் நொந்தார் உளம்.

கதிரேசன் செட்டியார் என்று தமிழகத்து
மேதைகள் நட்பு மிகவாய்ந்து - மேதகமை
தானும் அடைந்து தமிழ்நாட்டில் நந்தமிழாம்
தேனைச் சொரிந்தார் தினம்

கண்டார் மதுரையில் காணரிய தேனமுதக்
கண்டாம் விபுலானந் தககாந்த - சக்தியினை
வேண்டாமே அந்நியம தான வழியென்று
பூண்டார்நற் சைவநெறி பூரித்து.

திருமலையில் மட்டுத் திருநகரில் உள்ளப்
பரிவுடன் ஆசிரியப் பணியில் - சிறந்தார்
வளர்த்தார் தமிழை: ஒழுக்கத்தை: கற்றார்
எழுப்பம் அடைந்தார் இகம்.

மும்மணிக் கோவையெழில்மண்டூர் முருகனுக்கு
எம்மா அழகாய் அளித்திட்டார் - செம்மையுற
மண்டூர்ப் பதிகம் மனக்கினிய செந்தமிழில்
கண்டூரத் தந்தார் கலை.

சண்ணின் கீதை கனிந்தோடு நல்லமுதை
உணண முடிந்த அளவுக்கு - உண்டயர்ந்து
உள்ளம் உணர்வு உயிருனில் தேக்கியருள்
வெள்ளத்தில் தோய்ந்தகவி வேந்து.

கீதை அருள்வாக்குக் கோவையினைத் தேனினிய
சீதத் தமிழில் சிறைப்பிடித்து - வேதத்தின்
நாதத்தை நற்பொருளை நான்கடியாம் வெண்பாவில்
ஓதக் கொடுத்தான் உலகு.

முத்தமிழ் வித்தக மேன்மை விபுலானந்தச்
சத்தியப் பாற்கடலில் தோய்ந்தெழுந்து - வித்தாண்மை
தானாகித் தமிழை: தமிழினிய பாவகையைத்
தேனாகத் தந்தானைத் துதி!

சுன்னாகம் தந்தசீர் செந்தமிழின் பேர்புலவன்
அண்ணல் குமார சுவாமியது - பண்ணையிலே
வார்ப்படம் ஆனானை: வண்ணமெனப் பாசெய்து
பேர்ப்பட நின்றானைப் பேசு!

குருக்கள் மடத்துக் குலவுதமிழ்க் கோதைநற்
பேரினிய நல்லம்மா பேரழகை - ஆர
மணவினை செய்து மகிழ்ந்துநன் மக்கள்
குணங்களைப் பெற்றளித்த கோ!

கற்பதற் கென்றமைந்த கல்வியெலாம் கற்றாலும்
பத்திரங்கள் என்றெதுவும் கைவசத்தில் - உற்றேறும்
வாய்ப்புகள் கால வசத்தால் இடைந்தாலும்
மாய்த்தெல்லாம் வென்றாரிம் மண்.

திருமலை மக்கள் காந்தி மகானை
ஒருமனதாய் ஒன்றிமகிழ் வுற்று - வரவேற்பு
தந்த அமையம்தகுமொரு வாழ்த்துமடல்
தந்த மகானைத் துதி.

புலவர்க்கு வெணிபாப் புலியென்று சொன்னார்
புலவர் மணிபெரிய தம்பி - உலகில்
வருவார் வளம்மிக்க வெண்பாவால் வேதம்
தருவாரென் றெண்ணாத தால்.

# வீரம் செறிந்த பலஸ்தீனப் போர் மறவீர்!

உங்களுக்கென்
ஈரம் கசியும் இதயமலர் தூவுகிறேன்.
பள்ளிப் படையெழுப்பும
பழங்கதையை மீட்டுமிங்கு
நவீனப் படுத்துதற்கு நண்பரீர் தூண்டுகிறீர்.
ஆதலினால் என்னிதய அஞ்சலியை உங்களுக்குக்
காதல் மிகவாரக் கவிமொழியில் செப்புகிறேன்.
கல்லைப் போழிந்து கலைவடிக்கும் சிற்பியாய்
நான்மாற வேண்டுமெனும் நமைச்சலை ஊட்டுகிறீர்
உலக மனச் சாட்சியெனும்
ஒய்யார மெய்யரங்கில்
நடுகற்கள் உங்களுக்கு
நாட்ட உளம் துாடிக்கிறதே!

பலஸ்தீனம் என்கின்ற பிறப்புரிமைப் பூமியிலே
வீதிகளில் அலங்கிருதம் வழிந்தோட வலம் வந்தீர்
காதல் சிருங்காரம் களியின்பம் வீடுகளில்
பாவிகம் என்னப் பரக்கக் களித்திருந்தீர்.

உங்கள் மதலைகளின்
ஒய்யாரத் தேன்மழையாம்
சங்கீத அமுதத்தில் தலைகவிழ்ந்து குயிலினங்கள்
பங்கப் படுவதனைப் பார்த்து ரசிததிருந்தீர்.
ஒலிவ மரநிழல் ஒருங்களித்து தேன்சிந்தும்
திராட்சைப் பழங்களினைச் சுவைத்து மகிழ்ந்திருந்தீர்.

இன்றந்தப் பெருவாழ்வு ஏன்மறுக்கப் பட்டதுவோ!
மீண்டுமவ் வாழ்வை மீட்டெடுக்கத் துடிக்கின்ற
நண்பரீர் உங்களுக்கென் நல்வாழ்த்தைக் கூறுகிறேன்.

2

யூதரும் நீங்களும் ஒருவயிற்றுச் சேய்கள்தாம்
அண்ணனின் மக்கள் அவர்கள
நீங்களே தம்பியின் தனையர்கள்
உங்களது மண்ணில்
உடனிருந்து வாழ்ந்தீர்கள்.
மத்திய காலத்தின் மாபெரிய வல்லரசாய்
குற்றம் புரிந்த ரோமர்கள்
யூதர்களை ஓட உதைத்தார்கள்
உலகெங்கும் கலைத்தார்கள்.
வளமான நாடுகட்கு வலிந்துசென்று குடியமர்ந்தார்.
வட்டிக் கடைநடாத்தி
உலகத்தின் சேட்டுகளாய் ஆனார்கள்.
மேற்குலகின் அறிவியலால் மேன்மை அடைந்தார்கள்.
போயமர்ந்த நாடுகளைத் தாயகமாய்க் கொண்டாடி
ஆய பயனெல்லாம் அங்கு அடைந்தார்கள்.

காட்டு அரபிகளாய்க் காலங் கழித்த
உங்களின் வாழ்க்கையின் திருப்பமாய் அமைந்த
இஸ்லாத்தை: எஞ்சியிருந்த யூதச்சகோதரர்கள்
ஏற்க மறுத்தார்கள்.
வஞ்சனைகள் உங்களுக்கு வழங்கும் திருப்பணியில்
நெஞ்சம் மகிழ்ந்தார்கள்: நீங்களோ அவர்பால்
சகிப்புத்தனம் காட்டிச்
சரித்திரம் படைத்தீர்கள்.

3

காலம் உலகில் கிறுக்கிவைத்த கோலமென
துருக்கியப் பேரரசின் நுகத்தடியில் உழன்றீர்கள்
முதலாம் உலகப்போர் முடியும் வரையும்
உங்கள் தலையெழுத்தைத்
துருக்கியரே வரைந்தார்கள்.

அடிமைத்தளை தானெனினும்
அன்னை பலஸ்தீனின்
மடியே மலர்மஞ்சம் என்று மகிழ்ந்தீர்கள்.
எங்கோ கிடைக்கின்ற இனிய சுகத்துக்காய்,
ஏற்றமிகு வாழ்க்கைக்காய்,
ஓடோடிச் சென்ற யூதரைப் போலன்றி,
பாலைவனந்தான் பாசையற்ற கொதிமணல்தான்
முந்தையோர் வாழ்ந்து முடிந்ததும் இங்கேதான்
வரப்போகும் சந்ததியின்
வாழ்க்கையும் இங்கேதான்
எங்களுக்கு எல்லாம் எங்களது தாயகம்தான்
என்றுங்கள் தாய்மடியில் உறங்கிக் கிடந்தீர்கள்.
போர்முடிந்த பின்னர் பரம பிதாக்களெனச்
சீர்நல்க வந்தார்கள் ஆங்கிலத் துரைமார்கள்.
போன இடமெல்லாம் பொல்லாத்தனம் புரியும்
ஈனப் பிறவிகளாம்
இங்கிலாந்து ஓநாய்கள்
சாத்தான்கள் வேதம் ஓதம் சரித்திரத்தை
மீட்டுப் புதுப்பித்தன்
ஸியோனிஸச் சாத்தான்களின்
முதுகைத் தட்டிக் கொடுத்து

வேதம் ஓதுமென வேண்டுதல் கொடுத்தார்கள்
வேத காலத்து உங்களது தாயகம்
ஆன பலஸ்தீனை, அன்பளிப்போம் என்றார்கள்.
பெல்பேர் என்ற ஆங்கில யூதன்
பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சனாய்
இருந்த காலை, உலக யூதர்க்குப்
பலஸ்தீனமே தாயகம் என்று அறிக்கை செய்தான்.
அன்று முதலாக ஐரோப்பிய யூதர்கள்
பலஸ்தீனில் குடியேறப் பாதை திறக்கப்பட்டது.

எங்கெங்கு யூதர்கள் வாழ்ந்தனரோ அங்கெல்லாம்
மக்களைச் சுரண்டி வயிறு கொழுப்பதையும்.
ஈனத் தனங்கள் இடையின்றிச் செய்வதையும்
நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிப்பதையும்
கழுத்தறுப்புச் செய்வதையும் மரபாகக் கொண்டதனால்
அந்நாட்டு மக்களின் வெறுப்புக்கு ஆளானர்.
குடியிருந்த நாடுகளில்
மக்களின் நெருப்புப் பார்வைக்கு இலக்காகி
சாரிசாரியென பலஸ்தீனம் வந்தார்கள்.
பலஸ்தீன மக்களின் எதிர்ப்பை நசுக்குதற்கு
இரண்டாம் உலகப் போர்முனையில்
போரிட்டவர்களும் அவர்தம் மனைமக்களும்
முதலில் குடியமர்த்தப்பட்டார்கள்.

4

இரண்டாம் உலகப் போர் முடிந்த சுட்டோடு
போரொழிந்த உலகைப் படைக்கும் நெறிகாண
வெள்ளைப் புறாக்களை கைகளில் ஏந்தியவண்ணம
ஐ.நா என்கின்ற அலங்கார மன்றத்தை
ஆக்கி மகிழ்ந்தார்கள் உலகப்பெருந்தலைகள்.
'வீட்டோ' பவர் வாய்ந்த வல்லரசுகள் முதலில்
உலக அமைதிக்கும்: மக்களின் உரிமைகட்கும்
உத்தரவாதம் நல்கவந்த உலகமன்றத்தார்
பலஸ்தீனை யூதர்க்கு தானம் எனத்தீர்மானம் இயற்றி
நவீன வள்ளல்களாய் நெஞ்சு நிமிர்ந்தார்கள்.

நீதியின் துகிலுரித்தார்: தருமத்தைக் கற்பழித்தார்
மனச்சாட்சியை விற்று மாமேதையானார்கள்.
அழித்தெழுத முடியாத பிறப்புரிமையின் பாற்பட்டு,
வாழையடி வாழையென வாழ்ந்த குடும்பத்தின்
சொந்த வீட்டைப் பறித்துக்கொடுதத
படுபாதகச் செயலை
உலகத்தைக் காக்கவந்த
உத்தமர்கள் செய்தார்கள்

# மருதமுனைக் கீதம்

**தாளம் - ஆதி இராகம் - சங்கராபரணம்**

**பல்லவி**

மக்கம் தவறின் மருதமுனை - அதன்
மாண்பினுக் குலகில் இல்லை இணை

**அனுபல்லவி**

தக்கார் எவரும் புகழ்ந்துரைக்கப் - புகழ்
மிக்காள் ஆகி இம் மேதினி திகழ்

**சரணங்கள**

வங்கக் கடல் அலைகள்
கொஞ்ச உடல் சிலிர்த்து
விஞ்சும் எழில் படைத்து
நெஞ்சம் மகிழும் உயர் (மக்கம்)

மேற்கில் உவர் களப்பில்
மிதக்கும இளைய தென்றல்

தாகக உடல் பசலை
தாங்கி நிமிரு முயர் (மக்கம்)

செந்நெல் விளை நிலத்துச்
செல்வம் இலா இடத்தும்
எண்ணிப் பல தொழில்கள்
இயற்றித் தலை நிமிரும (மக்கம்)

பாவும் தறியும் எனப்
பருத்தித் துணி படைக்கும்
பாட்டாளிமார் நிறைந்த
பஞ்சம் இல்லாத எழில் (மக்கம்)

கல்வி வளம் பெருக்கிக்
கலைகள் மிக வளர்த்து
நல்ல குண நலங்கள்
நகையாய் அணியுமுயர் (மக்கம்)

அண்டை அயலி லொரு
மொழியால் இணையும் தமிழ்
நண்பர் உறவு முறை
கொண்டே உலகிலுயர் (மக்கம்)

# மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் பாடசாலை கீதம்

*அருள் மழை பொழிவாய் அருள் மழை பொழிவாய்*
*அருள் மழை பொழிவாயே*
*கருணையின் கடலே காத்திடுமிறையே*
*எமக்கருள் புரிவாயே!*

*மலிபுகழ் மருதமுனை திகழ் ஷம்ஸுயர்*
*மத்திய கல்லூரி*
*பல்வளம் பெற்றுப் பாங்குடன் கல்வி*
*பணிபுரின் தொழிர்தரவே*
*நினதருட் கருணை மழையெமில் வார்ந்து*
*நீழ் புவி நாம் மகிழ*
*உனைப் பணிந்துளமே உருகிட இரந்தோம்*
*எமக்கருள் புரிவாயே!*

*அலையெறி கடல் மிசை உலவி: கலமென*
*அறிவெனும் ஆழியில் நாம்*
*இலகுடன் தவழ்ந்தே இருளையும் உயர்வுற*
*ஏற்றமதாம் நெறிகள்*
*கலை விஞ்ஞானம் தொழில் மறை*
*மொழி பல பயின்றிடும் மாணவர் நாம்*
*புலர் பொழிதெனவே புவிமிசை ஒளிரப்*
*பெருவரம் தருவாயே!*

*அறிவினில் உயர்ந்த ஆசிரியர்கள்*
*அதிபர் முதுகுரவர்*
*திருவுளம் மகிழப் பணிவுடன் பயிலப்*
*பரம்பொருளே அருள்வாய்*
*எமதனை தந்தையர் எமையின் பொழுதின்*
*ஏற்றமுடன் மகிழ*
*நிமலா நினதருள் எனுமமுதூட்டி*
*ந்ககமற அருள்வாய்!*

# விண்புகழ் கொண்ட தமிழ்

***பல்லவி***
*எங்கள் தமிழ்மொழி - எங்கள் தமிழ்மொழி*
*என்றிசை பாடிடுவோம் - இன்பம்*
*பொங்கவே பாடிடுவோம்*

***அனுபல்லவி***
*பால்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு என்றே*
*வெல்லத் தமிழ் படிப்போம் - நாம்*
*உள்ள மடை திறப்போம்*

***சரணம்***
*பாண்டியன் தென்கடல் நீந்தி மகிழ்ந்தவன்*
*பாங்குடன் சேரனின் மலையில் தவழ்ந்தவள்*
*மாண்புடன் சோழனின் காவிரி ஆடி*
*விண்புகழ் கொண்டவளே*

*கம்பனின் நாவில் களிநட மாடி*
*காவியச் சிலம்பில் கலை வளங் கூடி*
*உம்பரும் போற்றிடும் வள்ளுவன் குறளால்*
*உலகினை வென்றவளே*
*மண்ணில் உயர் புகழ் கொண்டவளே*

*வண்டமிழ்ச் சீறா தேனினைப் பருகி*
*வளமார் தேம்பா வணியினில் மூழ்கி*
*மண்டிணி உலகின் மதத்தின ரெல்லாம்*
*மகிழ்ந்து வளர்ந்தவளே*
*மண்ணில் மழையென வந்தவளே*

*பாரதி செய்த புதுமையில் விளைந்து*
*பண்புடன் புதுமைப் பித்தனில் மலர்ந்து*
*நூறாயிரம் நூறாயிரம் கலைஞர்*
*ஊணர்வில் கலந்தவளே - எங்கள்*
*ஊயிரென வந்தவளே*

# இசைப் பாடல்கள்

1.

**இராகம் : கல்யாணி தாளம் : ஆதி**

**<u>பல்லவி</u>**

வாள்வில் வசந்தம் பொலியட்டுமே - இன்பம்
வளநதி போலவே பெருகட்டுமே - நம்
வாள்வில் வசந்தம் பொலியட்டுமே.

**<u>அனுபல்லவி</u>**

சிங்களர் தமிழர் சோனகர் பறங்கியர்
செப்பிடும் நாலினம் சேர்ந்தவர் யாவரும்
சூழ்ந்திடும் அன்பினில் தாய்த்திரு நாட்டின் கண்
சேய்களெல்லாம் மூழ்கித் திளைத்திடவே

மங்களம் பொங்கிடும் இலங்கை நன் நாட்டினில்
மக்கள் எனும் உயர் மாண்பு சிறக்கவே. (வாழ்வில்)

காடு களைந்தவர் கழனி விளைந்தவர்
கலை வளம் செய்தவர் தொழில் வளம் கண்டவர்
நாடுகள் விளைத்தோழ்ல் நகரங்கள் படைத்தவர்
நான்கின மக்களும் தானதலானவர் (வாழ்வில்)

வாழ்ந்திடு சோதரர் வாழ வழி விடு
வானவர் ஆக நீ வாம்வில் சிறந்திடு
சூழ்ந்திடும் மேன்மைகள் எல்லோரும் வாழ்ந்திட
சிந்தையில் இருத்தியே வாழ்வோமே சிறந்திட (வாழ்வில்)

# 2 ஒற்றுமை

*நிலையான இன்ப கீதமே வா...வா...*
*நிலமீது அன்பு பூக்கவா*

*பகை வந்து ஆட்டும் நாவில்*
*படு பாவம் வாட்டும் போதில்*
*மண்ணில் ரத்தம் பொங்கிப் பாயும்*
*புன்மை தாளம் தட்டிப் பாடும் (நிலையான)*

*குழல் கொண்ட பிட்டில் தேங்காய்ப்பூத் தூவி*
*மா சேர்ந்த மேனிலை நாமும் கூடினோம்*
*தாய் பெற்ற மக்கள் போல மகிழ்ந்தாடினோம்*
*இன்றே அவ்வாழ்வை எண்ணி*
*நெஞ்சம் தினம் ஏங்கினோம் (நிலையான)*

*பிரித்தாளும் சூழ்ச்சி பொறிபட்ட மான்கள்*
*கூட்டமாய் நாங்கள் ஏங்கி வாழ்கிறோம்*
*மதியோடு வந்த சாபநிலை நீக்குவோம்*
*பாழும் பகமை நோய் நீங்க*
*அன்பு நிலை நாட்டுவோம் (நிலையான)*

# வெண்ணிலவே

வெண்ணிலவே வெண்ணிலவே
வெண்ணிலவே விண்ணெழுவாய்...

குடைவிரி விசும்பும் பொய்கையிலே
இடையிடை தாழ்ந்தெழும் மாமதியே
மடையுடைந்தொழுகும் தேனினைப்போல் நீ
பரவசம் தருவாயே (வெண்ணிலவே)

பாரினி லெங்கும் பால்பொழிந்து
கார்முகில் முன்னே நீதவழ்ந்து
பாரினி லெங்கும் சேரிருள் நீக்கிப்
பரவசம் தருவாயே (வெண்ணிலவே)

விட்டுவிட்டு மின்னும் தாரகையின்
வட்டவடி வான நாயகியே
பட்டப்பக லேனின் காதலியே நீ
பரவசம. தருவாயே (வெண்ணிலவே)

எட்டிஎட்டி உன்னை ஆசையுடன்
தொட்டு அணைத்திடவே ஓடிவந்தால்
பட்டமென வேதான் ஓடுகிறயென்
பாங்கினில் வாராயோ.... (வெண்ணிலவே)

# தாய்த்திருநாடு

தாளம் - ஆதி

பல்லவி

உலகத்தில் இணையற்ற எழிலாணவள் - எம்மை
ஈன்றிட்ட இலங்கைநற் தாயானவள்

அனுபல்லவி

அலையேற்றும் கடலுடுத்த நகை சூடி உலகோரின்
அகமெல்லாம் பெருநிகறில் நோய்சேர்ந்தவள்
(உலகத்தில்)

சரணங்கள

பூரித்து மயலூட்டும் எழில் கொள்கை யான
பசும்போர்வை மலைநாட்டில் பாலோடை யென்ன
தேரோட்டம் பயில்கின்ற நீரோடு கங்கை
திருவாலே வளம் நாழும் சேர்கின்ற மங்கை
(உலகத்தில்)

மாணிக்கப் பரல்பூத்துச் சுடர்வீசும் மேனி
மலரோடு மயில்கூடி நடமாடும் கானில்
மானேடிக் கலைசெய்யத் திளைத்தாடும் யானை

மலராடிக் கருவண்டு இசை செய்யும் வானில்
(உலகத்தில்)

கதிர்முற்றித் தலைசாய்த்துச் சதிராடும் செந்நெல்
கனிவுற்று இறுமாந்து காற்றாடும் கன்னல்
குதிகொண்டு கயல்பாயும் குளமெங்கும் அன்னம்
குலை வாழை முதலாய் நற் கனிசிந்தும் மண்ணில்
(உலகத்தில்)

இளந்தென்றல் தலைவார இசைபாடு தெங்கும்
இளமாதர் கரம்பட்டுச் சுவையேறும் கொஞ்சம்
பழனங்கள் தமைச்சூழ பசுமேயும் காவும்
பார்மீது நிகரெங்கும் இலையென்றே கூறும்
(உலகத்தில்)

நானொரு பச்சைத் தமிழன் - இதை
உலகம் ஒலிக்க உரைத்து மகிழ்வேன்
சீனத்துக் கவிதைகள் செய்வேன் - அவை
செய்யும் விதிமுறை சீராய் விதிப்பேன்
ஹைகூவை அழகாய் அமைப்பேன் - அதன்
ஆழம் அகலம் ஆய்ந்தும் உரைப்பேன்
விமரிக்கை நன்றே படைப்பேன்- அதன்
விமரிசை யாவும் மெத்த உரைப்பேன்
புதிது படைப்பது காலத்தின் ஆணை - அதிலென்
பங்கை நிறைவுடன் செய்து நிமிர்வேன்
பண்டைய முன்னோர்கள் கனம்மிகவாக - செய்த
கதைகளை காதினால் கேட்டதும் உண்டு
மண்டையைப் போட்டதில் ஏன்மாய வேண்டும் - சாடை
மாடையாய் மினக்கெடல் வீண்பொழுதாகும்.
ஏனெனில் நான்பச்சைத் தமிழன் - இதை
என்றும் உரைத்து இன்பம் நுகர்வேன்.

மருதூர் கொத்தன்

Excellent Publication

ISBN:978-624-5513-57-4

9786245513574

COVER DESIGN - NAMAS SAWFI